# காவேரி

விய - புரட்டாசி



September
1946

As. 6




# பாம்பே ஸ்வீட் ஸ்டால்

**பெரியகடைத்தெரு — கும்பகோணம்**

அனேக பெரியோர்களால் புகழப்பட்டு
அத்தாக்ஷி பத்திரங்களும் பெற்றது

சுத்தமான நெய்யில் கைதேர்ந்தவர்களைக் கொண்டு, அனேகவிதமான மிட்டாய்கள் நாள்தோறும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**Pro. R. B. அனந்தராம் சேட்**

N. B:- **வனஸ்பதி வெஜிடபிள் நெய் மொத்த வியாபாரி.**




விஜயபுரம்

# கே. டி. ஆர்.

சரக்குகள்—பன்னீர், அரைக்கீரை, சந்தனுதி தைலங்கள், கிருஷ்ண அகர்பத்தி, ராஜா பற்பொடி — மணத்திற்கும் குணத்திற்கும் பெயர்போனவை — எங்கும் கிடைக்கும்

K·T·R

சந்தனுதி தைலம்




...SOLE DISTRIBUTORS...

GIRISON & Co...MADRAS

தென்னிந்தியாவிலுள்ள எல்லா ஊர்களிலும் எல்லா வியாபாரிகளிடத்திலும், வட இந்தியாவில் பம்பாய், கல்கத்தா, பூனு, குண்டூர் டிஸ்டிரிக்ட்டு முதலிய ஊர்களிலுள்ள எங்கள் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும். மற்றப் பாகங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

K. T. R. என்ற விலாஸ எழுத்துக்களை எழுத்துக்கெழுத்து — கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளுகிருேம் —


11 OCT 19

சங்கீத ஞானம் கரைபுரண்டு ஓடும் காலம் இது.

இளம் வித்வான்கள் அநேகர் தோன்றி, புகழடையப் பாடுபட்டுவரும் காலம்.

நவீன விளம்பர சாதனங்களைக்கொண்டு முன்னணிக்கு வர முயற்சிக்கும் காலம் இது.

ஆனால் வெற்றி என்பது சிலருக்கே கிட்டுகிறது. பழைய வித்வான்களையே திரும்பத்திரும்ப, கேட்டனுபவிக்க ஆசைப்படுகிறார்களேயொழிய புதிய வித்வான்களுக்குப்பேராதரவளிக்க ரஸிகர்கள் முன்வரவில்லை

ஏன்? இக்கலை கடினமானது. பூர்வ ஜன்ம வாஸனையும் நல்ல சிக்ஷையும், புத்தி கூர்மையுமிருந்தாலன்றி முதல்தர வித்வானாகப் பெயரெடுப்பது கடினம்.



இதை அநேகர் கண்கூடாகப் பார்த்திருக்கலாம்.

இசை ஒளி கும்பகோணம் **A. D. சுல்தான்**

ஓர் வாலிபர். வெகு சீக்கிரத்தில் அவர் முன்னணிக்கு வந்துவிட்டார். அவருக்கு மக்கள் எங்கும் அமோகமான வரவேற்பு அளிக்கிறார்கள். காரணம் அவரிடத்தில் மேலே குறிப்பிட்ட அம்சங்கள் அமைந்திருத்தல் என்பது சொல்லாமலே விளங்கும்.

இவர் கச்சேரிகளை கீழ்க்கண்ட இடங்களில் கேட்டு அனுபவிக்கலாம்.

| | |
|---|---|
| 20—9—46 | காயாமொழி திருச்செந்தூர் |
| 29—9—46 | காரைக்குடி |
| 4—10—46 | சென்னை |
| 19-10—46 | திருச்சி ரேடியோ |

# புடவைகள்

நூதன போட்டோ முறையில் தயாரிக்கப்பட்ட ஸ்க்ரீன்களால் அச்சிடப்பட்ட நவீனப் பட்டு புடவைகள்

அநேக வர்ணங்களிலும் பல அழகிய டிசைன்களிலும் 5, 6, 7, 8, 9 கெஜம் புடவைகள் கிடைக்கும்.

சகல ஆர்டர்களும் கவனிக்கப்படும்

தயாரிப்பவர்கள்:

**ஹிந்துஸ்தான் பேப்ரிக்ஸ்,**

**குடியாத்தம்.**



# விஞ்ஞான மேதை டாக்டர் பட்நகர்

கே. ஸ்ரீ.

**1912**ல் லாகூரில் ஒரு இளைஞர் தம் ஓட்டை சைக்கிளை வைத்துக் கொண்டு கல்லூரி மைதானத்தில் மற்ற இளைஞர்கள் வியக்கும்படி சண்டமாருதம் பொழிந்தார். வெறும் வாய் சவடால் அல்ல. தாம் விஞ்ஞானி, ஆனால் என்ன செய்வார் என்பதைப் பற்றியும் விஞ்ஞானத் துறையில் சாதிக்க வேண்டிய காரியங்களைப் பற்றியும் அளவளாவினார். அந்த இளைஞர் வேறு யாரும் இல்லை; அவர்தான் டாக்டர் சாந்தி ஸ்வருப பட்நகர்.

விளையும் பயிர் முளையிலே என்கிறார்கள், ஆனால் முளை பிரமாதமாக இருந்து பயிர் சாவியாவது கிட்டத்தட்ட உலகானுபவம். இதற்கு விதிவிலக்கு உள்ளதால்தான் பழமொழி நிலைத்துள்ளது, டாக்டர் பட்நகரும் அவ்வாறு ஒரு விதிவிலக்கே.

இந்தியாவிலும் விஞ்ஞானத் துறையில் ஏதோ நடக்கிறது என்று பிறநாட்டார் எண்ணுகிறார்கள் என்றால் அதற்கு டாக்டர் பட்நகர் ஓரளவுக்குக் காரணபூதர். இவருடைய பிரமாத பகற்கனாக்கள் போன்ற திட்டங்கள் தான் இன்று இந்தியா பூராவும் பல ஆராய்ச்சிக் கழகங்களின் ரூபத்தில் நிற்கின்றன. வருங்காலத்தில் பௌதிக ரசாயனத் துறையில் கற்றறிந்தவர்கள் ஆயிரக் கணக்கில் உண்டானால் அதுவும் இந்தக் கழகங்கள் மூலம் தான் ஏற்படும்,

நம் நாட்டில் சோம்பேறி வேதாந்தம் தலைக்கு மீறி இருப்பதால் தான் யார் எந்த நல்ல காரியம் செய்தாலும், அதற்கு வேண்டிய கௌரவம் உடனடியாகக் கிடைப்பதில்லை. ''பூ, இவ்வளவு தானா? பணம் இருந்தால் யார்தான் செய்யமாட்டார்கள்'' என்று சொல்வது வழக்கம். உண்மையில் ''பணம் இருந்தால்?'' என்பதைத் துலக்கியவர் டாக்டர் பட்நகர். அதை அவர் எப்படிச் செய்தார் என்று அவரையே கேளுங்கள்.

டாக்டர் பட்நகர் ஒரு பிரபல ரசாயன விஞ்ஞானி. அவர் காலத்தில் அந்தத் துறையில் சில அரிய விஷயங்களை ஆராய்ந்து

அந்தப் பலன்களை "பேடண்ட்" செய்திருந்தார். (பேடண்ட் என்பது புது விஷயக் கண்டுபிடிப்பைச் உரிமையுள்ளதாகச் செய்வதைக் குறிக்கும் சொல்.) பட்நகரின் "பேடண்ட்" விஷயங்களை அட்டாக் எண்ணெய்ச் சுரங்கம் உபயோகித்து, அதற்குப் பதில் **Royalty** என்னும் "விஷயதான ஈடு" கொடுத்தார்கள். அப்படிக் கிடைத்த பணம் 10 லக்ஷம் ரூபாய். இதைத் தம் பணம் என்று பாங்கியில் போடாமல் அதைச் சர்க்காருக்கு ஆராய்ச்சிக்கென்று நன்கொடையாக அளித்தார் டாக்டர் பட்நகர். பகுதியைக் கல்வி நிலயங்களுக்கும் கொடுத்தார்.

டாக்டரின் தாராள குணம் சர்க்காரின் மனதைக் கவர்ந்தது. அதன் பயனாகவே சர்க்கார் விஞ்ஞானத் தொழில் ஆராய்ச்சிக் கௌன்ஸில் ஏற்படுத்தப்பட்டது. டாக்டர் பட்நகரும் கல்லூரியில் வேலை பார்த்து, பிறகு ஆராய்ச்சித் துறையில் இருந்து, பின்னர் சர்க்கார் விஞ்ஞானக் கௌன்ஸிலின் டைரக்டர் ஆனார். 1941ஆம் வருஷம் முதலே அவர் தற்பொழுது உருவாகியுள்ள தேசிய ஆராய்ச்சி நிலயங்களை ஏற்படுத்துவதற்கென்று அப்பொழுதுள்ள பிரிட்டிஷ் சர்க்காரைத் தாறு போட்டார். இரண்டாவது மகாயுத்தம் வந்ததும் பல விஷயங்களுக்கு இந்திய ஆராய்ச்சியும் இந்தியாவில் உள்ள பொருள்களையே உபயோகப்படுத்துவதும் தேவை ஆயின. ஆகவே பட்நகரின் கனவு நனவாக ஆரம்பித்தது. அவர் முயற்சியின் காரணமாக இப்பொழுது இந்தியாவில் பதினொரு ஆராய்ச்சி நிலயங்கள் இருக்கின்றன. பௌதிகம், ரசாயனம். நிலக்கரி, கண்ணாடி, ரஸ்தா, கட்டிடங்கள், தோல், மின்சார—ரசாயனம், முதலியவைகளைக் குறித்து இந்த நிலயங்களில் இந்தியாவின் பலபாகங்களில் ஆராய்ச்சி நடக்கிறது.

டாக்டர் பட்நகருக்கு எடுத்த காரியத்தை நன்கு நடத்த வேண்டும் என்பது குறி. அவர் மூலம் கட்டப்பட்ட ஆராய்ச்சி நிலயங்களில் பெரிய இயந்திரம் முதல் சிறு ஆணி வரை அப்பழுக்கு இல்லாமல் இருக்கும். தவிர, கட்டிடம் கதவு முதலியவைகளில் ஒரு தூசு தும்பட்டை இருக்கக் கூடாது, ஆம்.

எடுத்த காரியத்தை நன்கு முடிக்கும் திறனும், நிர்வாக ஆற்றலும் உள்ளதால் தான் அவர் பண்டித நேருவின் அன்பிற்குப் பாத்திரமானவர். எனினும் அவரிடம் சாந்தமும், அன்பும் எப்பொழுதும் குடி கொண்டுள்ளன. யாரையும் அதிர்ந்து எதுவும் சொல்லமாட்டார்.

"எனக்கு இந்தியாவில் விஞ்ஞானத்தையும் தொழிலையும் ஊன்ற வைக்க வேண்டும் என்று ஆசை. நான் தொழில் டிபார்ட்மெண்டில் சம்பந்தப்படாவிட்டாலும், நான் தொழிலுக்கு அதிகம் சேவை செய்திருக்கிறேன்" என்றார் இவர் ஒரு பேட்டியில். இந்தியாவில் எண்ணெய் (பெட்ரோல் போன்றவை) சுத்தம் செய்யும் சாலைகளை ஏற்படுத்துவதில் பட்நகருக்குப் பெரும் பங்கு உண்டு.

டாக்டர் பட்நகர் லாகூரில் தயால்ஸிங் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்று பிறகு **FORMAN XIAN COLLAGE**-ல் பட்டம் பெற்றார், கல்வி புகட்டும் தொழிலில் சில காலம் அவர் இருந்ததால் மத்திய சர்க்காரின் கல்வி இலாகாவுக்குத் தகுந்த காரியதரிசியே.

இந்தியாவில் விஞ்ஞானத்தில் குழந்தை முதல் சிரத்தை உண்டாக்க வேண்டும். இதற்கு ஆங்கிலத்தில் உள்ளதுபோல் எளிய கவர்ச்சிகரமான முறையில் ஆயிரக்கணக்கான புஸ்தகங்கள் தாய் மொழியில் வெளிவர வேண்டும் என்கிறார் இவர்.

கிஸான்களும் விவசாயத்தில் ஆராய்ச்சியின் சாதனைகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது இவர் அவா. டில்லியில் பாலம் என்ற கிராமத்திற்குப் பக்கத்தில் ஒரு ஆராய்ச்சிப் பண்ணையையும், அதையொட்டி ஒரு சோதனைச் சாலையும் பள்ளிக்கூடமும் இவர் ஏற்படுத்தியிருக்கிறார். குடியானவர்கள் இவைகளைப் பயன்படுத்தி, பயிரில் உண்டாகும் நோய்களை எளியமுறையில் ஆராயத்தெரிந்து கொண்டு அவைகளைத் தடுத்து விளைச்சலை அதிகமாக்கத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது இவர் ஆசை. இதற்கு விவசாயி பிரமாதமாக விஞ்ஞானியாக இருக்கத் தேவை இல்லை. இந்தச் சோதனை நன்கு பயன்பட்டால் அதை அனுசரித்து இந்தியாவின் பல பாகங்களில் விவசாயச் சோதனைச் சாலைகளும் பண்ணைகளும் அமைக்கவேண்டும் என்பது இவர் திட்டம்.

இந்தியாவில் உள்ள ஆராய்ச்சி நிலயங்கள் வெறும் மியூஸியம் என்பது தவறு. தொழிலில் உள்ள பிரச்னைகளை, யுனிவர்ஸிடியில் உள்ள சாலைகள் ஆராய்கின்றன. தேசிய ஆராய்ச்சி நிலயங்களின் நிர்வாக போர்டில் பிரபல விஞ்ஞானிகளும் தொழிற் சம்பந்தப்பட்டவர்களும் அநேகர். எங்கள் நிலயங்கள் தினம் தினம் முதிரும் பிரச்னைகளைக்

கவனித்து ஆராய்ந்து கொடுத்து, பொது ஜனத் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கின்றன'' என்கிறார் டாக்டர் பட்நகர்.

டாக்டர் பட்நகர் பொதுஜனச் சார்பில் நன்கொடை வாங்குவதில் சமர்த்தர். ''முக்காலே மூன்று வீசம் பங்கு நான் தனிகர்களிடமிருந்து பணம் கறந்துதான் நிலையங்களைக் கட்டியிருக்கிறேன். வரும் சில வருஷங்களில் சுமார் 5000 மேதைகள் இந்தியாவில் இந்நிலையங்கள் மூலம் உண்டானால் அது நமக்கு நல்லதல்லவா?'' என்கிறார் இவர்.

''விஞ்ஞானிகளும் தொழில்துறை அதிபதிகளும் என் வேலையை மெச்சுகிறார்கள். தொழிற் சம்பந்தமான அலுவல்களை என்னிடம் ஒப்படைத்தால் நான் நம் நாட்டுத் தொழில்களில் புரட்சிகரமான மாறுதல்களை உண்டாக்கிவிடுவேன்'' என்றார் டாக்டர் பட்நகர் தொழிலில் விஞ்ஞானத்தைப் புகுத்த முடியுமா, என்பது குறித்து.

டாக்டர் பட்நகருக்கு இரண்டு பையன்களும் இரண்டு பெண்களும் இருக்கிறார்கள், மூத்தவர் விளம்பர இலாகாவில் வேலை பார்க்கிறார். மற்றவர் டாக்டருக்குப் படிக்கிறார். பட்நகரின் மனைவி எட்டு வருஷங்களுக்கு முன் இறந்துவிட்டார்.

அணு விஞ்ஞானம் குறித்து டாக்டர் பட்நகர் சொன்னார்: ''அணுகுண்டு தயாரிக்க நம்மிடம் பணமும் கிடையாது. அந்த உத்தேசமும் நம் சர்க்காருக்கு இல்லை. ஆனால் அணு சக்தி உண்டாக்க அதற்கு வேண்டிய உற்பத்திப் பொருள்கள் நம்மிடம் உள்ளன. அவைகளைக்கொண்டு நாம் சமாதான வழிகளில் அணு சக்தியை உபயோகிக்கக்கூடிய விஷயங்களில் ஈடுபடலாம். ஈடு படுவோம் என்றும் நம்புகிறேன்.''

பிரபல விஞ்ஞான மேதையான டாக்டர் போஸ் என்னிடம் ஒரு சமீப பேட்டியில் சொன்னார்: ''அரிது அரிது, ஆராய்ச்சி செய்தல். அதிலும் அரிது அதற்குவேண்டிய வசதி செய்துகொடுத்தல். டாக்டர் பட்நகர் இந்த விஷயத்தில் தீரர்தான்''. நான் டாக்டர் பட்நகரைச் சந்தித்தபொழுது கண் உபத்திரவம் காரணமாகப் படுக்கையில் இருந்தார். ''12 வருஷங்களில் நான் லீவே எடுத்ததில்லை; இதுதான் முதல் கட்டாய லீவு'' என்றார். ''கருமமே கண்ணாயினார்'' என்ற பழமொழிக்கு உதாரணம் டாக்டர் பட்நகர் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

''கேசரியின்'' மூன்று பிரசித்த மருந்துகள்

★ லோத்ரா ★

கர்ப்பாசய ரோக நிவாரணி

சங்காதோஷம், கீல் வாயு, தூக்கமின்மை, அஜீரணம், மலச்சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி, முதலியவற்றைக் குணப்படுத்தும்.

அம்ருதா

ரத்த சுத்தி டானிக்

ரத்தசோகை, அஜீரணம், மலச்சிக்கல், மந்தமான மூளை, பலவீனம், படபடப்பு, ஞாபகமின்மை தெளிவற்ற கண்பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலியவற்றைக் குணப்படுத்தும்.

★ அர்க்கா ★

சிறந்த ஜ்வர நிவாரணி

இன்புளுயன்ஸா, டைபாய்ட், மலேரியா முதலிய ஜ்வரங்கள் குணமாகும் ஈரல் குலைக்கட்டிகளும் குணமாகும்.

விவரங்களுக்கு எழுதுங்கள்:

கேசரி குடீரம் லிமிடெட்

ராயப்பேட்டை :: மதராஸ்-14

தமிழ்நாடு ஏஜண்டுகள்:—

சீதாராம் ஜெனரல் ஸ்டோர்ஸ்,

மேலக் கோபுரவாசல், மதுரை.




காட்டுப்பட்டி ஒரு சின்னஞ்சிறு கிராமம். பட்டிக்காடு என்று வழக்கில் இருந்துவரும் சொல்லின் கருத்துக்கு மிகவும் பொருத்தமானதாகக் காணப்பட்ட ஊர். அந்தக் கிராமவாசிகளில் பெரும்பாலோர் எழுத்து வாசனையற்ற மக்கள். தாம் உண்டு — தம் வேலையுண்டு என்று அவர்கள் அமைதியுடன் காலங்கழித்து வந்தார்கள்.

ஊரில் பெரிய மிராசுதார் அம்பலவாணம் பிள்ளை. கிராமத்தின் பெரும்பான்மையான நில புலன்களுக்கு அவரே சொந்தக்காரர். படித்தவர்; உலக விஷயங்கள் தெரிந்தவர்; பெரிய விவேகி; வெகுதாராள மனதும், பெருந்தன்மையும் படைத்தவர்; தன்னடக்கத்திலே தமக்கு நிகரற்றவரும்கூட. ஆகவே பெரும்பாலோர் அவரைச் சார்ந்தே வாழ்ந்து வந்ததில் ஆச்சர்யமில்லை. கிராம மக்கள் அனைவருக்குமே அம்பலவாணம் பிள்ளையிடம் பெருமதிப்பு உண்டு; மரியாதையுண்டு; ஆழ்ந்த அன்பும் இருந்தது.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டா' என்பது முதுமொழியாயிற்றே? காட்டுப்பட்டியிலும் சிறியதொரு கோயில் இருந்தது. அதற்குத் தர்மகர்த்தா அம்பலவாணம் பிள்ளைதான். புரட்டாசி மாதம் நவராத்திரியின்போது அந்தக் கோயிலில் உற்சவம் நடப்பதும் பரம்பரை வழக்கம்; ஒன்பது நாட்களிலும் விழாக் கொண்டாடுவார்கள்; பத்தாம் நாள் விஜயதசமியன்று சுவாமி புறப்பாடாகி ஊர்வலம் நடக்கும். பிரமாதமான ஆடம்பரங்கள் எதுவும் இல்லாவிட்டாலும் அந்த ஊருக்குத் தகுந்தபடி—விழா கச்சிதமாகவே நடந்தேறும்.

குழப்பமின்றி — கவலையின்றி— சஞ்சலமின்றி காட்டுப்பட்டிவாசிகள் நிம்மதியுடனே — கட்டுப்பாட்டுடனே—வாழ்ந்து வந்தார்கள்.

ஒருநாள் எங்கிருந்தோ அயலூர்காரன் ஒருவன் காட்டுப்பட்டிக்கு வந்து சேர்ந்தான். அந்த ஊரின் செழிப்பையும், மக்களின் ஒற்றுமை மனப்பான்மையையும் கண்டு மலைத்தான், தன் பெயர் மாதவன்' என்றும், சொந்த ஊர் மலையாள தேசமென்றும் அவன் சொல்லிக்கொண்டான். வாலிப வயதுக்காரன்தான்; ஆசாமி அட்டைக் கறுப்பு. குள்ளமாய் கட்டுக்குட்டாய்க் காணப்பட்டான்; கிராப்புத் தலைதான்; ஒருபுறம் தலைமயிர் புஸ் என்று தூக்கிக்கொண்டிருந்தது.

"மலையாள தேசத்திலிருந்து இந்தப் பட்டிக்காட்டுக்கு ஏனய்யா வந்தே?" என்று யாரோ கேட்டார்கள்.

"அங்கு பொழைப்புக்கு வழியில்லை! வயிறு வளர்க்கலாமென்னு இங்கேவந்தேன்" என்று சொன்னான்.

"உங்க ஊரிலே உனக்குப் பிழைக்க வழியில்லையா!"

'ஆமாம் ஐயா, வறுமை தாண்டவமாடுது"

"சரி—சரி; பெரிய ஐயா கிட்டே போய் கேட்டுக்கோ"

அம்பலவாணம் பிள்ளையை 'பெரிய' ஐயா என்றுதான் அனைவரும் குறிப்பிடுவது வழக்கம்.

மாதவன் அவரிடம்சென்று கைகட்டி நின்றான்.

பிள்ளை இவனை ஏற இறங்கப் பார்த்தார்.

"விவசாயம், தெரியுமா உனக்கு?" என்று வினவினார்.

"பழக்கமில்லிங்க"

"படிச்சிருக்கியா?"

"ஏதோ கொஞ்சம் தெரியுமுங்கோ"

"இந்த ஊர் பிள்ளைகளுக்குப் படிப்பு சொல்லித் தருகிறாயா?"

"அது வராதுங்க"

"பின்னே? என்ன செய்து இந்த ஊரில் பிழைப்பதாக உத்தேசம்?" என்று பிள்ளை கேட்டார்.

"ஏதோ?—டீக்கடை வச்சு பொழச்சுக்கலாம் என்று வந்தேனுங்க" என்று பல்லைக்காட்டினான்.

பிள்ளை முன் பின் யோசிக்கவில்லை — அனுமதி அளித்துவிட்டார்.

"சரி போ; உன்னிஷ்டப்படி செய்துக்க; சாலையோரமா — கோயிலுக்குப் பக்கத்துலே — ஒரு திடல் இருக்குதல்லவா; அங்கே கடைவச்சிக்கிட்டு பிழைச்சுக்க" என்று இடத்தைக் கொடுத்து விட்டார்.

''உத்திரவுங்க எசெமான்!'' என்று அவன் பெரிதாகக் கும்பிடு போட்டு விட்டு அப்பால் நகர்ந்தான்.

இரண்டே நாட்களில், கோயிலுக்கு அருகில், காலியாகக் கிடந்த திடலிலே மண் சுவர்களாலும், கீற்றுகளாலும் அமைக்கப்பட்ட சிறு குடிசையொன்று தோன்றியது. இரண்டொரு பெஞ்சுகளும், ஒருகால் சிறிது முறிந்து அதற்குக் கல்லால் முட்டுக் கொடுக்கப்பட்ட மேஜை யொன்றும் இன்னும் ஏதோ தட்டுமுட்டுச் சாமான்களும் அங்கே காணப்பட்டன, அவ்வளவும் அந்தக்கிராம வாசிகளே மாதவனுக்குக் கொடுத்து உதவியவை.

இரு கைகளையும் வீசிக்கொண்டல்லவா அவன் அங்கு வந்து சேர்ந்தான்? இருக்க இடமும். பிழைக்க வழியும் அவன் அங்கேயே சம்பாதித்துக் கொண்டு விட்டான்.

மேஜையின் பக்கத்தில் கம்பீரமாக நின்று கொண்டு டீயைக் கலக்கிக் கலக்கி, லாகவத்துடன் ஆற்றிக் கொடுக்க ஆரம்பித்தான். தகரக்குவளை யொன்றில் டீத்தூள் போட்டு அதில் வெந்நீரை ஊற்றி, டபடப வென்று தாளக்கட்டுடன் அவன் அதைக் கலக்குவது கண்டு பிரமித்தனர் கபடமற்ற மக்கள்; உயர உயரத்தூக்கி அவன் ஆற்றுவது குறித்துப் பெரிதும் வியந்துகொண்டனர்.

சில நாட்களில் — 'தமிழர் தேநீர் விடுதி' என்று குறிக்கும் விளம்பரப் பலகை யொன்றையும் கடை வாசலில் மாட்டி வைத்தான் மாதவன்.

''வாங்க அண்ணே! சூடா மசால் வடை இப்பதான் போட்டு வச்சிருக்கேன்; வந்து ருசி பார்த்து அப்படியே ஒரு கப் டீயும் அடியுங்க! அப்புறம் எப்படி யிருக்குது பாருங்க!" என்று பிரமாதமாக உபசரிப்பான்.

''என்ன வேலாயுத மண்ணே! திரும்பிக்கூடப் பாக்கமாட்டேங்கறீங்க இந்தப் பக்கம்! தயவில்லே!'' என்று சிரித்தபடியே கெஞ்சுவான்.

''என்ன மாமன் பேசாமலே போறுரு!'' என்று போகிறவரை இழுப்பான்; ''என்ன மச்சான்! முகத்தைப் பார்த்தா ரொம்பக் களைப்பா இருக்கிறுப் போலே காணுதே? இந்தா—மொச்சைச் சுண்டலும், டீயும் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்; அடா சும்மா வாப்பேன்'' என்று ஒட்டி உறவாடுவான்.

மாதவனின் முகமலர்ந்த உபசரிப்பையும், சாதுர்யப் பேச்சையும் கண்டு நாளடைவில் அனைவரும் அவனிடம் மயங்கி விட்டனர். கடைசியில் கூட்டம் பெருகியது; வியாபாரம் அதிகரித்தது; அவன் பேச்சில் மனதைப் பறி கொடுத்துவிட்ட சிலர்—அவனையே கண்கண்ட தெய்வமாகவும் பாவித்து, அல்லும் பகலும் அவனையே சுற்றி வரவும் தலைப்பட்டனர் என்றால் மாதவன் சும்மா இருப்பானா?

விளையாட்டுப்பேச்சிலிருந்து விஷமப் பேச்சுக்குத் துவக்கி விட்டான்:

"என்ன கதிர்வேலு! நேத்து பெரிய ஐயா உன்னை ஒரே அடியாகக் கோவிச்சு இரைந்துகிட்டிருந்தாரே—என்ன சங்கதி?'

''அதுவா? அது பெரிசா ஒண்ணுமில்லேப்பா. அவுங்க வீட்டுத் தென்னந்தோப்புலே ஒரு நெத்து மரத்திலேந்து விழுந்திச்சு; என் மவன் அதைத் தூக்கிக்கிட்டு ஓடியாந்துட்டான். அதுக்காக —திருட்டுவளியிலே அவனைப் பளக்கி உட்டுடாதேன்னு என்னைக் கண்டிச்சாரு, நியாயந்தானே?' என்றான் கதிர்வேலு.

மாதவன் ஒருமாதிரியாகச் சிரித்தான். ''வெகுசா நியாயத்தையும்—அநியாயத்தையும் நீதான் கண்டுகிட்டாப்புல்லே பேசறியே அப்பேன்? ஒன் மவன் மரத்திலே ஏறியா நெத்தைப் பறிச்சு எடுத்துக்கிட்டான்? அவன் கண் எதிரிலே அது மரத்திலிருந்து விழுந்துச்சு; அவன் விவரமறியாத பிள்ளை; எடுத்துக்கிட்டுப் போனான்? இதுக்குப் பேருதிருட்டா? ஏ, அப்பா! எவ்வளவு வார்த்தைடா அதுக்கு! இந்த காலத்துலே படிச்சவங்க எல்லாருமே—நம்மமாதிரி படிக்காத முட்டாள்களை—இப்படித்தான் பயமுறுத்தி, ஏமாத்தி, அடக்கி ஆண்டுக்கிட்டுவாராங்க; நாம்பஏமாந்துகிடக்கிறோம். இதோ பாரு: கதிர்வேலு! 'திருடன்'னு தனியா ஒரு ஜன்மம் இல்லை. திருடறவன் ஏன் திருடறான் தெரியுமோ? அவனுக்கு வயத்துக்குகெடைக்க வழியில்லை; ஒளிஞ்சுக்கிட்டு வந்து எடுத்துக்கிட்டுப் போறான்—நிறைய வச்சிக்கிட்டு இருக்கிறவங்ககிட்டேயிருந்து! தெரிஞ்சு-இல்லேன்னு கேட்டா கொடுப்பாங்களா தம்பி யாராவது? அதனால் தான் ஏறிக்குதிச்சு எடுத்துக்கிட்டுப் போறான்! இப்போ—நான்தான் இருக்கேன்; ஏதோ—மானமாப் பொழக்கிறேன்; வயிறு வளர்க்கறேன்; திருடச் சொன்னாலும் நான் ஏன் திருடுவேன்? பிழைக்க வழி கிட்டாதவன்—கொல்லைப்புறமா வந்து கொண்டு போறான். அப்படி வாறவன் உங்கிட்டேயும்—எங்கிட்டேயுமா வந்து திருடப்போறான்?'' என்று விஷயத்தை எடுத்துக்காட்டி விளக்கினான்.

கூடியிருந்தவர்கள் மாதவனின் பேச்சைக்கேட்டு அயர்ந்து விட்டார்கள். “நீங்க சொன்னதுதான் உண்மையான பேச்சுங்க” என்று இரண்டொருவர் வாய்விட்டுப் பேசி ஆமோதிக்கவும் செய்தார்கள்.

“உள்ள அறிவைப் பலருடன் பேசியும், படிச்சும் விருத்தி செய்து கொள்ளணும் மச்சான்; இல்லாட்டி நமக்கு நாமேதான் சத்துருக்கள்!” என்று உபதேசம் தொடங்கினான் மாதவன்.

‘சூருவளி — ‘சண்டமாருதம்’ — என்றெல்லாம் பெயர்கொண்ட இரண்டொரு மட்டரகப் பத்திரிகைகளையும் வரவழைத்து—தன்னிடம் வருபவர்களுக்குப் படித்துக்காட்டி விளக்கவும் முற்பட்டான்.

நாளடைவில் தமிழர் தேநீர் விடுதி சாதாரண டீக்கடையாக இல்லை; ஊர் கூடி விவாதிக்கும் விவகாரஸ்தலமாக மாறி விட்டது; சூழ்ச்சியைத் தோற்றுவிக்கும் சதிகாரரின் சதுரங்க மேடையாக மாறிவிட்டது; உலக அரசியல் விவகாரங்கள் முதல் உள்ளூர் வம்புப்பேச்சு வரை அங்கு அடிபடாத விஷயமே இல்லை. அத்தனைக்கும் தலைமை தாங்கியவன் மாதவனே.

அதலபாதாளத்தில் அமுங்க இருக்கும் தங்களைக் கைதூக்கி விடவந்த மாபெருந் தலைவனாகவே மாதவனை ஒரு சிலர் மதித்து நடக்கத் தலைப்பட்டதிலும் ஆச்சர்யமில்லை.

மாதவனின் விஷமங்கள் அம்பலவாணம் பிள்ளைக்கும் தெரியாமலில்லை. அவர் நினைத்திருந்தால் அன்றே அவனை ஊரை விட்டு விரட்டியிருக்கலாம், ஆனால் அப்படிச் செய்யவில்லை. பொறுமையுடன் பார்த்துக் கொண்டுதானிருந்தார்.

“நேத்துப் பொழைக்க வந்து எசமான் கிட்ட பல்லைக் காட்டிப் பரக்க முழிச்சு நின்ன பயல்—இன்னிக்கு நம்ம கட்டுப்பாட்டைக் கொலைச்சு—ஊரைரெண்டு பண்ணிப் பாழாக்கப் பாக்கருனுங்க. இப்படியேஇவனெசும்மாவிட்டுக்கிட்டிருக்கலாமா!” என்று பிள்ளையிடம் பக்தி மாருத சிலர் அபிப்பிராயப்பட்டார்கள்.



பிள்ளைசிரித்தார். “கோழி அடிக்கக்குறுந்தடியா? இவனால் என்ன செய்துவிட முடியும்? விஷயம் எவ்வளவுக்குத்தான் முற்றுகிற தென்பதையும் பார்த்துவிடலாமே?” என்றார்.

நவராத்திரி வந்தது,

காட்டுப்பட்டி கிராமக் கோவிலில் விழாவுக்காக ஏற்பாடுகள் அம்பலவாணம் பிள்ளையின் தலைமையில் நடந்துகொண்டிருந்தன.

மாதவன் சும்மா பார்த்துக்கொண்டிருப்பானா? அவன் படித்தவன்—நாலுந் தெரிந்தவனாயிற்றே!

“பாரப்பா காளிமுத்து? ஊரிலே வயக்காடெல்லாம் தண்ணியில்லாமெ காயுது? கோவிலாம், கொளமாம்! சாமியாம்–பூதமாம்? கடவுள்னு ஒருத்தர் இருந்தால்—அவரும் நியாயம்—நீதியில்லாத அக்கிரமக்காரராகவா இருப்பார்! மழையே இல்லாமல் இப்படிப் பயிரைக்காய விடுவாரா? ஒருத்தனுக்கு வயிறு நிறைய சோத்தைப் போட்டு இன்னொருத்தனைக் குடிக்கக் கஞ்சியுமில்லாமெ சாவ வைப்பாரா? என்னப்பா? நான் பாட்டுக்கு பேசிக்கிட்டேயிருக்கேன்! நீங்கள் எல்லாம் வாயை மூடிக்கிட்டுக் குந்தியிருக்கீங்களே? நான் சொல்றது புரியுதா?”

“ஆமாம்—ஆமாம்—ஆமாம்” என்று காளிமுத்து தலையாட்டினான்..

“பயிருக்குத் தண்ணியில்லை; நம்ம வயத்துக்குசோறில்லை—இந்த லச்சணத்துலே சாமீ– பூதம்னு சொல்லிக்கிட்டு, கல்லுத் தலையிலே கொடம் கொடமாப் பாலும் தேனும் கொண்டு போய் கொட்டறாங்க! அப்படி வீணாகும் அந்தப் பாலையெல்லாம் நம்மப்போல–நாலு ஏழை எளியவங்ககிட்டக் கொடுத்துக் குடிக்கச் சொன்னா? நமக்குப் பசி

யாருமில்லெ? அவங்க மனசுப்படியே பார்த்தாகூட நம்மையும் அந்தக் கடவுள்தானே படைச்சு விட்டிருக்காரு! நமக்கு கொடுத்தா அவருக்குக் கொடுத்ததாவாதா?—என்ன மாரிமுத்து! புரியுதா உனக்கு?"

"ஏ, அப்பா! உனக்குத் தெரியாத விசயமே இந்தப் பூமியிலே இல்லைபோலிருக்குதே? பெரிய ஐயாவுக்குக்கூட இவ்வளவு தெரியாது போலே யிருக்குதே!" என்று வியந்தான் மாரிமுத்து.

"பெரிய ஐயாவுக்கு உங்களை யெல்லாம் நல்லா ஏமாத்திக்கிட்டே யிருக்கத்தெரியும்! அது தெரியாட்டி அவரு காலம் எப்படி ஓடும்? விரலைக்கூட அசக்காமல்—அதிகாரம் பண்ணிக்கிட்டு—கவலையில்லாமெ சாப்பிட்டுக்கிட்டிருக்க முடியுமா?" என்று சமயம் பார்த்துப் பேச்சை விட்டான் மாதவன்.

"என்ன துணிச்சல் ஐயா உனக்கு? பெரிய ஐயாவையே அடிச்சுப் பேசுறியே?" என்று யாரோ தூக்கி வைத்துப் பேசினார்கள்.

"இதுலே அதிசயம் என்னய்யா? மனிசனுக்கு மனிசன் ஏதுக்காக ஐயாபயந்துகிட்டு நடக்கணும். அவருகிட்டே பணம் இருக்குதன்னா—நம்ம கிட்டே உழைப்பு இருக்குது?" என்று பெருமிதம் பேசினான் மாதவன்.

களங்கமற்ற வானத்திலே, ஒரு மூலையில், சிறு கருக்கல் தோன்றியது; மெதுவாக ஊர்ந்து, லேசாகப் பரவியது.

ஆனந்தமாக வீசிய சீரான காற்றிலே ஒரு சிறிது திருப்பம் கண்டது; சிரித்த காற்று முகம் சுழித்தது; கொஞ்சம் வேகத்துடனே வீசத் தொடங்கியது.

அமைதியாக, தேங்கித் தவழ்ந்த நீர் நிலை சலனமுற்று அலை மோத ஆரம்பித்தது.

வான வெளியில் மிதந்த கருமேகங்கள் வேகமாகப் பரவத்தொடங்கி நாற்புறமும் பாய் விரித்தது போல் கவிந்து கொண்டு விட்டன. குளிர் காற்றும் துவங்கியது. முதலில் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பெரு மழைத்துளிகள் படபடவென்று விழுந்தன; தொடர்ந்து தூற்றல் பிசு பிசுத்தது; அப்புறம் பெருமழையே பிடித்துக் கொண்டு விட்டது.

காட்டுப்பட்டி கிராமக் கோவிலில் வழக்கம் போல், நவராத்திரி விழா தொடங்கி நடந்து வந்தது; ஆனால் அவ்வளவு உற்சாகமாக நடக்கவில்லை; முழுக்கட்டுப்பாட்டுடன் நடக்கவில்லை; ஏதோ ஒப்புக்கு நடந்தது போலவே தோன்றியது, ஊரில் இருந்த அனைவரும் கோயிலுக்கு ஏகோபித்து வரவில்லை. ஏதோ வந்த பேர்கள் வந்தனர்; வராதவர் வரவில்லை. சிலர் பக்தி செய்தனர்; சிலர் பக்தி பண்ணுபவரைக் கேலி செய்தனர், தான் தோன்றித்தனமாய் பேசியவரும் உண்டு.




"ஊரை இரண்டு பண்ணிவிட்டானுங்க— பிழைக்க வந்த பாவிப்பய!" என்று யாரோ அம்பலவாணம் பிள்ளையிடம் பாதிரகசியமாகத் தெரிவித்தார்.

பிள்ளை வாய்திறவாமல் நின்றுகொண்டிருந்தார்.

"இன்றைக்குச் சுவாமி புறப்பாடாகி ஊர்வலம் வரணுமே? அதுவும் நடந்துவிடுமல்லவா?" என்று ஒருவர் கவலையுடன் கேட்டார்.

"அதுதானே எனக்கும் தெரியவில்லே?" என்று பிள்ளை பதில் சொன்னார்.

"இந்தக் கிராமம் பூராவுமே திரண்டு வந்திருந்து சுவாமி புறப்பாடு செய்வதென்பது பரம்பரை பரம்பரையாக நடந்துவரும் வழக்கம். இந்த வருஷம் என்னடா வென்றால் அநேகர் கோயில் பக்கம் எட்டியும் பார்க்கவில்லே. வந்தவர்களை வைத்துக்கொண்டே திருப்பணியை நடத்திவிடலாமென்றால்—வராதவர்கள்—வழியில் ஏதாவது கலகம்—கிலகம் செய்வார்களோ—என்றும் யோசிக்க வேண்டியிருக்கிறது — ஒன்றுமே புரியவில்லே—" என்றுமுணு முணுத்தார் காரியஸ்தர்.

"கடவுள் நிச்சயித்தபடி தான் அனைத்தும் நடக்கும். நேற்றும், இன்றும், நாளையும் நிர்வகிக்கும் பொறுப்பு அவனுடையதே, அதைப் பற்றிக் கவலைப்பட நாம் யார்?" என்று முழு நம்பிக்கையுடன் தெரிவித்துவிட்டுக் கவலையற்றிருந்துவிட்டார் அம்பலவாணம் பிள்ளை.

சுவாமி ஊர்வலம் வரும் வேளை நெருங்க நெருங்க—அனைவரிடமும் அர்த்தமற்ற ஒரு பரபரப்புக் காணப்பட்டது நடக்குமோ—நடக்காதோ என்ற சந்தேகம்; அத்துடன் எத்தனையோ காலமாக நடந்து வருவது இப்போதும் நிற்காமல்—நடந்து விட வேண்டுமே—என்ற கவலையுங்கூட.

அதற்கேற்றாற்போல்—சமயத்தில் பெரு மழை பிடித்துக்கொண்டு விட்டது. ஆகாய வெளியையும், பூமியையும் உருத்தெரியாமல் ஒன்றாக்கிக் கொண்டு அஹோமயமாக மழை கொட்டு கொட்டென்று கொட்டியது. வானம் கிடுகிடுக்க—பூமி நடுநடுங்க, பெரும் இடி முழக்கம்; பெரு மழையையும் மீறிக்கொண்டு எங்கிருந்தோ பாய்ந்தோடி வந்தது பேய்க் காற்று.

அதிவேகத்துடன் வீசிய பெருங் காற்று, பேய்க்காற்றாக மாறி திசையெல்லாம் தவித்துத் தடுமாறி, சுழல்காற்றாகச் சுழன்று சுழன்று வந்து கடைசியில் சண்ட மாருதமாகவே பரிணமித்து விட்டது; மணிக்கு நூறுமைல் வேகத்திலே ஆக்ரோஷத்துடன் ஆர்ப்பரித்தது.

மனிதனால் கற்பனையும் செய்து பார்க்க முடியாத இயற்கையின் மாபெரும் சக்தியிலே அன்று காற்று உருவிலே வெளிப்பட்டது அணுவிலும் பரமாணுவாகும்; அதன் முன்னரே மனிதன் தலை தூக்கி நிற்கமுடியவில்லையென்றால் இயற்கையின் முழு வேகத்தையும் யாரால்தான் தாங்க முடியும்?

பெரும் மரங்களை வேரோடு களைந்து வான வெளியிலே வீசிஎறிந்து விளையாடியது புயல் காற்று; கேவலம்—ஓடுகளும், தகரங்களும் எம்மாத்திரம்? பெரிய மாடமாளிகைகளையெல்லாம் மொட்டையடித்து வேடிக்கை காட்டியது சண்ட மாருதம்; குச்சுவீடுகள் குந்தமுடியுமா?

மாலை நேரத்தின் மங்கிய ஒளியிலே தன் விளையாட்டைத்துவக்கிய சூறாவளி இரவு வெகு நேரம் வரை ஓயாமல் குதிபோட்டு விளையாடிக் கொண்டேயிருந்தது. அன்று இரவே—கடைசி இரவாக முடிவடைந்துவிடுமோ என்றுகூடத் தோன்றியது. ஆனால் அனைத்துமே காற்றில் கரைந்து இரவில் ஒடுங்கிவிடவில்லை.

மறுநாள் பொழுதும் வழக்கம்போல் புலர்ந்தது.

சூரியன் புன்னகை தவழத்தோற்றினான்.

ஆனால் முதல்நாள் கண்ட காட்டுப்பட்டியாகவா தோன்றியது அந்தக் கிராமம்?

அந்தக் கோரத்தை விளக்க வார்த்தைகளே இல்லை.

முக்யமாகக் குறிப்பிடவேண்டியது மட்டும் ஒன்று உண்டு.

'தமிழர் தேநீர் விடுதி' இருந்த இடமே தெரியவில்லை. அந்தத் திடலையே காணோம்; கணக்கற்ற பெருமரங்கள் அங்கு மலைபோல் விழுந்துகிடந்தன; அருகே ஓடிய வாய்க்கால் கரைபுரண்டு அந்தத் திடலையே அரித்து அடித்துப் பெரும் பள்ளமாக்கி விட்டிருந்தது.

மாதவனு ஏதோ—மரத்தடியில் அகப்பட்டுக் கொண்டு—உருத்தெரியாமல் நசுங்கி கண்டபிண்டமாகி மகா கோரமாகக் காட்சி கொடுத்ததாம் அவன் சரீரம்.

அப்புறம் அம்பலவாணம் பிள்ளை இப்படிச் சொன்னாராம்:

'புயல் அடித்ததும் நமது நன்மைக்காகவே தான். உண்மையாகவே நம்மை விழுங்க வந்த உள் புயலை இந்த வெளிப்புயல் வந்து விழுங்கி விட்டது. நாம் காப்பாற்றப்பட்டோம்; இனி மீண்டும் ஒற்றுமையுடன் வாழ முற்படுவோம். அறியாமை வேரற்று வீழ்ந்தது; மீண்டும் அறிவொளி பெற்று நம்பிக்கையுடன் எதிர் நோக்குவோம், கடவுள் கருணா சமுத்திரம்; அவன் உள்ளப் போக்கை யார்தாம் அறிந்து சொல்ல முடியும்?'

# குமாஸ்தா

**கண்ணன்**

இந்தியப்படங்கள் பெரும்பாலும் சோக ரசத்தையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன என்பது வெளிப்படையான உண்மை. அதுவும் சமீபத்தில் வந்த பல தமிழ்ப்படங்கள் ஒரே சோகக் களஞ்சியங்களாக அமைந்திருக்கின்றன. அருணா பிலிம்ஸாரின் "குமாஸ்தா" இந்த விதிக்கு விலக்கில்லாமல் இருக்கிறது. இப்படத்தில் ஆரம்பம் முதல் முடிவுவரை முக்கிய கதா பாத்திரங்கள் கண்ணீரும் கம்பலையுமாக நிற்கிறார்கள்.

பல தமிழ்ப்படங்கள் வெற்றிகரமாக வெகுநாள் ஓடாததற்குக் காரணம் நம் படப் பிடிப்பாளர்களின் இந்த, "சோக ரஸப்போக்கு" ஒரு முக்கிய காரணம் என்று நினைக்கிறேன். சமீபத்தில் சினிமா டெக்னீஷியன்கள் சங்கத்தில் ஒரு ரஸமான விவாதம் எழுந்தது. அதாவது, "சென்னையில் பெரும்பாலும் தனவந்தர்கள் வசிக்கும் மாம்பலம், மயிலாப்பூர் இவ்விடங்களில் சினிமாத் தியேட்டர்கள் மிகுதியாகத் தோன்றாமலிருப்பதும், இருக்கும் சில தியேட்டர்களில் வருமானம் அதிகம் இல்லாமல் இருப்பதும், இதற்கு மாறாக ஏழை ஜனங்கள் வசிக்கும் பகுதிகளில் பல லாபகரமான தியேட்டர்கள் தோன்றியிருப்பதும், ஏன்? என்ற பிரச்னை எழுந்தது. சங்கத்தின் தலைவரான ராம்நாத் இதற்குக் காரணம் கூறுகையில், தனவந்தர்கள் தங்களுடைய ஓய்வுநேரத்தைச் சந்தோஷமாகக் கழிப்பதற்கு அவரவர்கள் வீட்டிலும், மற்ற இடங்களிலும் வசதிகள் இருப்பதால் சினிமாக்களை அவ்வளவாக நாடுவதில்லை என்றும், ஏழை ஜனங்கள் தங்களது சூழ்நிலையைச் சிறிது நேரம் மறந்து கற்பனை உலகத்தில், சொற்பச் செலவில், சந்தோஷமாகக் கழிப்பதற்குச் சினிமாவைப் பெரிதும் நாடுகின்றார்கள் என்றும் சொன்னார். இது முற்றிலும் உண்மை. இக்காரணத்தினால்தான் சிரிப்பையும், சந்தோஷத்தையும் உண்டுபண்ணும் படங்களுக்குப் பெருவாரியான ஆதரவு கிடைக்கின்றது என்பது நிச்சயம். இதற்கு உதாரணமாக, சமீபத்தில் வெளியான "கல்யாணம் பண்ணிப்பார்" என்னும் ஹாஸ்யப் படத்தைச் சொல்லலாம்.

இந்தியனுடைய வாழ்க்கையிலும், மனப்பான்மையிலும் சோகமே சற்று மேலீடாக உள்ளது. இந்த நிலையில் சோக ரஸ வர்ணனை ஜனங்களைச் சற்றுக் கவர்ந்தாலும், இதற்கு மாறுபட்ட படங்களுக்கே பெருவாரியான ஆதரவு இருக்கிறது என்பது அனுபவபூர்வமான உண்மை.

சதா வறுமையுடன் போராடிக் கொண்டிருக்கும் ரங்கநாதன் என்னும் குமாஸ்தா; அவனுக்குப் பொறுமையே உருவெடுத்து வந்த ஒரு மனைவி; இரண்டு குழந்தைகள், படுக்கையாகப் படுத்திருக்கும் தகப்பனார், வேலையில்லாமல் இருக்கும் ஒரு தம்பி, கல்யாணமாகாமல் இருக்கும் வயதுவந்த ஒரு தங்கை; இவர்களைக்கொண்ட ஒரு குடும்பம். குமாஸ்தா ஒவ்வொரு சிறு விஷயத்திலும் ஊரார் என்ன நினைப்பார்களோ என்று பயந்து நடக்கும் ஒரு மானி. தம்பியோ, அண்ணன் இந்தமாதிரி நடப்பதனால்தான் குடும்பத்திற்கு ஏற்பட்ட அவதிகள் எல்லாம் என்று பயமின்றிச் சொல்லிப் போராடுபவன். எவ்வளவு முயற்சிசெய்தும் பெண் கலியாணமாகாமல் இருப்பதை நினைத்து, தந்தை சதா ஏங்கி உருகுபவர். அழகு, சாந்தம், சீலம் இவை ஒருங்கே படைத்த தங்கை சுசீலாவோ சதா தன் நிலையை நினைத்து நினைத்துக் கண்ணீர் உகுப்பவள்.

குமாஸ்தா வீட்டிற்கு அருகில் இருக்கும் பங்களாவில் உள்ள ஜமீந்தார் மகன் ரவி சுசீலாவை நேசித்து, தன் பெற்றோர்களுக்கு விருப்பமில்லாதபோதும் அவளைத் தான் மணப்பதற்கு இசைய வைக்கிறான். ஆனால் ரவிக்கு அடிக்கடி கடுமையான மார்வலிப்புகள் ஏற்படும் என்பதைப் பெண் வீட்டார் அறியார். கலியாண தினத்தன்று மாப்பிள்ளையின் இந்தக் கோளாறை எவ்விதமோ தெரிந்துகொண்ட தம்பி கோபு, அண்ணாவிடம் சொல்லி, கல்யாணத்தை உடனே நிறுத்த வேண்டுமென்று வற்புறுத்துகிறான். குமாஸ்தா பிள்ளை வீட்டாருக்கும் ஊராருக்கும் பயந்து வாளாவிருக்க, கலியாணம் நடந்துவிடுகிறது. கலியாண தினத்தன்று, களிப்பு மிகுதியால் ரவிக்கு அதிர்ச்சி ஏற்பட்டு, மார்வலிப்பு உண்டாகிறது. டாக்டர் படுக்கையை விட்டு அசையக்கூடாது என்றும் பூரண ஓய்வு அவசியம் என்றும் வற்புறுத்திச் செல்லுகிறார். கலியாண தினத்தன்று இரவு புருஷன் தேக நிலைபற்றி மிக்க சஞ்சலமடைந்த சுசீலா தூக்கமில்லால் மாடியின் வெளிப்புறம் வருகிறாள். அதே சமயம் சற்றுக் குணமடைந்திருந்த ரவியும் அங்கு வந்து மனைவியைச் சந்திக்கிறான். மனைவி எவ்வளவு சொல்லியும் கேளாமல் அவளைத் தன்

வெற்றிகரமான

நான்காவது வாரம்

தென்னாடெங்கும்

நடைபெறுகிறது




அருணா பிலிம்ஸ்

மதராஸ்-17

ளிச்சைக்கு ரவி இணங்க வைக்கிறான். பிறகு படுக்கையையடைந்து அச் சம்பவத்தை, வழக்கம்போல் தன் டைரியில் குறித்து வைத்துவிட்டுப் படுத்தவன் பிணமாகிறான். சுசீலாவின் மனக்கோட்டைகள் ஒரே நிமிஷத்தில் இடிந்து நொறுங்குகின்றன. அந்த ஓர் இரவுச் சம்பந்தத்தின் காரணமாகக் கருத்தரித்த அவள் பல இன்னல்களுக்கு ஆளாகி, வீட்டைவிட்டுத் துரத்தப்படுகிறாள். சின்ன அண்ணனின் முயற்சியால் பல வருடங்களுக்குப் பிறகு அவளுடைய வாழ்க்கை ஒருவாறு சீர்படுகிறது. மகள் ராணியும் படித்துப் பெரியவள் ஆகிறாள். ஆனால் அவளுடைய வாழ்க்கையிலும் ஆதியில் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவங்கள் மறுபடியும் நடப்பதைக் கண்டு திடுக்கிடுகிறாள். அவமானத்தின் சின்னம் என்று கலியாணப் பந்தலில் பழி சுமத்தப்பட்டு ராணியின் வாழ்க்கையும் புகையவிருக்கும் தருணம், தெய்வ வசத்தால் உண்மை நிரூபிக்கப்பட்டு எல்லாம் இனிது முடிகின்றன.

குமாஸ்தாவின் வாழ்க்கையைவிடத் தங்கையின் வாழ்க்கையே படத்தில் பெரிதும் இடம்பெற்றிருக்கிறது. ஆகையால் படத்தின் தலைப்பு அவ்வளவு பொருத்தமில்லை என்று சொல்லலாம். [தங்கை சுசீலாவாகப் பண்டரிபாய் பெரும்பாலும் நன்கு நடித்திருக்கிறார். சினிமா ரஸிகர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கும் இளம் நடிகர்களுள் பண்டரிபாய் ஒருவர். படத்தின் சில பாகங்களில் இவர் நடிப்பு மிகவும் போற்றத்தக்க முறையில் இருக்கிறது. உதாரணமாக, கலியாண தினத்தன்று இரவு புருஷனின் தேக நிலையை நன்கு அறிந்து அவருடைய கோரிக்கையை மறுத்துத் தழுதழுத்த குரலில் கெஞ்சி மன்றாடுவது உணர்ச்சிததும்ப இருக்கிறது. இங்கு வசனங்களும், நன்றாக அமைந்திருக்கின்றன. டைரக்டர் R. M. கிருஷ்ணசாமி சுசீலாவுக்கு மறக்க முடியாத அந்த ஓர் இரவை, ரசிகர்களுக்கும் மறக்க முடியாதபடி படம் பிடித்து இருக்கிறார்.

சிறந்த குண சித்திர நடிகர் என்று பெயர் பெற்றிருக்கும் நாகையா குமாஸ்தாவாக நடிப்பது சற்று சுமாராகவே இருக்கிறது. ரவியாக நரசிம்ம பாரதியும், கோபுவாக மனோஹரும் நன்கு நடித்திருக்கிறார்கள்,

படத்தின் ஆரம்பத்திலும், முடிவிலும் விறுவிறுப்புச் சற்றுக் குறைந்து தென்பட்டாலும், பல ரஸமான பாகங்கள் இருக்கின்றன.

கோடம்பாக்கம் பிலிம் ஸெண்டரில் எடுக்கப்பட்டிருக்கும் இப்படத்தில் ஒலிப்பதிவு சுமார். பின்னணி சங்கீதம் லீலா, வசந்த குமாரி, இவர்கள் பாடியிருக்கிறார்கள். குமாஸ்தாவின் சம்சாரமாக வரும் ஜெயம்மா தானே பாடியிருக்கும் முதல் பாட்டு அழகாக அமைந்திருக்கிறது.



Noting the events of the day
3rd Oct. 1946
marriage fixed
jewels solicited &
Ordered at P.A.R's
1. necklace.
3 Pairs bangles,
1 Saree pin
1. Diamond nose screw
1. Pair thodu 1.5. cts.
all to be recd on 20
BASKARA
Better cultivate the diary habit
P.A. RAJU CHETTIAR & BRO.,
JEWELLERS
COIMBATORE.
Louis




## BITA CAFFIN

### பிடகாபின்

சகலவிதமான வலிகளையும், ஜுரத்தையும் போக்கும். ஹிருதயம் வயிறு இவைகளுக்கு எத்தகைய கெடுதியும் விளைவிக்காது.

**3 மாத்திரைகள் அடங்கிய பாக்கெட் விலை அணு 1**

## BITA LAX

### பிடலாக்ஸ்

இனிப்பான சாக்லேட் சுகபேதி.
மணத்துடன் குணம் நிறைந்தது
**2 மாத்திரைகள்கொண்ட பாக்கெட் விலை அணு 1**

தயாரிப்பவர்கள்:-

**BOMBAY TABLET Mfg. Co.,**
Post Box No. 2092, BOMBAY—2.




# தி நியூ கிரேட்

## இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

(பரோடாவில் ஸ்தாபிக்கப்பட்டது—மெம்பர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ... | ரூ. 2,50,00,000 |
| வெளியிடப்பட்டு வசூலிக்கப்பட்ட மூலதனம் | ... | ரூ. 1 25,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ... | ரூ. 32 50,000 |

டைரக்டர்கள் போர்ட்

1 துளசிதாஸ் கிலாசந்த் (சேர்மன்)
2 வால்சந் ஹீராசந்த்
3 தராம்ஸெ முல்ராஜ் காடாவ்
4 ஜிஹாங்கிர் பெஸ்டான்ஜி படேல், B A., (Cantab)
5 ராஜ்பிரிய மணிபாய் வஸான்ஜி தேசாய்
6 அம்பாலால் கிலாசந்

ஜனரல் மானேஜர்:- எம். ஜி. மோடி

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்:- பாங் பில்டிங், மண்ட்வி, பரோடா.

பிரிட்டிஷ் இந்தியாவில் பிரதம ஆபீஸ்:-45/47, அபாலோ தெரு, போர்ட், பம்பாய்.

**சென்னை ராஜதானி முழுமைக்கும் சுருசுருப்பும் செல்வாக்கும் உள்ள ஏஜண்டுகள் தேவை.**

விபரங்களுக்கு:—

**சென்னை ஆபீஸ்:- 121-A, அரமணைக்காரத்தெரு.**

கையாளப்படும் அலுவல்கள் — ஆயுள், தீ, கடல் விபத்து, எதிர்பாரா விபத்துகள்.

சிறு குடிசையோ
அல்லது பெரிய
ஆலையோ



குடிசை, அரண்மனை, ஆலை ஏதானாலும் சரி இவைகளின் நிர்மாணத்தில் எஃகு இன்றியமையாதது.

★

**டாடா எஃகு**

பிரசுரம்: டாடா அயர்ண் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

தலைமை சேல்ஸ் ஆபீஸ்: 102A, கிளைவ் தெரு, கல்கத்தா.

ஸ்திரீகளின்
ஆரோக்கியத்திற்கு



பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

# அருணா

கர்பாசயரோக நிவாரணி




ஸ்திரீகளின் தேக சுகத்திற்கு அவசிய மான சிறந்த டானிக் முறைப்படி தவரு மல் உபயோகித்தால் ஆரோக்கியத்தை விருத்தி செய்து வாழ்க்கையை நன்கு ரஸிக்கச் செய் யும்.

**ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.**
**தி-நகர். . . . மதராஸ்.**

EASTERNS. 376.




பாரதநாட்டுப் •
பெண்களின் •
அணிகலன் •

நீண்டு கறுத்த கேசம்

★

இதற்கு இன்றியமையாதது

# ஜாப்கோ
# ஹேர்குரோயர்

சிறந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

வீகம்ஸீயின்

டிரேட் மார்க்

**V. C.**

(ஸ்தாபிதம் 1893)

குறிபோட்ட நகைகளெல்லாம்
சவரன் பொன்னுக்கும்
முதல்தரமான
வைரங்களுக்கும்
மேன்மையான கைதேர்ந்த
வேலைப்பாட்டுக்கும்
உத்தரவாதமுள்ளவை

**VEECUMSEE**
CHABILDOSS & SONS
Renowned Diamond Merchants,
China Bazaar :: MADRAS.

# பொருளடக்கம்

விய மலர் 6 — புரட்டாசி இதழ் 2

இடைக்கால சர்க்கார் 9

காபினட் மந்திரிகள் 12

பூர்ண சந்திரோதயம் 16
சாரி

பாரதிகண்ட பரம்பொருள் 26
வி. ஜி. ஸ்ரீநிவாஸன்

சினிமா-தொழிலும் கலையும் 31
க. சந்தானம்

காதற்கோயில் 33
மானஸீகன்

சித்ரா 44
கே. சுந்தரம்மாள்

வீரச் சிதம்பரம் பிள்ளை 52
யோகி சுத்தானந்த பாரதியார்

காவியமும் கற்பனையும் 59
ரா. வீழிநாதன்

8074

# யுத்தம் முடிந்தது!

முன்போல்



எல்லாவிதமான

## சைக்கிள்களும்

அவைகளின் பிரத்யேக

## பாகங்களும்

### இன்னம் ஏராளமாக வரவில்லை!!

எனினும்

**பொது ஜனங்களுக்கு வேண்டியவைகளை திருப்தியுடன் கொடுக்க எங்களால் கூடியவரையில் உழைக்கிறோம்**

தேவைக்கு எழுதவும்:-

# THE ENGLISH CYCLE & MOTOR Importing Co., Ltd.,

## No. 2/9, BROADWAY, MADRAS.

Phone No. 3168 Post Box No. 177 Telegrams "CYCLES"

# காவேரி

| விய<br>மலர் 6 | "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்<br>செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார் | புரட்டாசி<br>இதழ் 2 |
|---|---|---|

## இடைக்கால சர்க்கார்

மன்னர் ஆட்சி மக்கள் ஆட்சியாக மாறி விட்டது. அன்னிய அரசரின் ஆட்சி தேசிய மக்கள் தலைவர்களின் ஆட்சியாக அமைந்துவிட்டது. இதுதான் டெல்லியில் நடந்திருக்கும் மாறுதல்.

டெல்லி என்றும் கண்டறியாத காட்சியைக் கண்டது. ஹிந்து, முஸ்லீம் மன்னர்கள் அங்கிருந்து ராஜ்ய பரிபாலனம் செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பரம்பரைப் பாத்தியத்தினாலோ, அல்லது வாளின் வன்மையினாலோ சிம்மாஸனம் ஏறியவர்கள். பொதுமக்களினால் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் பதவி ஏற்று ராஜ்ய பரிபாலனம்செய்ய முன் வந்தது இந்து சரித்திரத்திலேயே இதுதான் முதல் தடவை. எனவே நாடெங்கும் மக்களின் மகிழ்ச்சிக்குக் கங்கு கரையில்லை.

ஆயினும் மன்னர் ஆட்சியின் சின்னங்கள் இன்னும் ஒழிந்தபாடில்லை. ஏற்பட்டிருப்பது இடைக்கால சர்க்கார். மன்னரின் பிரதிநிதியாக வைசிராய் வேவல் டில்லியில் இன்னும் அமர்ந்திருக்கிறார். அவர் இடைக்கால சர்க்காரின் தினசரி நடவடிக்கைகளில் தலையிட மாட்டார். என்றாலும் அன்னிய ஆட்சி ஒழிந்து விட்டது என்று கூற முடியாது. நாம் இறுதிக் கட்டத்திலிருக்கிறோம் என்பதை மட்டும் மறந்துவிடக் கூடாது.

அறுபது வருடங்களாகப் போராடி, பொறுமையுடன் எத்தகைய தியாகத்திற்கும் சளைக்காது இம்மாறுதலைச் சம்பாதித்திருக்கிறது காங்கிரஸ் ஸ்தாபனம். அப்பொழுதெல்லாம் அதற்குக் குந்தகம் விளைவித்துப் பிரிட்டிஷாருடன் கைகலந்து தேசிய இயக்கத்தை எதிர்த்துவந்த முஸ்லீம் லீக் இன்று வெண்ணெய் திரண்டுவருகிறது என்று கண்டவுடன் பங்கு கேட்க முன் வந்துவிட்டது. முஸல்மான்கள் ஜனத் தொகைக்குத் தகுந்தவாறு பங்கு வாங்க இஷ்டமில்லை. சரிபாதி வேண்டுமென்று பிடிவாதம் செய்து, பலாத்காரத்தினால் அதைச் சாதித்துக்கொள்ள முயற்சி செய்கிறது. இம்முயற்சிக்கு ஒருவாறு செவி சாய்ப்பார்கள் என்று கண்டவுடன் நாட்டையே பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று கலகம் செய்கிறது.

இன்று மக்களிடையே சுதந்திர உணர்ச்சி மேலிட்டு நிற்கிறதென்றால் அது காங்கிரஸ் அரும்பாடு பட்டதினால் ஏற்பட்டது. 1942ல் நிகழ்ந்த போராட்டத்திலும்சரி, அதற்குமுன் நிகழ்ந்த போராட்டங்களிலும்சரி, முஸ்லீம் லீக் செய்த தேசியத் தொண்டெல்லாம் வேடிக்கை பார்த்ததும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் ஐக்கியமாக உழைத்ததுமே ஆகும். அதனால்தான் கணக்கு வழக்கில்லாத சர் பட்டங்களும் பதவிகளும் அவர்களுக்குக் கிட்டின. இப்பொழுது ஆத்திரத்தினால் அவற்றை யெல்லாம் துறக்க முன் வந்துள்ளார்கள் லீகர்கள். காங்கிரஸ்காரர்களிடையே ஏற்பட்ட இத்தகைய உணர்ச்சிகள் பல ஆண்டுகளுக்குப் பின்னர்தான் முஸ்லீம் லீகர்களின் மூளைகளில் உதிக்கிறது. காங்கிரஸ்காரர்கள் தேச விடுதலைக்காக எதை எதைச் செய்தார்களோ அதையதையெல்லாம் இன்று தங்கள் குறுகிய சமூகத்தின் போலி நன்மைக்காக, நாட்டின் நன்மைக்குக் குந்தகமாகக் கையாளமுன் வந்துள்ளது முஸ்லீம் லீக்.

பூர்வசரித்திரத்தை மதியாது காங்கிரஸ் முஸ்லீம் லீக்கின் கோரிக்கைகளுக்கு ஒருவாறு இணங்கி ஒற்றுமையுடன் ஆட்சி

நடத்த ஆசைப்பட்டது. ஆனால் ஜின்னா கோஷ்டியாருக்கு இதில் நாட்டமில்லை. சிறுபான்மையராயினும் முஸ்லீம்களுக்குப் பெரும்பான்மையினரின் முற்போக்கை மறுதளிக்க உரிமை வேண்டும் என்று வாதாடுகிறார்கள். மிருக பலம் தங்கள் சமூகத்தில்தான் அதிகம் உள்ளது என்ற மனப்பான்மையில் கலவரம் செய்யத் திட்டம் வகுத்து வருகிறது லீக்.

இந்தச் சமயத்தில்தான் நாட்டிலுள்ள எல்லாச் சிறுபான்மையினர் ஒத்துழைப்புடனும் காங்கிரஸ் பதவி ஏற்றிருக்கிறது.

பண்டித நேரு மிக்க கண்ணியமாக காரியங்களை நடத்திவருகிறார். அவர் பேச்சு எத்தகைய விரோதியையும் சமரஸப் படுத்தக்கூடியது. காங்கிரஸ் ஆட்சி புரியவில்லை. இந்திய மக்களின் ஆட்சி சிறுபான்மையோர் பெரும்பான்மையோர் ஆகிய அனைவருக்கும் சமமாக நடத்தப்படுமென்றும், செருப்பு, குடையின்றி நெற்றி வியர்வை தோன்ற உழைத்து, சொல்ப ஊதியம் திரட்டி, தரித்திரியத்தில் உழலும் ஏழை மக்களின் வாழ்க்கைத்திறனை உயர்த்துவதுமே இவ்வரசாங்கத்தின் முக்கியநோக்காகும் என்று அவர் பிரஸங்கத்தில் குறிப்பிட்டிருப்பது மக்கள் கவனிக்கவேண்டிய விஷயம். உலக மக்களின் ஆசியைப் பெற்று ஆட்சி நடத்திவருகிறது இடைக்கால சர்க்கார்.

ஜின்னாவுக்கும் முஸ்லிம் லீக் தலைவர்களுக்கும் மட்டும் இதில் ஆத்திரம் பொங்கி அவர்களை மதிமயங்கச் செய்துவிட்டது. தங்கள் ஏமாற்றத்தைக் கோபாவேசத்தினாலும் கலவரத்தினாலும் வெளியிட முன்வந்துள்ளார்கள். இடைக்கால சர்க்காரைத் திணறவைக்க எண்ணி நாட்டில் கலவரங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. கல்கத்தா, பம்பாய், அஹமதாபாத் முதலிய நகரங்களில் ரத்த வெள்ளம் ஓடச் செய்யப்பட்டு வருகிறது.

இவற்றை எல்லாம் இடைக்கால சர்க்கார் எளிதில் அடக்கமுடியும். முஸ்லீம் லீக்கினரும் இதைச் சீக்கிரத்தில் உணர்வார்கள். பலாத்காரக் கலவரம் பலிக்காது என்பதை உணர்ந்தபின்னர் லீகர்கள் சர்க்காரில் சேருவதே மேல். படிப்பினை கற்றபிறகு இன உணர்ச்சியும் அடங்கி ஒத்துழைப்பார்கள். ஆனால் இப்பொழுதே அவர்கள் நோக்கப்படி இடைக்கால சர்க்காரில் அவர்களைப் புகவிடுவோமானால் அங்கேயும் தினசரி கலவரம் செய்துகொண்டே வருவார்கள். முட்டுக்கட்டைமேல் முட்டுக்கட்டைதான். மொத்தத்தில் இந்தியர்களுக்கே இழிவான பெயர்தான் கிடைக்கும். எனவே லீகர்கள் இல்லாது கொஞ்சகாலம் இடைக்கால சர்க்கார் நடப்பது மிகவும் மேல் என்று நமக்குப்படுகிறது. இப்பொழுது இருக்கும் இடைக்கால சர்க்கார் ஏகோபித்து யாதொரு இடைஞ்சலுமின்றிப் பாரபக்ஷமில்லாமல் நாட்டு மக்களுக்குச் சில நன்மைகளைச் செய்யக்கூடும். மக்களின் நன்றியை வெகு சீக்கிரம் பெற்றுவிடுவார்கள் என்பதும் திண்ணம்.

ஆகவே தற்போதுள்ள சர்க்கார் கொஞ்சகாலமாவது மாறுதலின்றி வேறுன்றி ஆட்சி நடத்த வசதி இருக்கவேண்டுமென்று பொதுமக்கள் விரும்புவது வீண் போகாது. ஜின்னா கோஷ்டியினர் அதில் புகவேண்டுமானால் தங்களுக்குரிய பங்கை மட்டும் பெற்றுவர வேண்டுமேயல்லாது மறுதளிக்கும் அதிகாரத்தைப் பெற்று பங்கு எடுத்துக்கொள்ள விருவது நாட்டின் நலத்திற்குப் பெரிய கேட்டை விளைவிக்கும்.


## காவேரி

| சந்தா விபரம் | உள்நாடு | ஸிலோன் | பர்மா & மலேயா |
|---|---|---|---|
| ஒரு வருஷம் | 4 8 0 | 4 12 0 | 6 0 0 |
| அரை வருஷம் | 2 4 0 | 2 8 0 | 3 0 0 |
| தனிப்பிரதி ஒன்றுக்கு | 0 6 0 | 40 சதம் | 0 8 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர்,
பெஸன்ட் ரோடு, கும்பகோணம்.




# இன்றுவரை நிகரற்றது.

கிடைக்கக்கூடிய சந்தன அத்தர்களில் மைசூர் சந்தன அத்தர்தான் மிக உயர்ந்ததும் சுத்த மானதும் ஆகும். வைத்திய உபயோகத்திற்கோ அல்லது சோப், இதர வாசனை திரவியங்கள் தயரிர் செய்யவோ 'மைசூர்' பெயர் கொண்ட சந்தன அத்தருக்கு மிஞ்சியது ஒன்றுமில்லை.

## மைசூர்
## சந்தன அத்தர்

மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு. MSK-TM

# பட்டு

## என்றால் மிருதுவாயுள்ளது

அது மைசூர் பட்டானல் ச்பர்சத்திற்கு மிருதுவாயுள்ளதுடன் உயர்ந்த நெசவு, அதிகநாள் உழைப்பு, மேலான ரகம் எல்லாம்சேர்ந்து மிக அழகான தாகும்.




மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

MSK-U-TM

# காபினட் மந்திரிகள்



சர்தார் படேல்



பண்டித நேரு



ராஜேந்திர பிரஸாத்



சரத் சந்திர போஸ்



அலி ஜகீர்



பாபா



ராஜகோபாலாசாரி



ஸர். ஷாபட் அஹமத் கான்



ஜகத் ஜீவன் ராம்



ஆஸப் அலி



பல்தேவ் ஸிங்



ஜான் மதாய்.



டிஸம்பர் 9உ டில்லியில் கூடவிருக்கும் அரசியல் நிர்ணய சபை இங்கே கூடுகிறது




அச்சபைக்கு வரும் அங்கத்தினர்கள் தங்குமிடம்.

# பூர்ண சந்திரோதயம்

'சாரி'

பார்தி நதி பூர்ணபிரவாகம் எடுத்துப் பெருகிற்று; நதி கரைபுரண்டு ஓடிற்று எனச்சொல்லலாம். ஆனால் இவ்விடத்தில் நதிக்குக் கரையேயில்லை. ஒரு பிரம்மாண்டமான அகண்ட வெளி; அதில் நதியின் பிரவாகம் பெருகிச் சமுத்திரம் போன்ற தோற்றத்தைக் கொடுத்தது. சுற்றுப்புறம் எத்திசை நோக்கினாலும் தண்ணீர்! நிறைந்து நின்ற அதன் அமைதி பயங்கரமானது.

மத்தியில் சிறிது தூரத்திற்கு ரயில்வே லைன் அதைக் குறுக்கிட்டது. இப்பிரவாகத்தின் அமைதி அவ்விடத்தில் குலைந்து, நிதானமான அலைகள் எழும்பி, தண்டவாளங்களைப் பிடித்திருக்கும் கட்டைகளைத் தாக்கித் திரும்பின. அக்கட்டைகளின் மீது நின்றால், தன் போக்குக்கு ஏற்பட்ட இத்தடையினால் தான்கொண்ட கோபத்தை எடுத்துக்காட்டுவதுபோல் அலைகள் விசையாய் நமது காலில் வந்து மோதின.

இக்காட்சியின் பயங்கரத்தில் ஈடுபட்டவன்போல் சந்திரன் மெள்ள உதயமாகி அப்பிரதேசத்தைத் தன் கிரணங்களின் மகிமையால் வெள்ளிமயமாக்கினான். அன்று சிராவண மாதத்துப் பௌர்ணமி தினம். இரவு பதினொரு மணி; அருகேயுள்ள கிராமத்து ஜனங்கள் கூட்டங்கூட்டமாக அங்கு வரத் தலைப்பட்டனர். சிராவணபூர்ணிமாவைச் சமுத்திரக் கரையில் அவர்கள் கொண்டாடி வீடு திரும்பும் நேரம்.

நதியின் பாலத்தை அவர்கள் கடக்கும் சமயம் அதனுடைய அபாய நிலை புலப்பட்டது. கட்டைகளின் மீது தண்ணீர் விசையுடன் வந்து மோதியதால், தண்டவாளங்களின் பிடிப்புக் குறைந்து, பாலமே நடுவில் தொங்கிப்போயிருந்தது. ஜனங்கள் இதைக் கவனித்ததும் ஆரவாரம் செய்தார்கள்.

எங்கிருந்தோ கணக்கில்லாமல் கைலாந்தர்கள் வந்துசேர்ந்தன. மழை பிசுபிசுவென்று தூறிக்கொண்டிருந்ததா? மங்கின நிலவொளியில் லாந்தரைப் பிடித்துக்கொண்டு பரபரப்பாய் அங்குமிங்கும் ஓடிய ஜனங்கள் கொள்ளிவாய்ப் பிசாசுகளை ஒத்திருந்தார்கள்! சிறிது நேரத்தில் நேரக்கூடிய ஆபத்தை நினைத்தால் அவர்கள் இவ்விதம் காட்சியளித்தது நமக்கு வேடிக்கையாகத் தோன்றவில்லை.

என்ன ஆபத்து? ஏன் இவர்கள் இப்படித் தவிக்கிறார்கள்? ஆ! அதோ வெகு தொலைவில் மினுக்கு மினுக்கென்று தென்படும் வெளிச்சம் பல்சார் ரயில்வேஸ்டேஷனைக் குறித்தது. கனவேகத்தில் மண்டையைப்பிளந்துவிடும் ஓசையுடன் பறந்துவந்துகொண்டிருந்தது குஜராத் மெயில் வண்டி. இன்னும் ஐந்தே நிமிஷங்களில் வண்டி பார்தி நதிப் பாலத்தின் மீது ஓடி, அதைக் கடந்து அப்பால் செல்லவேண்டும், பாலமோ இந்த ஸ்திதியில் தொங்கிக்கொண்டிருந்தது!

ஜனங்கள் சமயோசிதமான ஒரு யோசனை செய்தார்கள். தாமாக ஒரு Barrier Signal தயார் செய்து, பாலத்திற்கு இரண்டு பர்லாங்கு முன்னதாகவே சுமார் முப்பது ஆட்கள், கையில் லாந்தரைத் தூக்கிப் பிடித்த வண்ணம் நின்றுகொண்டார்கள். தூரத்திலிருந்தே இதைக் கவனித்த என்ஜின் ஓட்டி வண்டியை நிறுத்தி, விஷயத்தைப் புரிந்துகொள்வாரென்பது இவர்களுடைய யோசனை.

குஜராத் மெயில் பறந்துவந்தது, மூச்சுப்பேச்சற்று.

வண்டியையே நோக்கி நின்ற ஜனங்கள் திடுக்குற்றனர். ஏனென்றால் இவர்கள் எதிர் பார்த்தவண்ணம், தூரத்திலிருந்தே லாந்தர்களின் வெளிச்சத்தைக் கவனித்து, வண்டியை நிறுத்துவதின் அடையாளமாக அதன்வேகம் குறைக்கப்படவில்லை!

கலவரப்பட்ட ஜனங்கள், கூச்சலுடன் லாந்தரை அங்குமிங்கும் ஆட்டினர். இதற்கிடையில் கனவேகமாய் வந்த வண்டி இவர்கள் நின்ற இடத்தைக்கடந்து ஐம்பது கஜதூரம் சென்று, பிறகு திடீரென்று ஒரு குலுக்கலுடன் நிறுத்தப்பட்டது.

என்ஜின் ஓட்டி தொப்பென்று குதித்தார். சுமார் 54 வயதுள்ள ஒரு ஐரோப்பியர். ஓடிவந்து தம்மைச்சூழ்ந்து கொண்ட ஜனங்களைக் கவனியாமல் அவர் பாலத்தை

நோக்கி நடக்கலானார். தடைகாட்டிய குறியையும் தாண்டி வண்டியைச்செலுத்தியது பெரிய குற்றம் என்பதை அவர் நினைத்ததாகத் தோன்றவில்லை.

பாலம்வரும் வரையில் குனிந்து தண்டவாளங்களைக் கவனித்தவண்ணம் நடந்தார். ஜனங்களும் வேகமாய்ப்பின் தொடர்ந்தார்கள். பிறகு என்னநடந்தது? பாலத்தின்மேல் லைனுக்குப்பக்கத்தில் நீட்டிக்கொண்டிருந்த கட்டைகளின்மீது டக் டக் கென்று நிதானமாக நடக்கலானார். சுமார் பத்துக்கட்டைகளை இவ்விதம் தாண்டியதும், அப்பா நினைத்தாலே நெஞ்சுநடுங்குகிறது! இவ்வளவு ஜனங்களும் பார்த்திருக்கையில், ஏதோ வீடுவந்து சேர்ந்தவர் வாயிற்கதவு திறந்திருந்தால் சாதாரணமாக உள்ளேநுழைவது போல், துளிக்கூடத் தயங்காமல் தண்ணீரில் மின்னலைப் போல் இறங்கிவிட்டார்.

ஜனங்கள் ஸ்தம்பித்துப் போனார்கள், இதென்னவிந்தை ஐயா! இவ்விதமும் ஒரு ஸ்வயபுத்தியுள்ள மனிதன் செய்வானா? ஏதோ மரணத்தை நோக்கி ரயிலை ஓட்டி வந்தவன்போல், நிதானமாக எவ்வளவு எளிதாய்த் தன் உயிரைப் போக்கிக்கொண்டான்!

பலபேர் பலவிதம் பேசிக்கொண்டார்கள். Barrier signal ஐத் தாண்டி வண்டியை ஓட்டியது குற்றம் என்பதைஉணர்ந்த கணத்தில் அவருக்குப்புத்தி பேதளித்துவிட்டது; அந்நிலையில் செய்வதின்னதென்று தெரியாமல் ஆற்றில் இறங்கிவிட்டார் என்றார் சிலர்.

ஓ! அதெல்லாம் இல்லை. அவருக்கு கடன்உபத்ரவம் நிறைய உண்டு. ரிடயர் ஆகும் சமயமும் நெருங்கிவிட்டது; இந்நிலைமையில் இக்குற்றச்சாட்டின் அவமானமும் தன்னைச்சேர்ந்தால் பண நஷ்டம், மானநஷ்டம் ஏற்படுமே, இவற்றைச்சமாளிப்பதற்குப் பதிலாகத் தற்கொலை புரிந்து கொள்வோமென்று உயிரைவிட்டார் என்றார் மற்றும் சிலர்.

மறுநாள் முழுவதும் பாலத்தடியில் 40 அடி ஆழமுள்ள பிரும்மாண்டமான பள்ளத்தைத்துருவித் தேடிப் பாவம், அவருடைய உடலை எடுத்தார்கள். அவயவங்களை மீன் அரித்திருந்தது. ஜேபியில் அவருடைய கடிகாரமும், அதன் சங்கிலியில் தொங்கிய ஒரு ஐரோப்பிய மாதின்உருவங்கொண்ட தொங்கட்டமும் கெட்டுப் போகாமல் கிடைத்தன! இவைகளுக்கு அழிவு இல்லை போலும். மனிதனே அழிவு, சாவு, மாறுதல்களுக்கு ஆளாகிறான்.

* * *

மேலே சொன்ன கதைக்கும் இனி நான் (காமாக்ஷி) சொல்லப் போவதற்கும சம்பந்தமுண்டென்றாலும், முதலில் சற்று விளக்கவேண்டும்.

பல்சார் குஜராத்தில் அழகிய ஒரு சிறு கிராமம், இயற்கையின் முழு வனப்பை நீங்கள் அங்கே கண்குளிரக் காணலாம். நாற்புறமும் தண்ணீர் சூழ்ந்த கிராமம். மூன்று மைலுக்குள் சமுத்திரமும் இருந்தது; அந்த இடத்தைத் தித்தல் என்று சொல்வார்கள். முக்யமாக மாலுமிகளும், செம்படவர்களும் அங்கே வசித்தார்கள். தித்தலுக்குச் செல்லும் வழியிலேயே வாங்கி என்கிற நதியும் குறுக்கிடுகிறது. மொத்தத்தில் ஊருக்கு இரண்டு மைலில் எத்திசையிலும் நாம் தண்ணீரைச் சந்திக்கலாம்.

இதை நான் எழுதும் சமயம் குஜராத்தில் ரயில்வேக்கள் தோன்றிச் சுமார் 75 வருடங்கள் இருக்கும். என் கணவர் இங்கே வேலைக்குவந்து ஒரு வருஷமாகிறது. பெரிய வீடு ஒன்று எங்களுக்காக ரயில் வேக்காரர் கொடுத்திருந்தார்கள். அவ் வீட்டின் மகிமையைப் பற்றிப் பின்னால் எங்களுக்குத் தெரியவந்தது.

வெகுநாள் முன்பு ஒரு பெரிய உத்யோகஸ்தர் அவ்வீட்டில் வசித்தாராம்; அவர் காலத்திற்குப்பின் அவ்வீட்டிற்கு யாரும் குடி வர மறுத்தார்களாம்; ஆனால் என் கணவர் மட்டும் ஒன்றையும் காதில் போட்டுக்கொள்ளாமல் என்னை அழைத்துக்கொண்டு அங்கே குடிவந்ததாக எல்லோரும் சொன்னார்கள்.

நான் இதை மனதில் வைத்துக்கொண்டு என் கணவரிடம் சண்டைக்குப் போனேன். அவரோ, "அடி போடி, அசடு. தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்த்த சங்கதியாக நீ பேசுகிறாய். இவ்வளவு பெரிய வீடும், வசதிகளும் நமக்கு வேறு எங்கேயாவது கிடைக்குமா? நீயே யோசித்துப்பாரு. ஊருக்குள் எவ்வளவு ஊமூலாக இருக்கிறது, பார்த்தாயா? இங்கேயோ, நீயும் நானும் ராஜா ராணி போல் வசிக்கிறோம். உனக்கென்ன குறை?" என்று சொல்லி என் வாயை மூடிவிட்டார்.

அவர் சொன்னதெல்லாம் வாஸ்தவம் தான். இளங்கன்று பயமறியுமா? நாங்கள்

உற்சாகமாய்ப் புதுக் குடித்தனம் செய்ய ஆரம்பித்தோம், எங்களுடைய சௌகரியத்திற்கு ஒரு குறைவுமில்லை. அவர் ஆபீசுக்குப் போய்வர ஒரு குதிரை; 4, 5 வேலையாட்கள், வீட்டைச்சுற்றி விசாலமான தோட்டம், குதிரைலாயம், தண்ணீர் வசதி இவையெல்லாம் இருந்தன. மொத்தத்தில் அவர் சொன்ன மாதிரி எனக்கு ஒரு குறைவுமிருக்க ஞாயமில்லை.

ஆனால் பங்களாத் தோட்டத்தில் பெரிய நாக சர்ப்பங்கள் நிறைய இருந்தன, அனேக நாட்களில் இரவில் பாராக்காரன் -இவனைச் சௌகிதார் என்பார்கள்–லோந்து சுற்ற ஆரம்பிக்க வேண்டியதுதான் தாமதம்; மறு நிமிடம் வாசலுக்கு வந்து, "பாய்ஸாஹப், பாம்பு, கொன்றுவிட்டேன்" என்பான். ஒரு கையில் விளக்கையும் ஒரு கையில் பாம்பின்வால் நுனியையும் பற்றி அவன் நிற்கும் கோலத்தைக் கண்டதும் என் கணவர் சிரிக்க ஆரம்பித்து விடுவார்.

அவனைப் போகச் சொல்லி விட்டு, "காமாக்ஷி, இவனை நம்பாதே. தன் சம்பளத்திற்குத் தகுந்த வேலை செய்வதாய்க் காண்பிப்பதில் இவன் மிக்க கெட்டிக்காரன். அந்தக் கவலைகொண்டு தினமும் ஒரே பாம்பை நமக்குக் கொணர்ந்து காண்பிக்கிறான்; இங்கே பாம்புகளே கிடையாது" என்பார்.

என்னைத் தைரியப்படுத்த அவர் அவ்விதம் பேசுகிறார் என்பதை நான் அறிவேன். ஆனால் இப்பிரதேசம் பாம்பு நிரம்பியது என்பதையும் நான் நன்றாக அறிந்திருந்தேன். இல்லாமற்போனால் பங்களாவிற் கருகாமையில் ஒருவிதமான செடி செட்டு இல்லாமல் காலியாக வைத்திருப்பார்களா? மேலும் வீட்டைச்சுற்றி, சுவரோரமாகக் கரடுமுரடான கற்களை எதற்காகப் பரப்பி வைத்திருந்தார்கள்? நான் என்னவோ பாம்பைக் குறித்து அதிகமாகப் பயப்படவில்லை.

என் சிந்தனையைக் கிளப்பி நான் தனியேயிருந்த சமயங்களில் ஒருவிதமான சங்கடத்தை எனக்களித்தது இவ்வீட்டில் வேறொரு விஷயம். அதை என் கணவரிடம் நான் அதிகமாகச் சொல்லவேயில்லை.

பெரிய பங்களாவென்று சொன்னேனல்லவா? எங்களுக்குத் தேவையான ஒரு பக்கத்து அறைகளை மாத்திரம் உபயோகத்தில் வைத்துக்கொண்டிருந்தோம். மற்றொரு பக்கத்தைப் பூட்டியே வைத்திருந்



## குலதனம்

போலக் கேச தனமும், சில குடும்பங்களில் பரம்பரையாக வருவதுண்டு. கேச தனம் படைத்தவர், அது நஷ்டமாகாமல் கேசவர்த்தினியைக் கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியைக் கொண்டு அதை அடையுங்கள். சிறு வயது முதல் கேசவர்த்தினி ஒன்றையே உபயோகித்து வருவதால், இள நரை வழுக்கைகளைத் தடுத்துக் கேச ஆரோக்கியத்தையும் கேச சம்பத்தையும் தவறாமல் பெறுங்கள்.

மெலிந்து இளைத்த சிறுவனும் தேகப் பயிற்சி ஆகாரங்களால் பருத்து அழகிய சதைக் கட்டைப் பெறுவது போல, அற்ப கூந்தல் படைத்தவரும் கேசவர்த்தினியைக் கொண்டு அபரிமிதமான கூந்தலைப் பெறலாம்.

குழந்தையின் கூந்தலைக் கேசவர்த்தினிகொண்டே விருத்திசெய்யுங்கள்.

# கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

**விலை அணா 12**

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

**தென் இந்திய ரஸாயன சாலை**

**கோயமுத்தூர்.**

போலிகளை வாங்கி மோசம் போகாதீர்கள். ''கேசவர்த்தினி தென்னிந்திய ரசாயன சாலை'' என்ற பெயர்களைக் கவனித்து வாங்குங்கள்.

தார்கள்; சாவியும் எப்பொழுதும் அவ்வறைகளின் வெளிக்கதவில் தொங்கிக் கொண்டிருக்கும்.

பொழுது போகாமல் திண்டாடும் வேளைகளில் என்னை மீறிய ஆவலினால் தூண்டப்பட்டு நான், பூட்டிக்கிடந்த இவ்வறைகளிற் புகுந்து, பரிசிலனை செய்வேன். சில நிமிடங்களில் என்னையே மறந்துபோய், 40 வருடங்களுக்குமுன் இங்கு வசித்த ஸ்காட் துரையின் மனைவி தெரிசா, அவர்களுடைய குழந்தைப் பெண் மாரி இவர்களுடன் உரையாடுவேன். என்னைப் பைத்தியமென்று எண்ணுகிறீர்கள் அல்லவா? செய்கைக்குக் காரணம் இருந்தது. சொல்கிறேன்; கேளுங்கள்.

நாற்பது வருட முன்பு இவைகளில் வசித்தவர் எந்த ஸ்திதியில் இதை வைத்திருந்தனரோ அதே நிலைமையில் இன்றளவிலும் இவ்வறைகள் பத்திரமாய்க் காக்கப்படுகின்றன. உள்ளே நுழைந்ததும், ஒருவகையான மக்கல்வாசனை வந்து நாசியில் மோதும்; ஆனால் அதிலேயே ஓர் இன்பமனுபவிக்க நான் சிக்கிரத்தில் கற்றுக் கொண்டேன். ஆரம்பத்தில் உள் நுழைந்ததும், துரிதமாக வெளியில் வந்துவிட வேணுமென்கிற எண்ணம் மனதில் இருக்கும்; வரவர அந்த உணர்ச்சி குறைந்து போய் அத்தனிப்பட்ட உலகின் ஒவ்வொரு பொருள் மீதும் ஆவலுடன் கூடிய என் சிரத்தை விழுந்து, பெருஞ் சிந்தனையைக் கிளப்பி, அதிலேயே லயித்தவளாய் மணிக்கணக்கில் அங்கே சுற்றிவரத் துவக்கினேன்.

ஆ! அந்த இரட்டைக் கட்டில்கள். பாம்பின் படத்தை ஒத்த அதன் அஸ்மானகிரி, அழகிய பட்டுத் திரைகள்; அருகாமை குழந்தை மாரியின் சிறிய உயரமான கட்டில்; பக்கத்தில் மேஜை. ஆ! அந்த எதிர் சுவரில் ஸ்காட்துரையும் அவர் மனைவியும் ஒருவரை ஒருவர் தழுவி நின்ற கோலத்தில் தீட்டிய வர்ணச் சித்திரம்; இவைகளும் இன்னும் எண்ணற்ற தினசரி உபயோகிக்கும் வஸ்துக்களும் அவ்வறை முழுவதும் சிதறிக்கிடந்தது, வெகுநாள் முன்பு அங்கே நிகழ்ந்த சம்பவங்களை ஒரு கண்ணாடிபோல் நம்முன் சித்திரித்துக்காட்டவில்லை? கூரிய என் சிந்தனைக்கு அவை ஒவ்வொன்றும் ஒரு கதையைத் தெரிவித்தன.

நான் ஒவ்வொரு பொருளையும் கையில் எடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்ப்பேன்; என் ஆவலின் மூலம் ஸ்காட் துரையின் வாழ்க்கையைக் கதைகட்ட முயலுவேன்.

இவை தவிர. அறையின் ஒரு கோடியில் கிடந்த ஒரு மேஜையின் டிராயரில் அனேக கடிதக் கட்டுகள் திணித்திருந்தன, முதலில் இவைகளைக் கையில் எடுக்கவும், படிக்கவும் கையும் கண்களும் கூசின. என்றாலும் ஒரு நாள் தைரியமாக அவைகளை எடுத்துப் படித்தேன்.

அதிலிருந்து என் மனதிற்குப் புலப்பட்ட விஷயங்கள் அனேகம். ஸ்காட் என்பவர் ரயில்வேக்கள் தோன்றிய காலத்தில் இந்நாட்டிற்கு இங்கிலாந்திலிருந்து வந்தாராம், தமது இருபதாவது பிராயத்தில் வந்தவர். சுமார் முப்பது வருடகாலம் கலியாணமின்றி இந்தப் பங்களாவில் தனி வாழ்வு நடத்தியிருக்கிறார். பிறகு ஒருமுறை அவர் சீமைக்குச் சென்று கட்டழகியான ஒரு இளம் பெண்ணைத் தம் மனைவியாக்கிக் கொண்டு திரும்பினார்.

பிறகு இரண்டு மூன்று வருஷங்களுக்கெல்லாம் அவர்களுடைய ஒரே குழந்தையான மாரி பிறந்தாள். அவளைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்ததும், தலைசிறந்த காதலராய் அவர்கள் விளங்கியதும் இன்னும் கணக்கற்ற இதுபோன்ற விஷயங்களும் நான் இக்கடிதங்களின் மூலம் அறியலானேன்.

இவைகள் யார் யாருக்கு எழுதியவை? ஆ! ஸ்காட் துரை வேலைமீது செல்லும் நாட்களில், தம் அருமைக் காதலி தெரிசாவுக்கு, தினசரிக் குறிப்புக்களாக, ஆனால் கடித ரூபத்தில் எழுதிக் குவித்தவை. ஐயோ பாவம்! அவர் தம் இளம் மனைவியை தேவதைக்கொப்பாக மதித்தார், உயிரைப் போல் நேசித்தார் என்பதையெல்லாம் என் கண்ணீருக்கிடையே நான் படித்தேன். இவர்களை நினைக்கும்போது ஏனோ எனக்கு மிக்க பரிதாபமாக இருந்தது.

தெரிசாவின் கைப்பட எழுதிய கடிதங்கள் அங்கே ஒன்றுமில்லை, ஆயினும் அவள் தன் வயதான கணவனை ஆர்வத்துடன் நேசித்தாள் என்பதை அத்தாட்சியில்லாமல் அங்கேயுள்ள சூழ்நிலையால் நான் உணர்ந்தேன். அவளுடைய முகத்தைத்தான் அவ்வர்ணப்படத்தில் பாருங்களேன்! பால் வடியும் முகத்தின் அப்பேதைமையும், நீல நிற விழிகளின் சாந்தமும் அவளுடைய காதலைக் குறிக்கவில்லை?

என் கணவரிடம் இதையெல்லாம் நான் அதிகமாய்ச் சொல்லவில்லை. அவரும் அடிக்கடி வெளியூருக்குச் சென்றுவிட்ட

தால் என்னுடைய இத் தனிப்பொழுது போக்கை அவர் அவ்வளவாய்க் கவனிக்க வில்லை.

நாளடைவில் இந்த அயல்நாட்டாரின் வாழ்க்கையைப் பற்றிய முழு விவரமும் அறிந்துகொள்ள வேணுமென்கிற அவா எனக்குள் அதிகமாயிற்று. இவ்வறைகளை ஏன் இவ்விதமே காப்பாற்றி வந்தார்கள்? என்ன காரணத்தினால் இவ்வீட்டிற்கு எவரும் குடிவர மறுத்தார்கள்? ஸ்காட் துரையும் அவர் மனைவியும் சீமைக்குத் திரும்பிப்போய் எவ்வளவு வருஷங் களாயின?

இதுபோன்ற அநேகம் கேள்விகள் என் மனதில் எழும். அவைகளுக்குப்பதில் நான்தான் கூறவேண்டுமே தவிர அங்கே யாரிடமும் கேட்டறிந்து கொள்ளமுடி யாது. முக்யமாகப் பாஷைதெரியாது, இவர் களோ அனைவரும் குஜராத்திக்காரர்; ஹிந் துஸ்தானி பரீக்ஷை கொடுத்திருந்த என் கணவருக்குக்கூட இவர்களுக்கு விஷ யத்தைப் புரியவைப்பது கடினமாக இருந் ததென்றால், பாருங்களேன்.

* * *

ஒருநாள்; அன்று ஆவணிமாதத்துப் பௌர்ணமி, அதோடு திங்கட்கிழமை. ''சிராவண மாதத்து ஸோமவாரம்'' என்று இங்குள்ளவர் அந்தத்தினத்தை விசேஷ மாய்க்கொண்டாடுவர். அன்றையதினம் எல்லாக் காரியாலயங்களுக்கும் விடுமுறை உண்டு. என்கணவர் மட்டில் ஏதோவேலை நிமித்தம் வெளியே சென்றிருந்தார்.

இரவு எட்டுமணி இருக்கும். நல்லநிலவு காய்ந்தது. வீட்டிற்குள்ளே புழுக்கமாக இருந்ததால் நான் வாசல் வராந்தாவில் வந்து உட்கார்ந்தேன். இந்தப்பக்கங் களில் ஆனி ஆடி ஆவணி மூன்றுமாதமும் மழைபெய்யும்; அன்றையதினம் மானம் சற்று வெளுத்து, சாரலும் மழையும் குறைந்திருந்தது.

வேலையாட்கள் சோமவாரம் கொண் டாடும் பொருட்டு விடுமுறை பெற்றுப் போயிருந்தார்கள். வீட்டில் என்னையும் சௌகிதாரையும் தவிர வேறொருவரு மில்லை. அவனுடைய தோற்றத்தைப் பற்றி உங்களுக்குச் சொல்லவில்லையே? பழம் பெருச்சாளி என்றால் அவனுக்குத் தகும்!

மீசை, தாடி, நீண்டதொரு மூக்குள்ள கம்பீரமான முகம், தளர்ந்திருந்தாலும் முறுக்கான நடை; வாயில் பற்களே கிடை யாது! இதை யெல்லாம் தோற்கடித்தது அவனுடைய குரல். அடித்தொண்டையி லிருந்து கம்பீரமாக எழும். சாதாரண மாகப் பேசும்பொழுதே ஒரு பெரிய வியாக்யானம் செய்வதுபோலத்தோன்றும். அநேக சண்டைகளில் சிப்பாயாக இருந் திருக்கிறானும். சீமைக்குக்கூடச் சென்றி ருந்ததாகப் பெருமையடித்துக் கொள்ளு வான். அவன் பெயர் ரகு நாயக், நாங்கள் அழைப்பதென்னவோ 'ரகு'என்று மட்டில்.

அன்றிரவு நான் வராந்தாவில் வந்து உட்கார்ந்ததும் சௌகிதார் தன் கைலாந்த ருடன் அங்கு வந்து வாசற்படிகளில் குந்தியவண்ணம் அமர்ந்தான். எனக்கும் தனிமை கஷ்டமாக இருந்ததால், அவனிடம் இந்தச் சோமவாரக் கொண்டாட்டத்தைப் பற்றிப் பேச்சுக்கொடுத்தேன். உடனே ஆரம்பித்துவிட்டான் தன் பிரசங்கத்தை!

''ஹா, பாய்ஸாஹப், சிராவண சோம வாரம் எங்களுக்கு நிரம்ப விசேஷம். இனி மேல் மழை அதிகமாகப் பெய்யாது. கட லில் போக்குவரத்து வியாபாரம் உள்ள வர்கள் பருவகால மழைக்குப்பிறகு, இன்று தினத்தில் முதலில் சமுத்ர பூஜை செய்து தேங்காய் உடைத்து, படகுகளை அலங் கரித்து, சமுத்திரத்தில் செலுத்துவார்கள். அதற்காக இன்று எல்லோரும் தீர்த்த லுக்குப் போயிருக்கிறார்கள்'' என்றான்.

''ஏனடா ரகு, நீங்கள் மாலுமிகளல்லவே. உங்களுக்கு ஏது கடலில் போக்குவரத்து? நீங்கள் ஏன் விடுமுறை கேட்கிறீர்கள்?'' என்று நான் கேட்டேன்.

''அரேரே, சிராவண் ஸோம்வார் தினத் தில் சகோதரிமார் எங்களுக்கு மங்கள் சூத்ரமனுப்புவார்கள். அதை நாங்கள் கையில் கட்டிக்கொள்ளுவோம். பெண் களுக்கு ஆபத்து நேரும் காலத்தில் நாங்கள் காப்பாற்றுவதாய்க் கங்கணம் கட்டிக் கொண்டோமென்பது அதன் தாத்பர்யம். சகோதரர் இல்லாத பெண்கள் தங்களுக்கு இஷ்டமான ஆடவருக்கு மங்கள் சூத்ர மனுப்புவார்கள். இந்தச் சோம்வார் எங்க ளுக்கு ரொம்ப விசேஷமானதல்லவா?'' என்று ரகு பதில் சொல்லி, தன் கையி லிருந்த மஞ்சள் சரடைத் தடவிக்கொண் டான்.

அவனுக்கு அதை எந்த ஸ்திரீ அனுப்பி னாளோ. உலகத்தாரைக் காப்பாற்றச்சண் டைக்குப் போயிருந்த சிப்பாயல்லவா அவன்! தன் சகோதரிமாரை ரக்ஷிக்கவா

அவனுல் முடியாது? வயது எழுபது ஆனல் தான் என்ன? வாயில் சாஸ்திரத்திற் கேனும் ஒரு பல் இல்லாவிடினும்தான் என்ன?

சிறிது நேரம் நான் மௌனமாக இருந்தேன். திடீரென்று ஒரு யோசனை தோன்றிற்று. ரகுவுக்கோ ஹிந்துஸ்தானி நன்ருகத் தெரிந்தது. அவனிடம் ஸ்காட்துரையின் வரலாற்றை முழுவதும் கேட்டுத் தெரிந்துகொண்டாலென்ன? இந்த எண்ணத்தை நான் தெரிவித்ததுதான் தாமதம் ரகுவுக்கு உடனே விஷயம் புரிந்துவிட்டது.

கதை சொல்லும் ஆர்ப்பாட்டத்துடன் தரைமீது பதிய உட்கார்ந்துகொண்டான். "ஹாய், ஹாய், பாய் ஸாஹப்! அந்தக் கதை உங்கள் மனதை உருக்கிவிடும். ஒருவேளை ஸாஹப் வந்தால் என்னைக்கூடத் திட்டுவாரோ என்னவோ" என்று லேசான ஆக்ஷேபணையும் கூறினன்.

இதெல்லாம் அவன் மேலுக்குச்சொல்லும் வார்த்தை; கதை சொல்வதிலுள்ள அவனுடைய ஆசையை அச்சமயம் நான் தூண்டிவிட்டிருந்தேனென்பதை நன்ருக அறிந்துகொண்டேன்! இவ்வளவு நாளாக என்னைத் துளைத்துக்கொண்டிருந்த ஆவல் திரும்படியான சமயமும் கிட்டிவிட்டது.

எனவே; "பரவாயில்லை ரகு, நீ சொல்லித்தான் ஆகவேண்டும். ஏன் இந்த அறைகளை இப்படியே வைத்திருக்கிறீர்கள்? எப்பொழுது அவர்கள் சீமைக்குத் திரும்பிப் போனுர்கள்?" என்று அவனைத் தூண்டிக் கொடுத்தேன்.

"அவர்கள் சீமைக்குத் திரும்பிப்போகவேயில்லை. பாய் ஸாஹப்; இங்கேயே மரித்துப்போனுர்கள். இன்று ஐம்பது வருட முன்பு இந்த வீட்டில் ஒரே கூத்தும் கேளிக்கையுமாக இருந்தது. ஒருநாள் அவ்வளவும் திடீரென்று நின்றுபோயிற்று. இந்த பல்சார் மண்ணில் அவர்கள் உடலும் மக்கிக் எந்நாளோ ஆகிவிட்டதே" என்று துக்கித்தான் ரகு.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆச்சர்யத்தினுல் விழித்தேன். ரகு பேசாமல் கை விளக்கை எடுத்துக்கொண்டு எழுந்தான். தன்கூட வரச்சொல்லி எனக்குச் சைகை காண்பித்துவிட்டு, தோட்டத்தில் நடக்கலானுன். நானும் அவனைப் பின் தொடர்ந்தேன்.

பங்களாத் தோட்டத்தின் விஸ்தீர்ணம் இரண்டு ஏக்ரா. நிறையப் பழமரங்களும் பூஞ்செடிகளுமாய் அடர்ந்த காடு. அதில் வெகுதூரம் பூஞ்சோலையின் மத்தியில் என்னை அழைத்துச் சென்ற ரகு அங்கு எதிர்ப்பட்ட ஒரு வலைக்கதவைத் தன்னிடமிருந்த சாவியால் திறந்து உள்ளே நுழைந்தான். சுமார் ஐம்பதடி விஸ்தீர்ணத்தில் சலவைக் கற்கள் பதித்த பெரிய மேடை ஒன்று தென்பட்டது. அதன் மத்தியில் மூன்று அழகிய கல்லறைகள் கருங்கல்லால் அமைக்கப்பட்டு கம்பீரமாய் விளங்கின. அவைகளின் ஒரு பக்கத்தில் அகல் விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

கல்லறையின் பேரில் அன்று மலர்ந்த புஷ்பங்கள் நிறைய வர்ஷித்திருந்தன.

இக்காட்சியைக் கண்ட நான் மெய் சிலிர்த்துப் போனேன். ஐயோ பாவம்! என் அந்தரங்க நண்பர்களான இம்மூவரும் இதே தோட்டத்திலா சமாதியில் இருக்தார்கள்? மௌனமாக நின்ற ரகுவின் குழி விழுந்த கண்கள் நீரைப்பெருக்கின. அவனது சுருங்கின கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது அந்நிலவொளியில் மின்னிற்று.

மௌனமாய் நாங்கள் வந்தவழியே திரும்பினேம். வராந்தாவில் வந்து அமர்ந்ததும், என் ஆவல் பன்மடங்கு அதிகரித்தது. "ரகு, ஏன் இவர்கள் இறந்தார்கள்? ஒரே நாளிலா? என்ன வியாதி கண்டது இவர்களுக்கு?" என்ற கேள்விகளை உளறிக் கொட்டினேன். என் மனமும் தேஹமும் பதறின.

"அச்சா பாய்ஸாஹப், கேளுங்கள் கதையை. முன்பு ஒருநாள் இதேபோல் ஸ்காட் துரைசானி இந்த நாற்காலியில் அமர்ந்து தையல்வேலை செய்து கொண்டிருந்தாள். மாரி பாய்ஸாஹப் விளையாடிக் கொண்டிருந்தாள், துரைக்கு என்ஜின் ஓட்டுவது வேலை. அன்று குஜராத் மெயில் பம்பாய்க்குப்போக வேண்டியிருந்ததால். முதல் நாளே புறப்பட்டுப் போய்விட்டார்.

பல்சாருக்கு குஜராத் மெயில் வரும்போது இரவு பதினெருமணி அடித்துவிடும். ஒரு நிமிஷ நேரமே இந்த ஊரில் நிறுத்துவார்கள். அப்போது, பாய்ஸாஹப் குழந்தையைத்தூங்க வைத்துவிட்டு, ரயில்வேஸ்டேஷனுக்குப்போய், புருஷனைப்பார்த்துவிட்டு, காஞவும் கொடுத்து வருவார்கள்,......

"ஏண்டா ரகு, ஒரு நிமிஷநேரத்தில் என்னடா பார்ப்பது. என்னடா பேசுவது?" என்று நான் குறுக்கிட்டேன்,

"ஆம் அம்மா. பாய்ஸாஹப் தயாராக இஞ்ஜின் நிற்கப்போகும் இடத்தில் போய் நிற்பார். ரயில் நின்றதும் துரை கீழே குதித்து ஒரு கையால் பாய்ஸாஹப்பைத் தழுவிக் கொள்ளுவார். அதற்குள் நான் கானுவை உள்ளேவைத்து விடுவேன். அந்த ஒரு நிமிடத்திற்குள் அவர்கள் என்ன வெல்லாமோ பேசி விடுவார்கள். பிறகு ரயிலும் கிளம்பிவிடும். அது கண்ணுக்கு மறையும் வரை பார்த்துவிட்டு, நாங்கள் வீடு திரும்புவோம்.'' என்று ரகு பதில் கூறினான்.

பிறகு கதைமீண்டும் ஆரம்பமாயிற்று. "நான் மேலே சொன்ன தினத்தில் இதே போல் சிராவண ஸோம்வார்; அதோடு பூர்ணிமா—வீட்டில் என்னையும் ஸ்காட் பாய்ஸாஹப் உம் தவிர ஒருவருமில்லை. குஜராத் மெயில் வரும் வேளைக்கு இன்னும் அதிக நேரமிருந்ததால் துரைசானி வராந்தாவில் உட்கார்ந்து ஏதோ தைத்துக்கொண்டிருந்தாள்.

அச்சமயம் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த மாரி பாய்ஸாஹப் திடீரென்று ஒரு கூச்சல் போட்டுத் தரையில் விழுந்தாள். நாங்கள் ஓடிப்போய் அவளைத் தூக்கினோம். ஹாய், ஹாய், என்னத்தைச் சொல்வது அம்மா—குழந்தையின் காலைச்சுற்றிக் கடித்துக்கொண்டு ஒரு பெரிய ஸர்ப்பம் தொங்கிற்று. அதன் விஷம் அதி சீக்கிரத்தில் தலைக்கேறி குழந்தை மயக்கமுற்றாள். பாம்பை அடித்தோம்.

எங்களுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கிட்டத்தில் சகாயம் தேடுவதற்கு ஒருவர் வீடும்இல்லை. துரைசானி பைத்தியம்பிடித்தவள் போல ஆகிவிட்டாள்; அங்குமிங்கும் ஓடித் தலைமயிரைப் பிய்த்துக் கொண்டாள். பிறகு திடீரென்று ஒரு கத்தியை எடுத்துக் குழந்தையின் காலைக் குத்திக் காயப்படுத்தி அதிலிருந்து பீறிட்டு வழிந்த ரத்தத்தைக் குடிக்கத் தலைப்பட்டாள். சரி, இவளுக்கு மூளை குழம்பிப் போய்விட்டதென்று நான் நிச்சயித்துக் கொண்டேன்.

துரைசானியை இழுத்துப் படுக்கையில் படுக்க வைப்பதற்குள் என் பாடு தீர்ந்து



போயிற்று. இதற்குள் குழந்தையின் ஆவி பறந்துபோய், அவள்தன் துவண்டுபோன உடல் கீழே கிடந்ததை என்னால் கண்டு சகிக்க முடியவில்லை.

இதுகாறும் கத்திக் கூச்சல் போட்ட துரைசானி படுக்கையில் படுத்ததும் வாய்ப் பேச்சற்றுக் கிடந்தாள். குழந்தையைக் கட்டிலில் கிடத்திவிட்டு இவ்விடம் வந்து சங்கதியைத் தெரிவித்ததும் அவள் ஆவேசம் கொண்ட மாதிரி எழுந்தாள்; குழந்தையின் அருகில் படுத்து, அவளுடலைத் தழுவிய வண்ணம், தங்கள் மேல் ஒரு போர்வையையும் இழுத்து மூடிக்கொண்டாள்.

நான் பயந்து நடுங்கிப் போனேன். உள்ளே ஓடிப்போய், துரைக்காகத் தயாராக வைத்திருந்த கானு பெட்டியைத் திறந்து பிராந்திப் புட்டியைக் கொண்டு வந்தேன். அப்பொழுது பாய்ஸாஹப் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள். என்னை அருகில் அழைத்து, "பிரயோசனமில்லை, ரகு! ஸாஹப்பிடம் ரயிலில் போய்ச்சொல்லு. குழந்தையின் விஷத்தை உறிஞ்சி உமிழ்ந்துவிட நினைத்தேன்; ஆனால் அதே விஷம் என்னையும் கொன்றுவிட்டது. இனிப் பிழைக்கமாட்டேன். ஸாஹப்புக்கு ஸலாம்சொல்லு. ரகு...... மேலும், இந்தப் பங்களாவிலுள்ள எல்லா ஸர்ப்பங்களையும் நீ கொன்றுவிடுவதாக ஸத்யம் செய்." என்றுசொல்லி என்னிடம் கையை நீட்டினாள்.

நான் என்ன சொல்லுவது? அப்படியே அவளுக்குச் சபதம் செய்துகொடுத்தேன்! அவளுக்குப் பைத்தியம் பிடித்ததாக நினைத்தேனே என்று என்னையே நொந்து கொண்டேன். குழந்தையைக் காப்பாற்றும் வெறியிலல்லவா அவள் விஷம் கலந்த ரத்தத்தை உட்கொண்டு விட்டாள்! எந்தத் தாயின் சேயன்பு இதைவிட மேலானதாக இருக்கக்கூடும்?

சிறிது நேரத்திற்கெல்லாம் ஸ்காட் பாய் ஸாஹப் தன் கண்களை மூடிக்கொண்டாள். "கடவுளே, இவர்கள் அந்திய காலத்தைக் காண்பதற்கோ எனக்குக் கண்கள் படைத்தாய்? ஹாய், ஹாய்."

ரயில் வருவதற்கு இன்னும் நேரமிருந்ததால் அறையைச் சுத்தம் செய்து, இரு உடலையும் ஒழுங்கு படுத்திவிட்டு ஸ்டேஷனுக்குச் சென்றேன். ஸாஹப்பிடம் என்ன சொல்வேன்? ஸ்டேஷன் மாஸ்டரிடம் முதலில் செய்தியை ஒரு வகையில் தெரிவித்துவிட்டு ரயிலுக்காகக் காத்திருந்தேன்.

அன்றிரவு பல்சாருக்கு, குஜராத் மெயில் வருவதற்குச் சிறிது தாமதமாயிற்று. வழியில் உடைப்பு எடுத்து, துரை மிக்க சிரமப்பட்டு வண்டியை ஓட்டி வந்திருந்தார். பல்சாரில் வண்டி நின்றதும் என்னை மட்டும் ஸ்டேஷனில் கண்டார். "க்யா ஹை ரகு?" என்று என்னைப் பார்த்ததும் அவர் போட்ட கூச்சலை நான் இன்றளவிலும் மறக்கமாட்டேன்.

"காலா ஸாம்ப் ஸாஹப்" என்று சொல்வதற்குள் எனக்குத் தொண்டையை அடைத்துக்கொண்டு பேச்சே வெளிக்கிளம்பவில்லை. ஸ்டேஷன் மாஸ்டர் என் உதவிக்கு வந்து துரையிடம் இக்கோரச் செய்தியைச் சொல்லி விளங்க வைத்தார். அம்மாடி! அவருடைய தைரியந்தான் என்ன? அசையாமல் இச்செய்தியைக் கேட்டுக்கொண்டவர், எங்களைத் திரும்பிப் பாராமல் ரயிலில் ஏறி இன்ஜினை ஓட்ட ஆரம்பித்துவிட்டார். நான் அயர்ந்து போனேன். என்ன கல் நெஞ்சு இம்மனிதனுக்கு!

இவர் எப்படி வண்டியை ஓட்டுவார்? கைகள்தான் நடுங்காவோ? எதிரேயோ பார்தி நதியின் பிரவாகம் பேரிரைச்சலுடன் போகிறது. அதன் காட்சி, இருபுறமும் கதிகலக்குவதாயிருந்தது.

ஹாய், ஹாய், பாய் ஸாஹப்! இனி என்ன சொல்லுவது? வண்டி புறப்பட்ட பதினைந்தாவது நிமிஷம் துரை தம்முடைய அந்திக் காலத்தை எட்டிப் பிடித்துவிட்டார். பார்தி நதிப்பாலத்தின்மீது வண்டியை நிறுத்திவிட்டு, கூசாமல் நதியில் இறங்கிய அவருடைய செய்கையை என்னவென்பது? கோரமான செய்தியைக் கேட்டுச் சமாளித்துக்கொண்டவர், அடுத்த நொடியில் கோழையைப்போல் ஏன் உயிரைத் துறக்க வேண்டும்? நேச மனைவியையும் அருமை மகளையும் எடுத்து அடக்கம் செய்து, பிறகாவது உயிரைவிடக்கூடாதா? அவர்களனைவர்க்கும் ஸம்ஸ்காரம் செய்யும் வேலையை இந்தப் பாபியின் கையிலல்லவா விட்டுச் சென்றார்?" என்று துக்கித்தபடி ரகு கதையை முடித்தான்.

நான் கற்சிலைபோல் அமர்ந்துவிட்டேன். ரகுவை ஆயிரம் கேள்விகள் கேட்க மனம் துடித்தது; நாவோ பேசும் சக்தியை அறவே இழந்துவிட்டது. என் கண்ணெதிரே மாரியும், ஸர்ப்பமும், தெரிசா ஸ்காட்டின் அழகிய உருவமும் அந்தக் கோரமான பௌர்ணமி இரவும், இந்த

வீட்டில் சிலமணி நேரத்திற்குள் நிகழ்ந்த படுகளமும் இன்று நடப்பதுபோல் தோன்றின. அவ்வேளையின் பயங்கரம் இன்றளவிலும் என் மனதை விட்டு அகலவேயில்லை.

"ரகு பிறகு என்னப்பா நடந்தது? இந்த வீட்டை யார் இப்படியே வைத்திருக்கிருர்கள்? கல்லறைகளைக் கட்டியது யார்?" என்றேன், ஈனஸ்வரத்தில்.

"எல்லாம் இந்தப் பாவிதான் பாய் ஸாஹப்! அப்பொழுதும் நானே இங்கு சௌகிதார்—என் இஷ்டத்திற்கு விரோதமாய் ஒருவரும் நடக்கமுடியாது. மறுநாள் மாலையில் ஸாஹப்பின் உடலைக் கொணர்ந்தார்கள். மூவரையும் அலங்கரித்து, கட்டிலில் படுக்கவைத்து, மூன்று தினங்கள் இந்த ஆத்மா காவல் புரிந்தது. பிறகு பங்களாத் தோட்டத்தில் கல்லறை தயாரித்து, புனித உடல்களை அடக்கம் செய்தேன். அவருடைய கடிகாரத்தையும் பாய் ஸாஹப்பின் சிறிய உருவப் படத்தையும் அடையாளமாக நான் இப்போதும் வைத்திருக்கிறேன்." என்று சொல்லி, தன் சுருங்கிய கையால் ஜேபியிலிருந்து அவற்றை எடுத்து என்முன் நீட்டினுன்.

ஆம் அதே அழகிதான்! தன் நீலநிறக் கண்களால் அமைதியாக என்னை நோக்கிப் புன்னகை புரிந்தாள். "ஐயோ, தெரிசா ஏனடி அம்மா, உன்கதி யிப்படி ஆயிற்று?"

"இனி ஒரு வேலை மட்டும் இந்த ஆத்மாவிற்குப் பாக்கியிருக்கிறது, பாய் ஸாஹப்" என்ருன் ரகு.

"என்னப்பா அது?"

"பங்களாத் தோட்டத்திலுள்ள ஸர்ப்பங்கள் அனைத்தும் இந்தக் கையால் உயிர் துறக்கவேண்டும். அதன் பிறகே என் ஆத்மா பரம்பொருளிடம் போய்ச் சேரும்; முன்புபோல் அவ்வளவு சர்ப்பங்களை இங்கே நான் இப்பொழுது காண்பதில்லை. எல்லாம் மரித்துப்போய்விட்டன பாய் ஸாஹப்" என்ருன்.

* * *

என் கண்ணீர் பெருகி ஓடிற்று; நித்திரையின்றி விழித்திருந்த என்னை என் கணவர் வந்து கண்டார். என் மனக்கிளர்ச்சியில் அவரை ஒரே பிடியாய்ச் சேர்த்துக் கட்டிக்கொண்டேன்.

"காமாக்ஷி! உனக்கென்னடி வந்து விட்டது. இப்போ?" என்ற அவரது இன்மொழிகளைக் கேட்டதும் கண்கள் மீண்டும் நீரைப்பெருக்கின—இவ்வுலகில் என் கணவரையும், மாசற்ற அவரது அன்பையும் பெற்றிருந்த என் அதிருஷ்டத்தை எண்ணி என் கண்கள் பொழிந்த ஆனந்தக்கண்ணீர்! வெகு நேரம் வரையில் அவர் மார்பில் சாய்ந்து விழித்த பிறகு அமைதியடைந்தேன்.

ஆயினும் மனத்துள் ஒரு பெரும்பாரம் வந்து இறங்கியது போல் இருந்தது; இரவு முழுவதும் கண் விழித்துப் பொறுமையுடன் பேசி எனக்கு ஆறுதல் தந்து என் மனச்சுமையைக் குறைப்பதற்கு என் கணவர் அரும்பாடு பட்டார்.

இதுகாறும் பூட்டிக்கிடந்த அறைகளின் விஷயமாக நான் அறிந்திருந்ததைப் பூராவும் அவரிடம் சொன்னேன். முழுக்கதையையும் கேட்ட பிறகு அதன் சோகம் அவரையும் சிறிதளவு ஆட்கொண்டது.

அதன் பயனுய் அவரிடம் ஒரு முக்ய மாறுதலேற்பட்டது! சௌகிதார் ரகு நாயக்கை ஸர்ப்பங்கள் விஷயமாய்க்கேலி செய்வதை அடியோடு நிறுத்தி விட்டார். ஸ்காட்துரை உபயோகித்த அறைகளைத் திறந்து அச்சாமான்களை வீடு முழுவதும் பரத்திப்போட்டார். வெளிச்சமும், புழக்கமும் ஏற்படவே வீட்டின் சூழ் நிலையே வேறுவிதமாக மாறிவிட்டது. நாளடைவில் என் மனதிலும் சாந்தி பிறந்தது.

நாங்கள் அப்பக்கங்களை விட்டுத் தெற்கே திரும்பி வெகு நாட்களாகிவிட்டன. ஆயினும் இந்த ஞாபகம் மட்டும் மாறவேயில்லை; பசு மரத்தாணிபோல் என் உள்ளத்தில் பதிந்துகிடக்கிறது. ஸ்காட்களின் கல்லறைகளும் இன்றளவிலும் அவ்விதமே யிருப்பதாய்க் கேள்வி. ஆனல் சௌகிதார் ரகு நாயக் மரித்துப்போய், அவனுடலும் அந்த பல்சார் மண்ணில் மக்கியபின் எண்ணற்றதினங்கள் ஆகியிருக்கவேண்டும். அவனுடைய காலத்திற்குப் பிறகு பல்சாரில் நாகஸர்ப்பங்களையே காண முடியவில்லையென்று சொல்லிக் கொள்கிருர்கள். உண்மையாக இருக்குமோ? அதெப்படிப்போனல் நமக்கென்ன? ரகு நாயக்கைப்போல் கதை சொல்லக்கூடியவர் இவ்வுலகில் தற்சமயம் யார் இருக்கிருர்கள்? இனிப் பிறந்தல்லவா ஆக வேண்டும்?

# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபிஸ்: மாயவரம் — ஹெண்ட்ரல் ஆபிஸ்: மதராஸ்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | | ரூ. 25,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ... | ரூ. 18,75,000 |
| ரிஸர்வ் ப்ண்டு | ... | ரூ. 7,75,000 |
| மொத்த ஆஸ்தி | ... | ரூ. 5 கோடிக்குமேல் |

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைளுபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பேரியமேட், திருவல்லிக்கேணி

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | திருநெல்வேலி ஜங்ஷன் | ராமநாதபுரம் |
| அனகாபள்ளி | சாலூர் | திருச்சிறுப்பள்ளி | மதுரை |
| அம்பாசமுத்திரம் | சிதம்பரம் | திருவாரூர் | மாருடேரு |
| ஆம்பூர் | சித்தூர் (கொச்சி) | தென்காசி | விழுப்புரம் |
| ஈரோடு | சீயாழி | நாகப்பட்டணம் | விருதுநகர் |
| கடலூர் N. T. | தஞ்சாவூர் | பரமக்குடி | விஜயநகரம் |
| கடலூர் O. T. | தாடபள்ளிக்கூடம் | பாலக்காடு | வேலூர் |
| காஞ்சிவரம் | திலாறு R. S. | பார்வதிபுரம் | வேதாரண்யம் |
| காரைக்குடி | திருநெல்வேலி டவுன் | புதுக்கோட்டை | |

| | | |
|---|---|---|
| பிக்ஸட் டிபாஸிட்கள்:- | ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... | 2¾% வீதம் |
| | இரண்டு ,, ,, ... ... | 3% ,, |
| சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/வாங்கக்கூடியது ரூ. 5000/வரை வட்டி | | 2½% ,, |
| கரண்ட் கணக்கு | .. .. .. .. | ¼% ,, |

தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.



# நான்கோ பிரிண்ட் இங்கி

•

இந்தியா, சென்னை, பீஹார், மைசூர், திருவாங்கூர் சர்க்கார்களாலும், சென்னையிலும், வெளியூர்களிலும் உள்ள பிரிண்டர்களாலும் மிகவும் உபயோகிக்கப்படுகிறது.

•

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

## S. நாராயணன் & கம்பெனி,

1. கிண்டி ரோடு, அடையாறு, சென்னை.

# பாரதி கண்ட பரம்பொருள்

வி. ஜி. ஸ்ரீநிவாஸன்

பாரதி கண்ட பரம்பொருளைக் கண்டு கொள்வதற்கு முன், நாம் பாரதியாரைக் கண்டுகொள்வோம். பாரதியைக் கண்டு கொள்ள அவரது விநோதமான வாழ்க்கையிலே நேர்ந்த சில நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்வது அவசியமாகும்.

ஒரு நாள் பாரதியார் க்ஷவரம் செய்து கொள்ள உட்கார்ந்திருந்தார். நாவிதன் சற்றுச் சோர்ந்துபோய், சும்மா இருந்தான். அவனது அயர்வைக்கண்டு பாரதியாருக்குக் கோபம் மூண்டது, 'பளீர்' என அவன் கன்னத்தில் ஓர் அறை கொடுத்தார். பின்னர், பாரதியாரின் கோபம் தணிந்தது. உடனே நாவிதன் காலில் விழுந்து, சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்!

ரேழியிலே ஏதோ எழுதிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். குழந்தை மாடியிலிருந்து கீழே விழுந்து விட்டது. பாரதியார் பதறி ஓடிப்போய் அந்தக்குழந்தையை எடுக்கவில்லை. 'பரா சக்தி' என்று சொல்லி விட்டு இருந்த இடத்திலேயே இருந்து விட்டார். (ஆனால், குழந்தை காயமேதுமில்லாமல், தவழ்ந்து வந்தது.)

கடைய வாசத்தின் போது ஒரு நாள் பாரதியார் கழுதைக் குட்டியைக் கண்டார். குட்டிக் கழுதையிடம் அழகு தென்பட்டதோ என்னவோ? அதனிடம் சென்று, அதை அன்போடு, கட்டித் தழுவி முத்தமிட்டார்.

ஏழைச் சிறுவர்கள் வேப்பம் பழங்களைப் பொறுக்கித் தின்றதைக் கண்ணுற்றார் பாரதியார். உடனே இவரும் சில வேப்பம் பழங்களைத் தின்றுபார்த்தார்! "பகவானின் படைப்புப் பொருள்கள் எவையும் சுவை நிரம்பியவை. 'வேப்பம் பழம் கசக்கும்' என்று நினைப்பதால்தான் கசக்கின்றது போலும்" என மொழிந்தார்.

திருவனந்தபுரம் காட்சிச்சாலையில் சிங்கத்தைத் தொட்டு விளையாடினாராம் பாரதியார். சொந்தக்காரர், காவல்காரர் எல்லோர்க்கும் பயம்தான். "மிருகேந்திரா! கவிராஜ் பாரதி வந்திருக்கிறேன்! எல்லோரும் உன்னைக் கொடியவன் என்று கருதுகிறார்கள். அன்பு கொண்டவரைத் துன்புறுத்த மாட்டாய் என்பதற்கு அறிகுறியாகக் கர்ஜனை செய்" என்றாராம். என்ன விந்தை! சிங்கம் கம்பீரமாகக் கர்ஜனை புரிந்தது.

நல்ல மாலை நேரம். பக்ஷிகள் பாடின. மலைச்சாரல், தெள்ளிய சிற்றாறு ஓடியது. பாரதியாரின் உள்ளம் பூரித்தது. உயிருள்ளது, உயிரற்றது, அசைவது, அசைவற்றது எல்லாம் ஒன்றெனக் கொண்டார். ஆனந்த நடனம் ஆடிய வண்ணம்.

"காக்கை குருவி யெங்கள் ஜாதி — நீள்
மலையும் நதியும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசைகளிலே நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களி யாட்டம்"

என்று கம்பீரமாகப் பாடினார்!

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானைக்குப் பாரதியார் தேங்காய் பழம் கொடுப்பது வழக்கம். ஒரு நாள் அப்படிக் கொடுத்தபோது அந்த மாமதயானை கொம்பினால் சிலுப்பியது. பாரதியார் உணர்விழந்து அதன் கால்களுக்கு நடுவே விழுந்து விட்டார். நண்பர்கள் அவரை மீட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். விழிப்படைந்ததும் பாரதியார் என்ன சொன்னார் தெரியுமா? "என்னை இனம் தெரியாது தள்ளிவிட்டது. தெரிந்திருந்தால் தள்ளியிருக்காது. துன்புறுத்தும் எண்ணம் இருந்திருந்தால் என்னைத் துதிக்கையால் தூக்கி எறிந்திருக்கும்; அல்லது கால்களால் நசுக்கியிருக்கும்! சும்மா இருந்ததன் அர்த்தமென்ன? என்னிடம் அதற்குள்ள அன்பே காரணம்" என்றாராம். யானைச் சிலுப்பலில் நோய் வாய்ப் பட்டுக் கிடந்த பாரதியார் பரம்பொருளிடம் லயித்து விட்டார்!

விசித்திர சம்பவங்கள் நிறைந்த பாரதியாரின் வாழ்வு பரம்பொருளிடம் லயித்த முறையும் விசித்திரமானதுதான்.

* * *

பாரதியார் கீதையைப் பயின்று தமது வாழ்வைப் பண்படுத்திக் கொண்ட மகான். உபநிஷத் உபதேசத்தை முற்றும் உணர்ந்த மெய்ஞ்ஞானி. வாழ்க்கையின் மேடு பள்ளங்களையும், சுகதுக்கத்தையும், புயலை

யும் அமைதியையும், பார்த்த அநுபவசாலி. அருட்சுடர் வள்ளலார்களின் ஒரிய வாழ்வினைச் சிந்தித்துப் பார்த்துச் சிறந்தவர். வாழ்க்கையை நன்ருகப் புரிந்து கொண்டு வெற்றி கண்டவர்.

"உன்னுடைய ஆத்மாவும், உலகத்தினுடைய ஆத்மாவும் ஒன்று. நீ, நான், மூதலை, ஆமை, ஈ, கருடன், கழுதை எல்லாம் ஒரே உயிர். அந்தஉயிரே தெய்வம். கவனி. அண்ட பகிரண்டங்கள் எல்லாவற்றையும் உள்ளே இருந்து ஆட்டுவிக்கும் பரம்சுடரே நம்மைச்சூழும் அனந்த கோடி ஜீவராசிகளாக நின்று சலிக்கிறது. தன்னிடத்தில் உலகத்தையும், உலகத்தினிடம் தன்னையும் எவன் காண்கிருனே அவன் கண்ணுடையவன்"

என்ற வேதத்தின் முடிவான கருத்தைத் தமது "தத்துவம்" எனக் கொண்டார் பாரதியார்.

"வேதம் ஓதிய வேதியன். புலால் புசிக்கும் புலையன், பசு, நாய்-எல்லாவற்றையும் ஒரே பார்வையுடன் காண்கின்றனர்" என்பது கீதாவாக்கியம்! இந்தக் கொள்கை பாரதியாரின் உள்ளத்திலே ஊறிக்கிடந்து -நாம் பைத்தியக்காரத் தனம் என்று சொல்லத் தகுந்த-பல செய்கைகளாகப் பரிணமித்தது!

'காட்சி' முதல்கிளையின் நான்காவது பிரிவினிலே, எல்லாவற்றையும் ஊடுருவிச் செல்லும் பரம்பொருளையும். அதன் தன்மையையும் எவ்வளவு தெளிவாகச் சொல்லியிருக்கிருர் காணுங்கள்.

"இவ்வுலகம் ஒன்று.
ஆண், பெண், மனிதர், தேவர்,
பாம்பு, பறவை, காற்று, கடல்,
உயிர், இறப்பு—இவை அனைத்தும் ஒன்றே.
ஞாயிறு, வீட்டுச்சுவர், ஈ, மலையருவி,
குழல் கோமேதகம்—இவ்வனைத்தும் ஒன்றே.
இன்பம், துன்பம், பாட்டு,
வண்ணுன், குருவி,
மின்னல், பருத்தி,
இஃதெல்லாம் ஒன்று.
மூடன், புலவன்,
இரும்பு, வெட்டுக்கிளி—
இவை ஒரு பொருள்.
வேதம், கடல்மீன், புயற்காற்று, மல்லிகைமலர்—
இவை ஒரு பொருளின் பல தோற்றம்"

ஒன்றுக் கொன்று பொருந்தாத பொருள்கள், நேர்மாருன பொருள்கள், சரம், அசரம். சஜீவ நிர்ஜீவ வஸ்துக்கள், ஊர்வன, பறப்பன, நடப்பன, நீந்துவன—அனைத்தையும் ஒருங்கே அமைத்து அடுக்கி,




லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்
பெரியதெரு
கும்பகோணம்.

Liver Cure Branch Office
Parekh Mansion
Sandhurst Road, (West)
BOMBAY.

'பன்மையில் ஒருமை' யாகி நிற்கும் பரம்பொருளைத் தெளிவாக்குகிறார் பாரதியார்.

கண்ணன், கண்ணம்மா, சக்தி, முருகன், வள்ளி, விநாயகர் எல்லாம் ஒரு பொருளின் பல தோற்றமே. எந்தப் பெயர் கொண்டு பாடிப் புகழ்ந்தாலும், பாரதியார் 'பரம்பொருள்' ஒன்றினையே தமது குறிக்கோளாகக் கொள்கிறார்.

'கண்ணன் துதி' என்ற பாட்டிலே பல உண்மைகளைக் காண்கிறோம். காயின் புளிப்பு, கனியின் இனிப்பு, நோயில் படுக்கை, நோன்பில் உயிர்ப்பு; காற்றின் குளிர்ச்சி, கனலின் வெம்மை; சேற்றின் குழம்பல், திக்கின் தெளிவு-இப்படிச்சுவைகள், தன்மைகள் எல்லாமுமே (கண்ணனாக விளங்கும்) ஒரே பரம்பொருள்தான்!

காக்கையின் கறுப்பு வண்ணத்திலே பாரதியார் தெரிவது கண்ணப்பெருமானின் 'சியாமள' வர்ணம்தான்! மரங்களின் பசுமையிலே காண்பதுவோ கண்ணபிரானின் 'மரகத' நிறம்தான். தவிர, தன் காதிலே படும் எவ்வித ஒலியும் கண்ணனின் இன்பக் குழலிசையே என்று நினைக்கிறார்.

"காக்கைச் சிறகினிலே நந்தலாலா—நின்றன்
கரியநிறம் தோன்றுதையே நந்தலாலா
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா—நின்றன்
பச்சை நிறம் தோன்றுதையே நந்தலாலா
கேட்கும் ஒலியிலெல்லாம் நந்தலாலா—நின்றன்
கீதமி சைக்குதடா நந்தலாலா"

என நிறம், நிறபேதம், பசுமை, பசுமையின் பொலிவு எல்லாவற்றையும் 'நந்தலாலா'வாகக் கொண்ட பாரதியார்.

"தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா—உன்னைத்
தீண்டும் இன்பம் தோன்றுதையே நந்தலாலா"

என மொழிகின்றார்.

எரி நெருப்பும். கனலும், வெம்மையும் கண்ணனே! நெருப்பு சூழ்ந்து நின்ற போதிலும், பரம்பொருளே தம்மை அன்புடன் அணைந்து ஆட்கொள்வதாகத்தான் கொள்வார் பாரதியார். தீயிலே கூட இனிமை கண்டவர் பாரதியார். "தீ இனிது" என்றே துணிகிறார் பாரதியார்! இப்படிப்பட்ட வீரவேதாந்தி ஒருவனால்தான் "அச்சமில்லை" என்ற பாட்டைப் பாட முடியும். ஏனையோருக்கு அதைப் புரிந்து கொள்வதுகூடக் கஷ்டமாகத்தான்

மெரி பிஸ்கோத்
Merry
BISCUITS. (ERODE)
மெரி பிஸ்கோத் கம்பெனி
உயர்தர பிஸ்கோத்துகள் தயாரிப்பவர்கள், ஈரோடு.

இருக்கும். இந்தத் தீர வேதாந்தம் தான் "பகைமை" யிலேகூடப் பரம்பொருளைக் காட்டிக் கொடுத்தது பாரதியாருக்கு. இல்லாவிடில் "பகைவனுக் கருள்வாய்" என்ற பாட்டிலே

"தின்ன வரும்புலி தன்னையும் அன்பொடு
சிந்தையில் போற்றிடுவாய்—நன்னெஞ்சே
அன்னை பராசக்தி அவ்வுரு ஆயினள்
அவளைக் கும்பிடு வாய்"

என்று பாடுவாரா?

தின்ன வரும்புலி தன்னையும்கூட அன்புடன் மனதில் போற்றி வணங்கல் வேண்டுமாம்! ஏன்? பக்தனை ஆட்கொள்ள வந்த பராசக்தி அந்த உருவமாக வந்து விட்டதாகக் கொள்ளவேண்டுமாம்! என்ன நெஞ்சுத் துணிவு. 'வேதாந்தி' என்றால் 'கோழை' என அர்த்தம் பண்ணும் குதர்க்க வாதிகளுக்குச் சரியான சூடுதானே இது! இப்படிப்பட்ட ஆன்மவலியும். திடசித்தமும்,யார்க்கும்அஞ்சாத நெறிகளும் வேதாந்தியைத்தவிர வேறெவர்க்கும் கிடையாது. வாழ்க்கையில் வெற்றி காண்பவன் வேதாந்தியே என்ற உண்மையை உணர வேண்டும். எடுத்துக்காட்டு நேற்று சுவாமி விவேகானந்தர், இன்று காந்தியடிகள்.

பாரதியாரின் "கண்ணன் துதியையும் "நந்தலாலா" வையும் சேர்த்துப்படித்துப் புரிந்து கொள்வோருக்கு அருட்சுடர் வள்ளல் ஜோதி ராமலிங்க சுவாமிகளின் "கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்" எனத்துவங்கும் திம்பாடல் நன்கு விளங்கும். இப்படிப்பட்ட பரம்பொருள் உணர்ச்சி நமது பழம்பெரும் பாரத நாட்டின் பாரம்பரைச் சொத்து. ஆழ்வார்கள் "உண்ணும் சோறு, பருகும் நீர்" எதிலும் இறைவனைக் கண்டனர்.

"பாரதி அறுபத்தாறு" தனில் பதினொருவது, பதினேழாவது, பதினெட்டாவது, பகுதிகளை நன்றாகப் படித்து உணர்பவர்களுக்குப் பாரதியாரின் உண்மையான உள்ளப்பாங்கு நன்றாகத் தெரியும். குருவாயிலாகவரும் உபதேச மொழிகளைத் தேருங்கள்.

"கேளப்பா சீடனே, கழுதை ஒன்றைக்
கீழான பன்றியினைத் தேளைக் கண்டு
தாளைப் பார்த் திருகரமும் சிரமேற் கூப்பிச்
சங்கரசங் கரவென்று பணிதல் வேண்டும்"

ஏன் தெரியுமா?

"உயிர்களெலாம் தெய்வமன்றிப் பிறவொன்றில்லை
ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்"

இது மட்டுமா?

"பயிலும்உயிர் வகைமட்டும் அன்றி யங்கு
பார்க்கின்ற பொருளெல்லாம் தெய்வம் கண்டீர்"

ஆதலாலே தான் 'கூடிநின்ற பொருள் அனைத்தின் கூட்டம் தெய்வம்' என்பதை ஓர்ந்து, உயர்வு தாழ்வு உன்னுது,

"கூளத்தை, மலத்தினையும் வணங்கல் வேண்டும்"
தெளிவாகச் சொல்ல வேண்டுமா?
"வெளியிலங்கும் இரவிமதி விண்மீன் மேகம்,
மேலுமிங்கு பலபலவாம் தோற்றம் கொண்டே
இயலுகின்ற ஜடப்பொருள்கள் அனைத்தும்—
தெய்வம்"

பரம்பொருளைத் தேடி இவ்வளவு தூரம் போவானேன்? சுருங்கச்சொல்லி நெருங்கி வந்தால்.

"எழுதுகோல் தெய்வம்! இந்த எழுத்தும்
தெய்வம்"

போதுமா?

* * *

ரஸிகத் தன்மை என்பது இறைவன் மாந்தருக்கு அருள்கின்ற பிரசாதம், இந்தப் பிரசாதம் எல்லோருக்குமே கிட்டுவதில்லை. ரஸிகத்தன்மை முற்ற முற்றக் கவிதா மனோபாவம் ஏற்படுகிறது. இளம்கவி முதன் முதலாக அழகுப் பொருள்கள் அனைத்தையும் பாடுகிருன். அந்த நிலையில் சிருங்கார ரஸம் மேலோங்கி நிற்கிறது. கவி, வாழ்வின் குண தோஷங்களை உணர உணர, அனுபவ சித்தியாக, உலக உண்மைகளை உணர்ந்துவிடுகிருன். முன்னால் வழிவிட்ட சௌந்தர்ய உபாசனை "சத்யம், சிவம், சுந்தரம்" என்றதன்மையில் ஊறி, அழகினைப் படைத்த இறைவனைக் காண அடிகோலுகிறது. 'எங்கெங்கே நோக்கிடினும் ஏதெவற்றைப் பார்த்தாலும் அங்கங்கே ஈசனது அற்புதத்தைக் காண்கிருன் உண்மைக் கவி. பக்தி முற்றப்பித்து ஏறுகிறது. பக்தி பரவசப் பித்த விளைவால் ஞானம் பெருக மோனம் தழைக்கிறது. 'நேரான தியான நிம்மதியிலே நிதமும் நிசமாக உள்ளே நிரம்பும் கவிமலரே' என்ற மெய்யுணர்வு கொண்டவனுகி உள்ளத்தை உணர்ந்து, உள்ளத்திலேயே ஒடுங்கி விடுகிருன் மௌனி! பின்னரே யோகசித்தி ஏற்படுகிறது.

கவி முற்றி யோகி ஆகிருன் என்பது கண்கூடு.

பரம் பொருளாராய்ச்சி செய்த கவி பாரதியாரின் வாழ்வை ஊன்றிப் பார்த்தவருக்கு இந்தப் 'பரிணமவாதம்' நன்ருய்ப் புலப்படும்,

★  ★


# லாக்ஸாமிண்ட்

**இனிய தித்திக்கும் சுகபேதி பெப்பர்மிண்ட் மாத்திரைகள்**

தயாரிப்பவர்கள்:- **ஸெல்டோனு பார்மகல்ஸ்**

ஏஜெண்டுகள்:— **தாதா & கம்பெனி, சென்னை.**

**எங்கும் கிடைக்கும்**

## பொதுஜன ஆதரவுக்கு நமது முன்னேற்றமே சான்று

ஏராளமான பாலிஸிகள், இடைவிடாத மகத்தான முன்னேற்றம் அதிகரித்துக்கொண்டே வரும் புகழ், பொதுஜன ஆதரவு — இவைகளுக்குப் போதிய அத்தாட்சி அடியிற் காணப்படும் புள்ளி விபரங்கள்:-

| வருஷம் | புதிய பாலிஸிகள் | மொத்த ஆஸ்தி | நடை முதலிலிருக்கும் பாலிஸிகள் |
|---|---|---|---|
| 1941 | 1 கோடி 1 லக்ஷத்திற்குமேல் | 1 கோடி 95 லக்ஷத்திற்குமேல் | 8 கோடி 36 லக்ஷத்திற்குமேல் |
| 1943 | 2 கோடி 20 லக்ஷத்திற்குமேல் | 2 கோடி 50 லக்ஷத்திற்குமேல் | 10 கோடி 53 லக்ஷத்திற்துமேல் |
| 1945 | 3 கோடி 75 லக்ஷத்திற்குமேல் | 3 கோடி 41 லக்ஷத்திற்குமேல் | 14 கோடி 87 லக்ஷத்திற்குமேல் |

**1945ல் புதிய பாலிஸிகள் பெருக்கு:— 1 கோடி 15 லக்ஷத்திற்குமேல்**

**வருடா வருடம் இந்தப் பெரிய தேசீய ஸ்தாபனத்தில்**

பொது ஜனங்கள் பாலிஸி எடுக்கிறார்கள். அத்துடன் பெருவாரியான பழைய பாலிஸிதார்களும் மேலும் மேலும் புதிய பாலிஸிகள் எடுத்துக்கொள்கிறார்கள்.

# லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(தலைமை ஆபீஸ்:— **லாகூர்**)

மதராஸ் பிராஞ்சு:- **4/105,** அரண்மனைகாரத்தெரு, ஜி. டி. சென்னை.

C. R. சேஷன், M.A., பிராஞ்சு மானேஜர்.

# சினிமா-தொழிலும் கலையும்

சு. சந்தானம்

சினிமா ஒரு பெருகும்தொழில். சினிமா கலையும் ஒரு வளருங்கலை. பொது ஜனங்களின் அறிவைப் பெருக்குவதற்கும் இன்பத்தை வளர்ப்பதற்கும் ஒப்பற்ற கருவியாகும். எக்கருவியையும் தவறான முறையில் உபயோகப்படுத்தலாம். மனிதர் மனத்தில் குடிகொண்டிருக்கும் காமத்தையும் குரோதத்தையும் அதிகரித்து அவர்கள் பாடுபட்டுச் சம்பாதித்த பணத்தைப் பறிப்பதற்குச் சினிமாபடம் எளிதில் பயன்படும். ஓரளவு இவ்வாறே இப்பொழுது உபயோகப்பட்டு வருகிறது. இது சினிமாத் தொழிலின் குற்றமில்லை. அதன் சூக்ஷ்மக் கருவிகள் விஞ்ஞான ஆராய்ச்சியின் பெரும் வெற்றிகளாகும். ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருக்கும் மலைகளையும், அருவிகளையும், காடுகளையும், கடல்களையும் நம் கண்முன் தோற்றுவித்து, வெவ்வேறு நாடுகளின் பழக்க வழக்கங்களையும், நடையுடை பாவனைக்களையும் நமக்கு அறிவிக்கும் ஆற்றலை ஒரு தெய்வீக சக்தியாகப் பாவிக்க வேண்டுமல்லவா?

இப்பொழுது எல்லாத் தொழில்களையும் தேசிய சொத்தாக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்கிறார்கள். மற்றத் தொழில்களைப் பற்றி இது எவ்வளவு பொருத்தமாகவிருப்பினும், சினிமாத் தொழிலைப் பொதுச் சொத்தாக்க வேண்டியது நமது நாட்டிற்கு அத்தியாவசியமென்று நினைக்கிறேன். இத்தொழிலுக்கு இரண்டு முக்கிய பாகங்களுண்டு. சினிமா படம் எடுக்கும் சாலைகள், அவைகளைக் காட்டும் காட்சிக் கூடங்கள். இவ்விரண்டையும் பொதுச் சொத்தாக்கி உயர்ந்த முறையில் அமைப்பது இத்தொழில் செவ்வனே பெருகுவதற்குச்சாதகமாகும். இப்பொழுது ஒவ்வோர் முதலாளியும் சில மட்டக் கருவிகளைக்கொண்டு படமெடுத்துப் பாமர மக்களைக் கொள்ளையிடப் பார்க்கிறான். அமெரிக்காவில்போல் கோடிக் கணக்கான முதல்போட்டு, ஓயாமல் கருவிகளையும், முறைகளையும் மேன்மைப்படுத்த நம் முதலாளிகளுக்குப்பணமில்லை, வசதிகளுமில்லை. ஓர் அமெரிக்கப்படம் உலகம் முழுதும் காட்டப்படுகிறது. எவ்வளவு செலவு செய்தாலும் கட்டும். ஓர் இந்தியபாஷையில் எடுக்கப்பட்ட எந்தப்படத்திற்கும் வெளிநாட்டில் தேவையிராது. இந்நாட்டில்கூட ஹிந்தியைத்தவிர இதரபாஷையில் எடுக்கப்பட்ட படம் ஒரு பிரதேசத்தில்தான் பயன்படும். இதில்கூடப் பலமுதலாளிகள் போட்டி போட்டுக்கொண்டால், முதல்தர சினிமா படம்பிடிக்கும் சாலைகள் ஏற்படுவது துர்லபம். ஆதலால் இவைகள் பொதுச்சாலைகளாக இருந்தாலொழிய, கீழ்த்தரச் சாலைகளாவே இருக்கும்.

சினிமாக்காட்சிச் சாலைகளும் பொதுச் சொத்தாக இருப்பதில் பல நன்மைகள் உண்டு. அவைகள் நல்ல பொதுவருமான ஊற்றுக்களாகும். பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கும் சௌக்கியத்திற்கும் ஏற்றவாறு அமைக்கலாம். ஒரு நகரத்தில் பல சினிமாக்கூடங்கள் ஓரிடத்தில் சேர்ந்து இருக்கின்றன. பல பாகங்களில் இருப்பதில்லை. இதனால் அந்த நகரவாசிகளில் சிலருக்குச் சௌகரியமும் பலருக்கு அசௌகரியங்களுமுண்டாகின்றன. ஆசனவசதிகளிலும் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் மிதமிஞ்சிய வித்தியாசங்கள் செய்யப்படுகின்றன.

சினிமாத் தொழிலை சமூகப் பொதுத் தொழிலாக்க வேண்டும் என்று கூறினேன். ஆனால் சினிமாக் கலையை அப்படிச் செய்ய முடியாது. கவிதையும், சங்கீதமும், நடிப்பும் சர்க்கார் தொழிலாக்கப்பட்டால் அவற்றின் தன்மை குன்றிவிடும். இது கலைஞர்களின் சுதந்திர க்ஷேத்திரம். ஆனால் கலைஞர்கள் தங்களுடைய கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக்கொண்டு படம் பிடிப்பதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இவர்களை மற்றத் தேசங்களுக்கு அனுப்பி அவ்விடங்களில் இக்கலை தேர்ச்சியுற்றிருப்பதின் காரணங்களை ஆராய்ந்து இந்நாட்டிலும் முன்னேற்றமடைவதற்குப்பாடுபடும்படி தூண்ட வேண்டும்.

பொதுவாக இந்தியப் படங்களிலும், விசேஷமாகத் தமிழ்ப்படங்களிலும் உள்ள சில குறைவுகளைக் குறிப்பிடவேண்டும். நன்றாகப் படமெடுக்க வசதிகளில்லாமல் மட்டக்கருவிகளைக் கொண்டு பெரும்

பாலான படங்கள் எடுக்கப்படுவதால் பார்ப்பதற்கு மங்கலாகவும், கேட்பதற்குக் கர்ணகடூரமாகவும் இருக்கின்றன. தவிர நம் படங்களில் அழுகை அதிகம். நமது வாழ்க்கையில் துக்கம் நிறைந்திருக்கும் பொழுது, பொழுது போக்குக்காகப் போகும் சினிமாவில் கூட ஏன் அழுகைக் குரலை நம் ஜனங்கள் கேட்கவேண்டுமென்று எனக்கு விளங்கவில்லை. நடிகைகளுக்கு அது சுலபம்போலும்! ஹாஸ்யம் அநேகமாக ஆபாசமாக இருக்கிறது.

நமது பேசும் படங்களில் பாட்டு அதிகமென்று குறை கூறப்படுகிறது. பொதுஜனங்கள் சங்கீதத்தை விரும்புவது வருந்தத்தக்கதல்ல. அந்தத் திருப்தி செய்வதும் தவறல்ல. ஆனால் காட்சிகளின் ரசத்தைக் கெடுத்துக்கொண்டு ஒவ்வோர் சந்தர்ப்பத்திலும் கதாநாயகனும், கதாநாயகியும் பாடத் தொடங்குவது பொருத்தமற்றதாகத்தானிருக்கிறது. இதை விட்டு விட்டு ஒவ்வொரு படத்திலும் ஒன்றிரண்டு சிறிய பாட்டுக் கச்சேரிகளைச் சேர்த்து விடுவது மேலென்று தோன்றுகிறது.

ஆண்களும் பெண்களும் சேர்ந்து நடித்தால்தான் நல்ல படமாகும். ஆனால் நமது நாகரிகத்தில் பிறர் முன் ஆணும் பெண்ணும் அன்னியோன்யமாக நடிப்பது வழக்கமல்ல. ஆதலால் காதலை முக்கியமாகக் கொண்ட படங்களை நமது ஜனங்களுக்கு உசிதமாகச் சிரமைக்க வேண்டும். காளிதாசன் சகுந்தலையை இதற்கு ஒப்பற்ற ஆதர்சமாக எடுத்துக்கொள்ளலாம்.

தவிர, பேசும் படத்தில் சம்பாஷணை மிகவும் முக்கியமானது. ருசியான சம்பாஷணையைக் கோப்பது நல்ல கவிதையைக் கவனம் செய்வதைப்போல் கஷ்டமான கலை. இது நல்ல ஆசிரியர்களால்தான் சாத்தியமானது. நமது படங்களிலோ நாடக பாத்திரங்கள் பாட்டுக்கட்டம் வரையில் ஏதாவது பேசினால் போதும் என்ற கொள்கை கையாளப்பட்டு வருகிறது.

சினிமாகலையை வளர்க்க ஆராய்ச்சிச் சங்கங்கள் மிகவும் அவசியம். பத்திரிகைகளிலும் இதைப்பற்றிய கட்டுரைகளுக்கும், விமர்சனங்களுக்கும் அதிக இடமளிக்கப்பட வேண்டும்.


# MEHTA'S SPECIALITIES

*Well-known for their efficacy and Medicinal values*

1 **SUNDARI ELIXIR**
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 **PHOSPHORUS OIL**
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 **MASTANA PILLS**
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 **DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA**
A great Blood Purifier & digestive & Potential Tonic.

*Stocked by all important Chemists & Druggists of South India*

## K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

# காதற் கோயில்



மானஸீகன்

மறுநாள் சரித்திரப் பரீக்ஷை. வாசல் அறையில் உட்கார்ந்துகொண்டு சரித்திரம் படித்துக் கொண்டிருந்தேன். என்னையறியாமல் உரக்கப் படித்துக் கொண்டிருந்தேன்.

"உலகிலேயே மிகவும் அழகான கட்டடம் ஆக்ரா நகரிலுள்ள தாஜ்மஹால். இது மொகலாய சக்ரவர்த்தி ஷாஜஹானால் தம் அருமை மனைவி ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது."

இதுவரைக்கும், வராந்தாவில் பேப்பர் படித்துக்கொண்டிருந்த என் மாமா, உள்ளே எழுந்து வந்தார்.

"டேய் மண்டு, (இதுதான் அவர் எனக்கு வைத்திருக்கும் பெயர்) தாஜ்மஹால் கட்டடத்தினுள் என்ன இருக்கிறது தெரியுமா?"

"இதுதான் புஸ்தகத்தில் போட்டிருக்கிறதே மாமா, அங்கே ஷாஜஹான் அருமை மனைவி மும்தாஜ் பீகத்தின் உடல் சமாதி அளிக்கப்பட்டிருக்கிறது."

"அட மண்டு! அங்கே இருப்பது, மும்தாஜ்பீகம் இல்லையடா! அங்கே ஒரு தாதிப் பெண்ணின் உடல் இருக்கிறது."

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. நாம்தான் தப்பாகப் படித்துவிட்டோமோ என்று புஸ்தகத்தை மறுபடியும் நோக்கினேன்.

"இல்லை மாமா புஸ்தகத்தில் இல்லையே?"

"புஸ்தகத்துக்கு என்னடா தெரியும், கதை சொல்றேன் கேளு" என்று அருகில் வந்து உட்கார்ந்துகொண்டார்.

வெளியில் ஒரே இடியும் மின்னலுமாய் மழை பெய்துகொண்டிருந்தது. கதை கேட்பதற்கு வெகு சுகமான சமயமாகத் தோன்றவே, புஸ்தகத்தை மூடிவைத்துவிட்டு, தலையை நிமிர்ந்தேன். மாமாவும், ஒரு சுருள் வெற்றிலையை மடித்துப் போட்டுக்கொண்டு ஆரம்பித்தார் கதையை.

ஷாஜஹான் தம் இறந்த மனைவிக்கு, வாக்குக் கொடுத்தபடி, அவள் உடலைச்

சமாதி செய்ய ஒரு ஸ்தூபி கட்ட நினைத்தார். ஆனால் அது மற்றவைப்போலில்லாமல் அசாதாரணமாய், அழகிலும், வேலைப்பாடுகளிலும் சிறந்து, சரித்திரத்திலேயே நிலைத்த பெயரை அடைய வேண்டும், என்பது அவரது எண்ணம். மும்தாஜின்மேல் அவர் வைத்த அன்பு மட்டானதா? செலவைப்பற்றி அவர் கவலைப்படவில்லை.

தண்டோரா போடப்பட்டது. "அரசர் ஒரு ஸ்தூபி கட்ட நினைத்துள்ளார். கட்டட வேலைப்பாடுகளிலும், சிற்பத் தொழிலிலும் சிறந்தவர்கள் தங்கள் மனதிற்குத் தோன்றியபடி, அழகான கட்டடம் அமைத்து, அரசரிடம் காட்டலாம். சிறந்ததாய் இருப்பதற்கு, ஏராளமான பொன் தானம் செய்யப்படும்."

ராஜ்யமே கலகலத்தது. கவிகளும், சிற்பிகளும், துணியைத் தட்டிக்கொண்டு எழுந்தனர். அவர்கள் மனதில் பணத்தாசை எழவில்லை. அரசர் எண்ணம் அவர்களுக்குத் தெரியும். சரித்திரத்தில் நிலைத்திருக்கும் கட்டடம் கட்டப்போகிறார். அதற்கு அவர்கள் காரணபூதர்களாயிருந்தால்? சரித்திரத்தில் இடம்பெறலாம். யாருக்குத்தான் ஆசையிருக்காது?

அரசரிடம் எண்ணிறந்த, மாதிரிக்கட்டடங்கள் வந்து குவிந்தன. அவர் நாட்டிலிருந்தும்மட்டுமில்லை, அயல் தேசங்களிலிருந்து கூட. ஸ்தூபிகள் கட்டுவதிலும், கோயில்கள் கட்டுவதிலும், சிறந்தவரான, திராவிட சிற்பிகள், தங்கள் மனதில் எழுந்த, சிறந்த அமைப்புக்களை, சிறு மாதிரிக் கட்டடங்களாகக் கட்டி, அனுப்பித்திருந்தனர். கிரேக்க சிற்பம் என்ற தனிமை பெற்று விளங்கச்செய்த கிரேக்க சிற்பிகள் தங்கள் மூளையைத்திறந்து, அனுபவத்தைத்திரட்டி, கண்களைப் பறிக்கும், சிறு கட்டடங்கள் அனுப்பினார்கள். ஒரு விதத்தில் அவர்கள், கவிகள் என்றே சொல்லிவிடலாம். ஒவ்வொரு சிற்பியும் புதுமையை நாடினான். அழகில் தனிமை இடம் பெற நரம்புகள் முறுக்கியிருந்தன. சிற்பத்தின் குவியல் என மாதிரிக் கட்டிடங்கள் வந்து குவிந்தன.

ஆனால் அரசர் மனம் ஒன்றிலும் லயிக்கவில்லை. ஏன்? காதல் எனும் பெரும் நோயினால் வாட்டப்பட்டு, ஏங்கிக்கிடந்த மனதின், எண்ண அலைகள் அதில் பிரதிபலிக்கவில்லை. இது இல்லாவிடின் எவ்வளவு சிற்ப சம்பத்து இருப்பினும் என்ன? அரசர் மனதிற்குப் பிடிக்கவில்லை. தம் எண்ணத்தில் தோல்வியுற்றதாகவே எண்ணினர். குபீரென்று பற்றி எரிந்த தீ, பக்கத்தில் பொருள் இல்லாவிடில் மெள்ள மெள்ள அணைவதுபோல் அவர் ஆசையும் அணையத் தொடங்கியது. நாட்களும் சென்றன.

அப்போது ஒரு ஆச்சர்யமான சம்பவம் நிகழ்ந்தது. ஒருநாள் மாலை, நந்தவனத்தில் அரசர் ஹுக்கா பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவர் மனம், அவர் கட்ட இருக்கும் காதற்—கோயிலையே நாடி நின்றது. உணர்ச்சி வெள்ளம் பொங்கிய அவர் கைகளில் சிற்பக்கலை தாண்டவ மாடவில்லை. கலையில் சிறந்த சிற்பிகளுக்கோ அவர் உணர்ச்சிகள் பிரதிபலிக்க வில்லை. இவ்விரண்டுக்கும் எப்படி அணை கட்டுவது? ஆழ்ந்த யோசனையைக் கலைத்தான் ஒரு காவலன்.

"அரசே"

"யாரது? என்ன?

"வெளியில் ஒருவன் காத்துக்கொண்டிருக்கிறான். தங்களைக் காணவேண்டுமாம்."

"என்ன சமாசாரம்?"

"தாங்கள் கட்டவிருக்கும் ஸ்தூபிக்கு உதவி செய்ய வந்திருக்கிறானாம்."

"பார்வைக்கு எப்படி இருக்கிறான்?

"நடுத்தரமான வயதினன்; உடையிலும் ஏழ்மைப்பட்டவனாகக் காண்கிறான்,"

"இவனாவது எனக்கு உதவி செய்யவாவது?"

"நானும் அப்படித்தான் நினைத்தேன் மகாராஜ். ஆனால் அவன் பிடிவாதமாக நிற்கிறான்."

"சரி கூப்பிடு உள்ளே."

வணக்கத்துடன் உள்ளே வந்தான். வறுமையினால் நடையில் ஆட்டம்கொடுத்த போதிலும், நல்ல தீக்ஷண்யமான கண்களையும், நாசியையும் பெற்றவனாயிருந்தான். ஆனால் யாரிடத்திலுமில்லாத ஒரு புதிய மாறுதலை இவனிடம் கண்டார் அரசர். அதுதான் அவன் கண்களில் தோய்ந்த ஏக்கம். இனம் இனத்தைச் சேருமென்பார்கள். அவர் மனதுதான் அவனிடம் பிரதிபலித்ததோ என்று வியந்தார் அரசர். கையில், ஒரு துணியால் மூடி வைத்திருந்தான் மாதிரிக் கட்டடத்தை.

"எங்கே உன் வேலைப்பாட்டைக் காண்பி பார்க்கலாம்" என்றார் அரசர். அவன் மூடியிருந்த துணியை விலக்கினான். அரசர் மனதில் அமிருதம் வர்ஷித்தது, அவர் கண்கள் அதைவிட்டு அகலவில்லை.

"என்ன! நீயா கட்டினாய்?"

"ஆம் மகராஜ். இந்த ஏழைதான்." சிற்பத்தில் சிறந்திருக்கவில்லை அக்கட்டடம். ஆனால் அவருடைய ஏங்கிய மனதிற்கு அது பதிலளித்தது. எவர் வேலைப்பாடும் அளிக்காத ஒரு புதிய ஜீவனை அவருக்கு அளித்தது.

"கட்டட வேலையையும் நீயே செய்வாயா?

"செய்யமுடியும் மகராஜ் நம்பிக்கையிருந்தால்"

"சரி சீக்கிரம் வேலையை ஆரம்பித்துவிடு. பணத்தைப்பற்றிக் கவலை வேண்டாம். கஜானா சாவி உன்னிடமே இருக்கும். தெரிந்ததா?"

அரசர் எழுந்து போய்விட்டார். மகிழ்ச்சியின் வெள்ளத்தில் அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை.

பணம் எல்லாவற்றையும் செய்யும். வெகு சீக்கிரத்திலேயே அக்காதற் கோயில் கட்டப்பட்டுவிட்டது. அணைத்துச்செல்லும், தெள்ளிய யமுனையின் கரையிலே நீலவானில், நிமிர்ந்து நின்ற அக்கட்டடம், கவிகள் உள்ளத்தைக் கிளறியது. அரசர் சமைந்து நின்றுவிட்டார்.

"ரஹ்மான்! (அதுதான் சிற்பியின் பெயர்) உனக்கு என்னவேண்டும் சீக்கிரம் சொல்!" ஆசையினால் இரு கைகளையும் கட்டிக் கொண்டுவிட்டார்.

"அரசே, கேட்பது சுலபம். கொடுப்பது தான் கடினம்!"

"நீ கேட்டுமா மாட்டேனென்பேன். காபூல்தேசம் வேண்டுமா? பிடித்துக் கொடுக்கிறேன். "இல்லை...?"

அரசரின் எண்ணங்களைக் கண்டு நகைத்தான் சிற்பி.

"எனக்கு அதெல்லாம் வேண்டியதில்லை."

"பின்...?

"இக்காதற் கோயிலின் காவற்காரன் வேலை கொடுங்கள் போதும்."

"பூ...இதற்காகவா இவ்வளவு யோசனை? கொடுத்தேன் போ."

மும்தாஜின் உடல் அங்கு சமாதி செய்யப்பட்டுவிட்டது, அரசர் தினமும் மாலையில் அங்கு வந்துபோவார் மனதைத் தேற்றிக்கொள்ள. தாஜ்மஹால் என்று பெயரிடப்பட்டது அம்மாளிகைக்கு.

ஒருநாள்; சற்று சீக்கிரமே வந்துவிட்டார் ஷாஜஹான். என்றுமில்லாமல், உள்ளே அரவம் கேட்டதும், அவருக்குச் சந்தேகம் எழுந்தது. சந்தடிசெய்யாமல் அடிவைத்துச் சென்றார்.

உள்ளே மண்டியிட்டு உட்கார்ந்திருந்தான் ரஹ்மான். அவன் வாய் ஏதோ முணுமுணுத்துக்கொண்டிருந்தது. அவைகளில் சில அவர் காதில் விழுந்தன.

"ஹலிமா! அன்று ஏழை உன் சவத்தருகில் செய்த சபதத்தைப் பூர்த்திசெய்துவிட்டேன், காதற் கோயிலைக் கட்டிவிட்டேன். ஹலிமா! உலகின் அழகான கட்டடம் உன் உடலைக் காக்கிறது".

அரசருக்குத் தலைசுழன்றது. மும்தாஜுக்காக அவர் கட்டியிருக்க, இந்த ஹலிமா எங்கிருந்து வந்தாள் என்று புரியவில்லை அவருக்கு. ஏதோ சூது நடக்கிறது என்று அவருக்குப்பட்டது. கோபத்தில் உருவிய கத்தியுடன் உள்ளே சென்றார்.

"ரஹ்மான்.........?"

அவன் திடுக்கிட்டு எழுந்திருந்தான். "மகராஜ்".

"ரஹ்மான்! இதில் ஏதோ சூது நடக்கிறது. உன்னிடம் அன்பை வைத்த எனக்கு நீ ஏதோ துரோகம் செய்துவிட்டாய். உண்மையைச் சொல்லாவிடில்...... ......" என்று இழுத்தார்.

ரஹ்மான் முகத்தில் ஒரு புன்னகை பூத்து மறைந்தது.

"மகராஜ், இக்கட்டடத்தினுள் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட ஒரு அணங்கின் உடல் இருக்கிறது. அவள் தான் ஹலிமா!"

உயர எழுப்பி நின்ற மஹாலில் நிசப்தம் சற்று நிலவியது. அரசர் உள்ளம் கோபத்திலும், வருத்தத்திலும் அலைந்தது.

"ரஹ்மான்! உன்னிடம், அன்பையும், நம்பிக்கையையும் வைத்த எனக்கு நீ செய்த துரோகம் பிடிக்கவில்லை. இதனால் உன் உயிரை இழக்கப்போகிறாய்".

"மகராஜ், என் உயிரை இழந்தால், நான் வருந்தவில்லை, உலகம் திகைக்கும்,


"லக்ஸ்
டாய்லட் சோப்பை
உபயோகிப்பதுதான் என்
எளிதான அழகுபடுத்திக்
கொள்ளும் முறை" என்று
கூறுகிறார்
மாயா பானர்ஜி
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின் மேல் தடவுகிறேன்...
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்..
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டினால் முகத்தை துடைக்கிறேன்
LUX TOILET SOAP
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்
ஒரு சினிமா நட்சத்திரத்திற்கு அப்பழுக்கற்ற சருமம் சௌந்தரியத்தை கொடுப்பதுமல்லாமல் அவர் வாழ்க்கைக்கே ஒரு விலை மதிக்கமுடியாத ஆஸ்தியுமாகிறது. அதனாலேயே இந்தியாவிலுள்ள கியாதி பெற்ற சினிமா நட்சத்திரங்கள் எல்லோரும் தங்கள் அருமையான வனப்பை லக்ஸ் டாய்லட் சோப்பினால் பாதுகாத்துக் கொள்ளுகிறார்கள். நீங்களே இச் சுலபமான அழகுபடுத்திக் கொள்ளும் முறையை உங்கள் வீட்டில் வைத்துச் செய்யலாம்—30 நாட்கள் முயர்ச்சித்துப் பாருங்கள்—இச் சோப்பின் சுறு சுறுப்பளித்து சுத்தம் செய்யும் சக்தியைக்கண்டு மகிழ்வீர்கள்.
LEVER BROTHERS (INDIA) LIMITED

இக்காதற் கோயிலை, என் ஹலிமாவை நினைத்துக் கட்டினேனே தவிர, உங்கள் பணத்திற்கு மதிப்பு வைத்தல்ல,'' என்றான் கம்பீரமாக.

"என்ன சொன்னாய்?" என்று நெருங்கினார் அரசர். அவர் கண்கள் அகஸ்மாத்தாகத் திறந்து கிடந்த அவன் புயங்களை நோக்கின.

"குர்ரம் நான் யார் தெரியுமா?'' என்ற சொல் அவரைத் திகைக்க வைத்தது. தம்மைச் செல்லப்பெயரிட்டு அழைத்தவன் யார்?

புன்னகையுடன் நின்ற ரஹ்மான் பின்னும் சொன்னான் "நான்தான் குஸ்ரு! உன் அண்ணன்''.

ஷாஜஹானுக்கு உலகமே புரியவில்லை. திறந்த கண்களுடன் அவன் முகத்தை உற்று நோக்கினார். திரை மெல்ல மெல்ல விலகியது.

"அன்று நீ இறந்துவிடவில்லை.........?'' என்றார் சந்தேகமாக.

"அதுதான் பெரியகதை. என்னிடம் நம்பிக்கை வைத்த உன்னை நான் துரோகம் செய்யவில்லை. ஆனால், இதோ அடக்கம் செய்யப்பட்டிருக்கும் ஹலிமா, உன் மும்தாஜைவிட ஆயிரமடங்கு உயர்ந்தவள். காதல் லக்ஷியத்தின் கரையை அடைந்தவள். அந்தக் கதையை நீ கேட்கவேண்டும். உன் மனதிலேயே தோன்றட்டும், நான் செய்தது துரோகமா என்று.'' என்று ஆரம்பித்தான். அவனது உணர்ச்சி அரசரை அடக்கி விட்டது. கேட்கத் தொடங்கிவிட்டார்.

"குர்ரம், இளமையில் அன்று நான் பட்டுப்பூச்சிபோல் யௌவன மங்கைகள்மீது வலையை வீசவில்லை. அரசர் ஜஹாங்கீரே கண்டு வியக்கும்படியாக என்னிடம் ஓர் அடக்கத்தன்மை யிருந்தது. இந்தச் சம்பவம் நடந்தபோது நீ வெகு சிறியவனாய் இருந்தாய். உனக்கு இது தெரிந்திராது, பட்டத்தின் இளவரசனாய் இருந்த நான், எவ்வளவோ மங்கையரை, என் வலையில் சிக்கவைத்திருக்கலாம். நான் அவ்வாறு செய்யவில்லை. அப்படிப்பட்ட வாழ்க்கையில்தான் ஹலிமா வந்துசேர்ந்தாள். என் அன்னையின் அந்தப்புரத்தில் தாதியாக வந்து சேர்ந்தாள் அவள்.

ஒருநாள் மாலை. அன்னையைக் காண ஹேரத்தில் நுழைந்தேன், அங்கு ஒரு கந்தர்வகானம் வரவழைத்தது. ஆணரவம் கேட்டால் எங்கு நின்றுவிடுமோ என்று சந்தடி செய்யாமல் நுழைந்தேன். ஹலிமா ஸிதாருடன் அன்னைக்குப் பாடிக் காட்டிக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் உருவம் அந்தக் கந்தர்வ கானத்திலும் இனியதாக இருந்தது. என் வரவு யாருக்கும் தெரியாது. மெய்மறந்து பாடிக்கொண்டிருந்தாள் ஹலிமா. சடக்கென்று மத்தியில் போய் நின்றேன், குபீரென்று எழுந்து தூணில் போய் மறைந்துகொண்டாள் அந்த ஹம்ஸம், என் அன்னை சந்தேகத்துடன் ஒரு பார்வை பார்த்தாள். பிறகு, "ஹலிமா போய்விடு,'' என்று உத்தரவிட்டாள். என் மனதை அறிந்துகொண்டாள்போலும் அவள்.

எனக்குச் சற்று கோபமாகத்தான் இருந்தது. இருப்பினும், நான் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. அந்தப் பேடன்னம் தான் போகும்போது என்னை ஒரு பார்வையில் சிக்கவைத்துக்கொண்டு போய்விட்டாள். நான் என்னை அறியாது, தாய் அருகில் இருக்பதையும் கவனியாது உதட்டைக் கடித்துக் கொண்டேன்.

"யாரம்மா அது?'' என்று கேட்டேன் அம்மாவை.

"ரஞ்சன் (அதுதான் என் ராஜபுத்திர பெயர்) அவள் ஒரு வேலைக்காரி. அவளைப் பற்றி உனக்கென்ன?'' என்றாள். அம்மா சந்தேகப்படுகிறாள் என்று அத்துடன் சும்மா விட்டுவிட்டேன்.

ஆனால் முதலில் கண்கள் ஒருதரம் சந்தித்துப் பேசிய பிறகு யார் தடை என்ன செய்யும்? அவளை அடிக்கடி சந்தித்துப்பேச எனக்குச் சந்தர்ப்பங்கள் பல கிடைத்தன. அவள் பாட்டிலும் உருவத்திலும் அடிமைப்பட்ட நான், அவள் பேச்சிலும் மயங்கிப் போனேன். குழந்தை போன்ற உள்ளம். அவள் உயிரையே என்னிடம் வைத்தாள். ஆனால் நான் அவள் அடிமையாகப் போவேனென்று அவள் கனவிலும் கருதவில்லை. மொகலாய இளவரசராகிய நானெங்கே, அனாதைப் பட்சியான அவளெங்கே? என் மேல் அன்பு வைப்பதற்கும் அருகதை யற்றவளென்று தன்னை எண்ணிக்கொண்டாள் பாவம்!

வாழ்க்கையிலேயே மனோகரமான காலத்தை நாங்கள் அப்போது நடந்த காதல் நாடகத்தில் அனுபவித்தோம். தெள்ளிய ஓடைகளும், சுனைகளும் நிறைந்த ஷாலிமார் தோட்டத்தில் நாங்கள் சந்தித்துப் பேசிய பேச்சுக்களே எங்கள் வாழ்க்கைக் கவிதைகளாகத் திகழ்ந்தன. பல பௌர்ணமி தினங்களில் தென்றல் மெல்ல வீச, அவளது

தேவ கானத்தில் என்னை மறந்து ஆனந்த வாரிதியில் மிதந்துகொண்டிருந்தேன். பின்னல் வரப்போகும் பேரிடி, எனக்கப் போது தெரியவில்லை.

எங்கள் திருட்டுக் காதல் எனக்குப் பிடிக்கவில்லை. அவளை மணம் புரிய எண்ணி, என் தாயிடம் சமாசாரத்தைச் சொன்னேன். பல நாட்களாக என்மேல் அவள் கொண்டிருந்த சந்தேகம் ஊர்ஜிதமாயிற்றுப் போலும்.

"ரஞ்சன், நான் ஒரு ராஜபுத்திர அரசன் பெண். நீ மகமதியனுக இருந்தாலும், ராஜபுத்திர அரசி ஒருத்தியைக் கல்யாணம் செய்துகொண்டு வாழ்வதுதான் உசிதம். அதை விட்டுவிட்டு, பிச்சைக்காரியைக் கல்யாணம் செய்துகொள்ள முடிவுகட்டி விட்டாயோ?" என்று என்னை முறைத்துப் பார்த்தாள்.

நான் உறுதியுடன், "என் உயிரை இழப்பினும், என் தீர்மானம் மாருதம்மா? அவள் தான் என் உயிர்நாடி; மறுக்காதே," என்று கெஞ்சினேன்.

தாய் கோபத்தில் பல்லை நறநறவென்று கடித்தாள். "எல்லாம் அந்தச் சிறுக்கியின் சாகசம். ஹேய்! அந்த ஹலிமாவை இப்படி அழைத்துவா" என்று தாதியை விடுத்தாள்.

ஹலிமா மிகவும் பயத்துடனே வந்தாள். என் தாயின் ருத்ர வடிவைக் கண்டதுமே அவளது பொன்னிற வதனம், சந்த்யாகால சூரியன்போல் சிவந்துவிட்டது.

"அடி கள்ளி, உன் வேசித் தனத்தை என்னவென்று சொல்வது? உத்தம குலத்தினன் மனதை மாற்றிவிட்டாயே" என்று கத்திக்கொண்டு அவள் முகத்தைக் கையினுல் இடித்தாள். பின்பு பளார் பளார் என்ற அடித்தும்விட்டாள்.

"போ; இங்கிருந்து, ஒழிந்துபோ; தலை காட்டாதே," என்று கூறித் தள்ள முன் வந்தாள்.

சுய உணர்வை இழந்த நான் அப்போது தான் விழித்துக்கொண்டேன். தாயின் கையை இருப்புப் பிடியில் பிடித்தேன்.

"அம்மா என்ன இது?" என்றேன்.

"சீ போ! நீயும் அரசாளப் போகிருய்? எக்கேடு கெட்டாகிலும் போ," என்று வெறுத்துக்கொண்டு போய்விட்டாள்.

என் தலை சுழன்றது. உண்மையைச் சொன்னதற்காக இந்தப் பலன்? அவளை வேசியைப்போல் வைத்திருக்கலாம், மணம் புரிந்து கொள்ளக்கூடாதா? நான் கண் விழித்தபோது ஹலிமா அங்கு இல்லை. போய்விட்டாள்.

தந்தைக்குத் தெரியவந்தது சமாசாரம். கோபத்துடன் ஒரு நாள் வந்தார். "பிச்சைக்காரிகளை மணம்புரிந்துகொண்டால் அரசுக்கு உரிமை கிடையாது, தெரிந்ததா?" என்று உறுமினுர்.

நானும் பயப்படாமல், "அப்படியே" என்று தலையசைத்தேன். நான் ஹலிமாவை மறக்கவில்லை. என்னுலியன்றமட்டும் வலை வீசிப் பார்த்தேன். என் வலையில் அவள் கிடைக்கவில்லை. அவளை மனைவியாக நினைத்திருந்த நான், அவள் இறந்துவிட்டதாகக் கருதினேனே ஒழிய, கைக்கெட்டாமல் போனவளாக அவள் என் மனதில் பதியவில்லை.

என் வாழ்க்கையின் சக்கரம் சாய்ந்துவிட்டது. என் தாய் இறந்துவிட்டாள். தந்தை, தம் புது மனைவி, நூர்ஜஹான் மோகத்தில் ஆழ்ந்துவிட்டார். உலகின் கவலையே அவருக்குக் கிடையாது. நூர்ஜஹான் கண்ணில் நான் ஒரு ஆணியாக இருந்தேன். தனக்குப் பிறக்கப் போகும் பிள்ளைகள் உரிமைக்குத் தடையாக நின்றேன், என்னை ஒழித்துவிட்டால்? அவள் மதி வேலை செய்ய ஆரம்பித்தது.

ஒரு நாள் காலை, நான் எதிரி சைன்யங்களுடன் கலப்பு வைத்திருப்பதாகக் கைது செய்யப்பட்டேன். என் தந்தையிடம் ஓடினேன். ஆனுல் நூர்ஜஹான் பக்கத்திலிருக்க, என் விண்ணப்பம் காதில் ஏறவில்லை. உலகிற் சிறந்த நவரத்ன சிம்மாசனத்தை ஏறவேண்டியிருக்க, இருள் அடைந்த காராக்ருஹத்தில் தள்ளப்பட்டேன்.

வாழ்க்கையின் சூரியனே அஸ்தமித்துவிட்டதுபோல் தோன்றியது. அந்நாளில் உலகின் சகல சுகபோகங்களையும் அநுபவித்த எனக்கு, கேவலமான உணவும், ஈரத்தரையில் படுக்கையும் கிடைத்தன. இதை என் வாழ்நாள் முழுவதும் கடக்க வேண்டும். இறப்பு எப்பொழுது வரும் என்று ஏங்கிக் கிடக்க வேண்டிய நிலைமை வந்துவிட்டது.

கடவுள் அவ்விதம் நினைக்கவில்லை. அஸ்தமித்துவிட்ட வாழ்க்கையில், மின்னும் மதி போல் ஹலிமா என் கண்ணில் தோன்றினுள்.

ஒரு நாள் காலை. கைதிகள் செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம் செய்துவிட்டு வந்து களைப்புடன் அமர்ந்திருந்தேன். அப்போது என் மனதில் எக்களிப்பெய்தச் செய்த குரல் கேட்டது. ஹலிமா? அவளுடையதா அது? யோசிக்க நேரமில்லை. அவளே என் எதிரில் வந்து நின்ருள். அவள் முகத்தில் தோய்ந்திருந்த ஏக்கத்தையும் கவலையினுல் குன்றிப்போன முகத்தையும் கண்டவுடன் எனக்குத் துக்கம் தாங்கமுடியவில்லை.

நான் கைதியென்பதை மறந்தேன். ''ஹலிமா...'' என்று அலறிக்கொண்டு ஓடினேன். ஜெயில் கம்பிகள் இடித்தவுடன் தான் எனக்கு நினைவு வந்தது. எனது உலர்ந்த கரங்களினுல் அவளது கரங்களைத் தடவிக்கொடுத்தேன். பழைய நினைவுகள் ஒன்றன்பின் ஒன்ருய்த்தோன்றிமறைந்தன. விதியின் விளையாட்டுப்போலும், ஷாலிமர் நந்தவனங்கள், நாங்கள் விளையாடின விளையாட்டுகள் போய், ஒருவரையொருவர் ஜன்னல் கம்பிகள் தடுக்கப் பார்த்துக்கொண்டிருக்க வந்துவிட்டது.

''ஹலிமா; நீ எப்படி இங்கு வந்தாய்? இது ஆக்ரா ஜெயில். உன்னை விடமாட்டார்களே?'' என்றேன்.

“நான் வேலை செய்துகொண்டிருந்த வீட்டு எஜமானியின் தகப்பனுர்தான் இந்த ஜெயில் காவலன். அவரது கருணையின் பேரில் இங்கு வந்தேன்'' என்ருள்,

அப்புறம் வேண்டிய விஷயங்கள் இருந்தன, பேசுவதற்கு. மனமுறிந்த காதல் நாடகத்தில் அநேகம் இருக்கும். நாழியாக, அவள் எழுந்தாள்.

“ஹலிமா! நீ போகிருயா? உன்னை நான் எப்பொழுது காண்பது? வறண்ட பாலைவனமாகிய இந்தச் சிறை வாழ்க்கையில் உன் தரிசன மழைகளை எப்பொழுது எதிர்பார்ப்பது?'' என்று கேட்டேன்.

''கடவுள் கிருபை இருந்தால் தினமும் நாம் சந்திக்கலாம். எல்லாம் நாளைக்குத் தெரியும், உங்கள் நினைவைத்தவிர நான் வேறென்றும் வேண்டவில்லை. நான் போய் வருகிறேன்'' என்று கூறிப் போய்விட்டாள்.

மறுநாளை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தேன், சகோரப் பறவைபோல். துக்ககரமான, இந்தச் சிறை வாழ்க்கையிலும், ஹலிமா என்னருகில் இருந்தால் அதுவே போதும் என்று தோன்றியது எனக்கு.

மறுநாள் ஹலிமா வந்தபோது அவள் முகம் பிரகாசமாய் இருந்தது, ''கடவுள் அடியோடு நம்மை மறந்துவிடவில்லை. இனி நான் உங்கள் அருகிலேயே இருப்பேன். அதற்கு அனுமதி கிடைத்துவிட்டது'' என்ருள்.

என்னுல் இதை நம்பமுடியவில்லை. குருடனைப்போல், ஜன்னல் கம்பிகளுக்கு வெளியே கையை நீட்டிக்கொண்டு, ''நிஜமாகவா? எப்படி...?'' என்று கேட்டேன்.

''ஜெயில் காவலன் வீட்டில் பணிப்பெண் வேலை கொடுத்துவிட்டார்கள், அவரும் உங்களுக்கு அன்னம் கொண்டுவரும் நிமித்தமாக என்னை, இங்குவர அனுமதி கொடுத்திருக்கிருர்,'' என்று விஷயத்தை விவரித்தாள்.

காலம் சென்றதே தெரியவில்லை. ஹலிமா அருகிலிருக்க, துக்கப்படப் பிரமேயமே இருக்கவில்லை. தினம் மாலையில் என்னைக் காண அவள் வருவாள். நான் உள்ளே, அடைபட்டு ஜன்னலருகில் உட்கார்ந்திருப்பேன். அவள் வெளியில் தாழ்வாரத்தில் கவலையுடன் அமர்ந்திருப்பாள். எங்கள் பேச்சுக்களெல்லாம், நாங்கள் காணக்கூடாத இன்ப நாட்களைப்பற்றியே இருக்கும்.

வெளியில் பறவைகள் கிரீச்சிடும். ''ஹலிமா, நாம் பறவைகளாக இருந்தால் கூடத் தேவலைபோலிருக்கிறது. ஆனந்தமாய் வான லோகத்தில் சஞ்சரிக்கலாமே'' என்பேன்.

“ஹிந்துஸ்தானத்தின் அரசராய் இருக்க வேண்டும் நீங்கள், இந்த ஏழையை நினைத்ததினுல் தானே இவ்வளவு துன்பங்களும்''

''அட பைத்தியம், உனக்காக உயிரை வைத்திருக்கையில் இந்தச் சிறைவாசமா பெரிது? உன்னைவிட்டு, அரசாள்வதைவிட இப்போது எனக்குக் கிடைத்திருக்கும், வாழ்க்கை இன்பமானதுதான். ஆனுல் நாம் மட்டும் ஏழையாயிருந்திருந்தால் வெகுதூர தேசம் போயிருப்போம். எல்லாம் நம் விதி. கடவுள் நம் மணத்தில் சம்மதிக்கவில்லை போலிருக்கிறது. உன்னை அருகில் அடைந்தும் அடையாமல் இருக்கிறேன்,''

''நல்ல காலம் பிறக்காமலா இருக்கப் போகிறது? கொஞ்சநாட்களில், ராஜ்யத்துக்குத் தடையாக நீங்கள் இல்லையென்று தெரிந்தவுடன், உங்களை விட்டுவிடுவார்கள். அப்போது......'' என்று பெருமூச்சுடன்

சொல்வாள். அந்தக் கண்காணு நாளை நினைத்தமாத்திரத்தில், புதைந்துபோன, இன்பக் கனவுகள், இன்ப வாழ்க்கை யெல்லாம் அப் பெருமூச்சில் கலந்துவரும்.

நாங்கள் எதிர்பார்த்திருந்த நாள் வரவில்லை. ஆனால் பேரிடி ஒன்று வந்து சேர்ந்தது. ஹலிமா ஒருநாள் வெகு கவலையுடன் வந்தாள். அவள் முகம் அழுது அழுது வீங்கிப் போனதுபோல் இருந்தது. என்றுமில்லாத காட்சி என்னைத் திகைக்க வைத்தது. "ஹலிமா, என்ன ஒரே யடியாய் மாறிப் போய்விட்டாயே. என்ன சங்கதி?" என்று வினவினேன். ஹலிமா என் முகத்தைப் பார்க்கவில்லை. தரையையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களிலிருந்து புல புலவென்று கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. எதையோ இழந்துவிட்டவள் போல், என் கைகளையும் தலையையும் தடவிக் கொடுத்துக்கொண்டிருந்தன அவள் கரங்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

"கண்மணி! சமாசாரத்தைச் சொல். என்ன நேர்ந்தது?" என்றேன் படபடப்பாக.

"ஒன்றுமில்லை உடம்பு சரியாயில்லை." என்று மழுப்பினாள். எனக்கு அதை நம்ப முடியவில்லை.

பிறகு ஒன்றும் சொல்லாமல் போய்விட்டான். இரண்டுநாள் வரவேயில்லை. எனக்கு நரக வேதனையாக இருந்தது. அவளது அழுதகண்ணும்முகமும் தோன்றித்தோன்றி மறைந்துகொண்டிருந்தன. அன்னம் இறங்கவில்லை.

மூன்றும்நாள் அவள் வந்தாள். அவள் முகத்தில் ஒரு சாந்தி நிலவியது. "ஹலிமா ......" என்று அலறிக்கொண்டு ஓடினேன்.

அவளுடன், இருவர் வந்திருந்தனர். அவர்களில் ஒருவன் ஜெயில் காவலன் என்று தெரியும் எனக்கு.

"'பீகம்' சீக்கிரம் வந்துவிடவேண்டும்" என்று கதவைத் திறந்தான்.

"என் ஆச்சர்யத்தை அதிகரிக்க ஹலிமா உள்ளே வந்தாள். ஒருகணம் இன்ப அணைப்பில் ஆழ்ந்தோம். கண்காணு நாள் என்று சொன்ன தினம் வந்ததோ எனும் படி, மானச சஞ்சாரங்களில் மறைந்தோம்.

அவளும் என் அதரங்களில் அன்பு கனிந்த முத்தமொன்றை ஈந்தாள். நான் இந்த உலகத்தை மறந்தேன்.

"ஹலிமா! என்ன இது! என்னை விடுதலை செய்துவிட்டார்களா?" என்று கேட்டேன்.



அவளும் புன்னகையுடன், "அநேகமாய்ச் செய்துவிடுவார்கள். இந்தாருங்கள், நான் உங்களுக்கென்று செய்த தின்பண்டம்," என்று ஒரு தின்பண்டத்தைக் கொடுத்தாள்.

நானும், ஆவலுடன் அதைப் புசித்தேன். என் மூளை வேலைசெய்ய ஆரம்பித்தது. திடீரென்று கண்கள் பஞ்சடைந்தன. என்னருமை, உயிரோவியம் கண்முன்னே சுழன்றாள். மங்கிய பார்வையில், அவள் என் முகத்தை வெகு ஆவலுடன் நோக்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். "ஹலிமா" என்று அலற என் மனம் தோன்றியது. ஆனால் நான் சுய நினைவிழந்தேன்.

நான் கண் விழித்தபோது, ஒரு சிறு வீட்டில் கட்டிலின்மேல் கிடந்தேன். "ஹலிமா, நான் எங்கிருக்கிறேன், நீ எங்கே போய்விட்டாய்." என்று அலறிக்கொண்டு எழுந்தேன், அங்கு ஒருவரையும் காணவில்லை.

ஜெயிலிலிருந்த நாம் இங்கு எப்படி வந்தோம் என்று புரியவில்லை. மயக்கம் தெளிந்த எனக்குக் கண்ணில் பட்டது ஜன்னலின்மேல் வைத்திருந்த கடிதம். அவசரத்துடன் பிரித்தேன். ஹலிமாவின் கையெழுத்துப் புலப்பட்டது.

"அன்பரே,

நீங்கள் கண்விழிக்கும் சமயத்தில், நான் இவ்வுலகை விட்டு நீங்கியிருப்பேன். இந்த ஏழையின்மீது அன்புவைத்த தாங்கள் அரசை இழந்து, சிறைவாசம் அடைய நேரிட்டது. அதுதான் போகட்டும் என்றால் உங்கள் உயிருக்கு உலை வைத்தேன் இந்தப் பாபி. நான் போகிறேன், இந்தத் துன்ப வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளியாக. உங்களை ஒரு கிழவி வந்து பார்ப்பாள். அவள்மூலம் உங்களைக் காபூல் கொண்டுசேர்ப்பதற்குச் சகல ஏற்பாடும் செய்திருக்கிறது. இங்கிருந்து நீங்கள், ஒருகணமும் தாமதியாமல் போய்விடவேண்டும். நம் காதல் வாழ்க்கையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்."

என்றிருந்தது.

என் புத்தி தடுமாறியது. ஹலிமா போய்விட்டாள். ஒரு கிழவி உள்ளே நுழைந்தாள். "சாஹிப், வண்டி வந்திருக்கிறது, கிளம்புங்கள் சீக்கிரம்," என்றாள்.

"வண்டியெல்லாம் கிடக்கட்டும், ஹலிமா எங்கே? நானெப்படி இங்கே வந்தேன்? அதை முதலில் சொல்லு," என்று கேட்டேன் ஆவலுடன்.

கிழவி சொன்னாள், "உங்கள் அபிமானிகளில் சிலர், உங்களை விடுவிப்பதற்காக, ஒரு கலகம் ஏற்பாடு செய்தார்கள். அதைக் கேட்டு நூர்ஜஹான் இனி, நீங்கள், உயிரோடு இருந்தால், ஆபத்துவரும் என்று தெரிந்து உங்களைக் கொன்றுவிடும்படி உத்தரவு செய்தாள், இன்றைக்கு இந்த நேரத்தில் ஆக்ராகோட்டையின் ஸ்தூபியில் தூக்கிலிட ஏற்பாடு செய்திருந்தார்கள். ஹலிமாவுக்கு அது தெரியவந்தது. உங்களை அன்று சந்தித்தபோது மயக்க மருந்து ஒன்றைக் கொடுத்துவிட்டு, உங்களை அப்புறப்படுத்திவிட்டாள். உங்கள் உடையில் அவள் சிறைக்குள் தங்கிவிட்டாள். பாவம்! இத்தனை நேரத்தில் அவளைக் கொன்றிருப்பார்கள்."

எனக்கு ஒன்றும் புரியவில்லை. திடுதிடுவென்று வெளியில் ஓடிவந்தேன். பூர்ண நிலவு காய்ந்துகொண்டிருந்தது. ஹலிமாவை, அவர்கள் கொல்வதற்கு முன், சிறையை அடையவேண்டும் என்று எண்ணினேன். தூரத்தில் ஷாலிமர் தோட்டம் கண்ணில் மினுக் மினுக்கென்றது. அதனுள் புகுந்துபோனால், கோட்டையைச் சீக்கிரம் அடையலாம். தலைதெறிக்க ஓடினேன்.

என் வாழ்நாளிலேயே மிகவும் பரிதாபகரமான நிலையை அப்போதுதான் அடைந்தேன். ஷாலிமர் தோட்டத்து ஒவ்வொரு கொடியும், எங்கள் பழைய நாடகங்களை நினைவுறுத்தியது. கொடியில் மறைந்து ஒளிந்து விளையாடிய ஹலிமா இந்த உலகத்திலிருந்தே மறையப் பார்க்கிறாள். அதை அடைய விடக்கூடாது. ஒன்று அவளைக் காப்பாற்றவேண்டும். அல்லது அவளுடன் மடிந்துபோகவேண்டும். இந்த எண்ணத்துடனேயே நான் ஓடினேன். பாதிவழி ஓடியிருப்பேன். கோட்டையிலிருந்து ஒரு மெல்லிய பீரங்கிச் சப்தம் வெளிவந்தது.

மயக்கத்தினால், என் கால் இடறியது. ஹலிமா போய்விட்டாள், அவளைத் தூக்கு வாங்கிவிட்டார்கள் பாபிகள். என் உயிரோவியம் உயிரைவிட்டது. தியாகத்தில், அந்த நிர்மானுஷ்யமான தோட்டத்தில் என் மனம் பதறிக் கதறினேன்.

உலகத்தை இழந்தவன்போல், துள்ளி விழுந்தேன். இன்னும் கொஞ்ச நேரத்திலே பக்கத்திலிருந்த ஏரியிலாவது போய் உயிரைக் கொடுத்திருப்பேன். ஆனால் அதற்குள் என் நினைவு தவறிவிட்டது.

நான் கண் விழித்தபோது காலைச் சூரியன் எழுந்துவிட்டான். முன்னிரவு நடந்த

விஷயங்கள் மனதில் அப்படியே பதிந்திருந்தன. அப்போது ஓர் எண்ணம் உதித்தது. அன்பில் கலந்து தன் உயிரைக் கொடுத்த ஹலிமாவுக்கு ஒரு காதல் கோவில் கட்டவேண்டுமென்று. உயிரை விட இருந்த எண்ணம் மாறியது. ஒரு திட மனதுடன் எழுந்து கோட்டையை அடைந்தேன். ரகசியமாய் ஜெயில் காவலனைப் போய்ப் பார்த்தேன். அவன் அழுதுகொண்டிருந்தான். பலநாள் பழகிய அவன் மனதில் ஹலிமாவின்மேல் ஒரு வாஞ்சை விழுந்துவிட்டது.

"ஐயோ என் கண்மணியின் உடல் எங்கே? அதைக் காணவேண்டும்," என்றேன். அவன் மௌனமாய் ஓர் அறைக்கு அழைத்துச் சென்றான். அங்கே எனக்காக உயிரைவிட்ட அத்தியாகி, படுத்திருந்தாள். அமர வாழ்வு அடைந்த அவள் முகத்தில் மெல்லிய புன்னகை அரும்பியோடிக்கொண்டிருந்தது.

தான் செய்த காரியத்தில், இன்பமடைந்தான்போலும்.

"ஐயா! ஓர் உதவி இந்த ஏழைக்குச் செய்வீரா?" என்று கேட்டேன். "என்ன அது?" என்றான்.

"இவள் உடலைப் பத்திரப்படுத்தி இங்கு வைத்துவிட்டுப் போகிறேன். இந்தக்காதல் தெய்வத்திற்கு, ஒரு காதற் கோயில் கட்டப்போகிறேன். அதுவரைக்கும், இவ்வுடலைப் பத்திரப்படுத்தி வைக்கமுடியுமா?" ஜெயில் காவலன், சிரித்தான், சந்தேகத்துடன். என் மூளை கெட்டுவிட்டது என்று எண்ணினான்போலும்.

"நான் பைத்தியமல்ல. சுயஉணர்வுடன் தான் பேசுகிறேன். விதியின் விளையாட்டினால், என் மனக்கோட்டைகள் நிறைவேறவில்லை. ஆனால் எங்கள் பரஸ்பர அன்பு மட்டும் உண்மையானதாக இருப்பின், உயிருக்காக ஒளிந்து ஓடும், இந்தப் பிச்சைக்காரன் கட்டாயம் உலகம் வியக்கும் காதற் கோயிலைக்கட்டுவேன்," என்று கூறிவிட்டு வெளியேறினேன். ஆம் அந்தச் சபதமும் நிறைவேறிவிட்டது" என்று முடித்தான் ரஹ்மான்.

ஷாஜஹான் மனது மாறிவிட்டது, "ஆம், என் மும்தாஜைவிட ஆயிரமடங்கு, உயர்ந்தவள்தான் ஹலிமா. இன்பத்தில் அமிழ்த்தப்பட்டதினால் மும்தாஜ் என்னை நேசித்தாள். ஹலிமா துன்பத்திற்காகவே உன்னை விரும்பினாள். ஹலிமா ஒரு காதல் தெய்வம்தான். அவளுக்கேற்ற காதற்கோயில் தான் இது," என்று முடித்தார் ஷாஜஹான்.

ரஹ்மான் வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஷாஜஹான். "ரஹ்மான், உலகத்திற்காவது இக்கோயிலை நான் மும்தாஜுக்காகக் கட்டினேன் என்றிருக்கட்டும்,!" என்று கேட்டுக்கொண்டார்.

ரஹ்மான் வெறுப்புடனே, "நான் மண்ணில் மறைந்தவுடன், இந்தச் சம்பவமும் மறைந்துவிடும். உன் பெயரே நிலைத்திருக்கும். எனக்கு அது வேண்டாம்," என்று பதிலளித்தான்.

கதையை முடித்தார் மாமா. மனதில் பலவித எண்ணங்களுடன், நானும் படுக்கப் போய்விட்டேன்.



# லைப்பாய் பழக்கத்தையும் அவன் அறிந்திருக்கிறான்!



இப்பொழுது அவன் அதிக விஷயங்களைக் கற்றுக்கொள்கிறான். ஆனால் லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோகிக்கும் பழக்கம் தவிர, வாழ்க்கையில் அவனுக்கு வேறொன்றும் அதிக நன்மை செய்யப்போவதில்லை. பாதுகாப்பற்றவர்களை எல்லா இடங்களிலும் பீடிக்கிற அழுக்கு அபாயத்திலிருந்து தான் கற்பித்த புத்திமதிகள் அவனுக்குப் பாதுகாப்பளித்திருக்கிற தென்பதாக அவன் தாய் சந்தோஷமும், பெருமையும் அடையக்கூடும்.




**லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.**

**அது ஒரு நல்ல பழக்கம்.**

L. 77-23 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

தொடர் கதை

# சித்ரா

கே. சுந்தரம்மாள்

7

“பொங்கலோ! பொங்கல்! பொங்கலோ! பொங்கல்” என்று தெருவில் ஆராவாரமிட்டுச் சென்றனர் சிறு பிள்ளைகள். முதல் நாளிலிருந்து பொங்கலை எதிர்நோக்கி, வேலைசெய்து, நாலுபுறமும் வழிந்தோடப் பொங்கிவரும், பொங்கல் பானையைப் பார்த்ததும் தங்களது லக்ஷ்யம் கைகூடி விட்ட பெருமை தோன்ற, உண்டு மகிழ்வுற்று, ஓய்வெடுத்துக்கொண்டது ஸ்திரீ சமுகம்.

காமாக்ஷி கரும்பை நறுக்கிக் கொடுக்க, ஊஞ்சற்பலகையிற் சாய்ந்த வண்ணம் கரும்புத்துண்டங்களை மென்று காமாக்ஷியின் உழைப்பை மட்டும் கிரஹித்துக்கொண்டு அவளைத் தங்களினின்றும் வேற்றுமையாக ஒதுக்குவதுபோல் சாற்றை விழுங்கி, சக்கையை ஊஞ்சலில் வைக்கப்பட்டிருந்த பீங்கான் தட்டில் துப்பிய வண்ணமிருந்தாள் யஜமானி அம்மாள்.

வாயிலிருந்த சக்கையை உமிழ்ந்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந்த வண்ணம், “காமூ! தை பிறந்து விட்டது. சித்ராவிற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டாமா?” என்றாள்.

“நீங்கள் இருக்கும் பொழுது எனக்கென்ன கவலை? ஏதோ நீங்கள் பார்த்துச் செய்வதை என் பாக்யமென்று நினைப்பேன். ஆனாலும் இந்தப் பரீக்ஷை முடியவிட்டுக் கல்யாண ஏற்பாடு செய்யலாம் என்று நினைக்கிறேன்”

“அதனாலென்ன, எல்லாம் பேசி முடித்துவிட்டால், பரீக்ஷைக்குப் பின்னால் கல்யாணத்தை நடத்துகிறது. இல்லை அவர்கள் சம்மதிக்கும் பக்ஷத்தில், கல்யாணம் நடந்துவிடட்டும். பரீக்ஷை முடிந்த பிறகு அவர்கள் அழைத்துச் செல்லட்டும்? சரிதானே”

“எப்படியோ? உங்கள் குழந்தை அவள். உங்கள் உசிதப்படி செய்யுங்கள்”

“நாராயண வாத்தியரிடம் அன்னிக்கே சொன்னேன். ஏதோ இளையா வரன் இருக்குன்னு சொன்னார். சாயங்காலம் சுப்பனை விட்டுக் கூப்பிட்டனுப்புகிறேன்” என்று சொல்லி முடிக்குமுன்,

“அம்மா! நமஸ்காரம். பால் பொங்கிற்றா?” என்று கேட்டவண்ணம் அவ்விடம் தோன்றினார் நாராயண வாத்தியார்.

“வாருங்கள் வாருங்கள். ஆயுசு நூறு. இப்பதான் காமுவிடம் உங்களைக் கூப்பிட்டனுப்ப வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தேன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் வந்துவிட்டீர்கள். இதுவே சகுனம்.”

“என்ன அவசர விஷயம்?” என்று மேல் வேஷ்டியை உதறிக் கீழே தள்ளிவிட்டு அதை விரித்து அதன் மீது உட்கார்ந்தார்.

“அவசரம் ஒண்ணுமில்லை. அது தான், சித்ராவின் கல்யாண விஷயமாகப் பேசத் தான். தை பிறந்து விட்டது; வழியும் பிறக்க வேண்டியதுதானே. வயசாயிடுத்து. பாவம் அவள் நிலைமைக்கு, ஒரு நல்ல இடத்திலே கண்ணைக் கசக்காமலிருக்கும்படி கொடுத்துவிட்டால் கவலைவிட்டுது காமுவுக்கு. நீங்கள்தான் கூடியவரையில் அதிக வயதாகாமல் பார்க்கவேண்டும். ஏதோ பத்து நூறு நான் கூடப்போட்டு நடத்திவிடுகிறேன். நானே கன்யாதானம் செய்து கொடுக்கிறேன்” என்றாள்.

“அடடா! என்ன சகுனம்? நான் எதை உத்தேசித்து இப்ப வந்தேனோ அதே விஷயத்தை நீங்களே சொல்லிவிட்டீர்கள்.”

“அப்படீன்னா பழமாகவே கொண்டுவந்துவிட்டீரா?”

“தடையென்ன. அவ்விடத்துப் பெயரைச்சொன்னாலேயே எல்லாம் கைகூடிவிடுமே. அவா பூர்வீகம் திருவிதாங்கோவில். நிலம் வீடு எல்லாம் இருக்கிறது. வடக்கே குண்டூருலே உத்யோகம். மாதம் முந்நூறு ரூபாய் சொளை சொளையா வாங்குகிறார். மூத்தாள்ளே ஒருபையனும், இரண்டு பெண்களும். பெண்கள் புக்ககம் சென்றுவிட்டார்கள். பிள்ளையாண்டான் பட்டணத்திலே மெடிகல் காலேஜிலே படிக்கிறானாம். இவருக்கு வயது நாற்பத்தியெட்டுத் தான். ஆனால் பார்த்தால் முப்பதுவயதுகூட மதிக்கமுடியாது. தலை ஏதோ ஒண்ணுரெண்டு நரை வந்திருக்கு. இந்தக் காலத்திலே இருபதுவயது

பையன்களுக்குக்கூட சில சமயம் கண்ட தைலத்தையெல்லாம் தடவி நரைகாணுகிறது. கிராப்வாரிண்டு, வெள்ளை ஸில்க் ஷர்ட்டும் விசிறிமடிப்பு அங்கவஸ்த்ரமும் போட்டுண்டு கிளம்பினார்னா அசல்மன்மதன் தான். நல்லசிவப்பு. களைபொருந்திய முகம். சித்ராவுக்கேற்ற ஜோடி. ஒரு தம்படி நாம் செலவழிக்க வேண்டாம். சகல நகையும் அவரே போட்டுடுவார். கல்யாணம் மட்டும் ஏதோ ஒரு கோவிலில் வைத்துச் செய்தால் போரும். பிக்குபிடுங்கல் இல்லை. ராஜாத்திபோல் எட்டுச்சேவகன் கைகட்டி நிற்க ஆனந்தமாக இருக்கலாம். சித்ரா ஜாதகம் நல்ல அதிருஷ்டமுள்ளது. அவள் நல்ல இடத்திலே தான் போய்ச் சேருவான்னு நான் சொல்லவில்லையா? காமு மாமியும் ஜில்லுன்னு பெண்ணோடே இருக்கலாம்" என்றுமுடித்தார்.

"போருமே பெண்வீட்டில் போய் நிற்க வேண்டியது தான் பாக்கி. கைகால் உள்ள வரை மாமிதான் எனக்குப்புகல், முதல்லே பெண் சுகப்படற வழியைப் பாரும்"

"வயதைத்தவிர மற்றதெல்லாம் ரொம்ப திருப்தி. ஆனாலும் பாதகமில்லை. சிறுபிள்ளைக்கு வாக்கப்பட்ட பேரெல்லாம் மாத்திரம், விதிக்குத் தப்பமுடிகிறதா? இதையே முடிச்சுடலாம். அவர் பெண்ணைப் பார்க்க வேண்டுமென்று சொல்லலையா?" என்றாள் யஜமானியம்மாள்.

"இப்போ ஒரு நாடகம் போட்டானோ, அப்ப அவரும் வந்திருந்தாராம். முக்கியமானவேஷம் போட்டுண்ட பொண்ணுன்னு சொன்னேன். அப்படீன்னா பார்க்கவேண்டாம். அவா சம்மதத்தைக்கேட்டு முகூர்த்தத்திற்கு ஏற்பாடு செய்துடுங்கோன்னு சொல்லிப்பிட்டார்."

"ஏண்டி காமு. சரின்னு சொல்லிவிடலாமா, உன் பெண்ணைக் கேக்கணுமா?"

"அவளைக் கேட்கத்தான் வேண்டும். மேலும், வாத்தியாரே! பரிக்ஷை முடியட்டுமே. கல்யாணமாயிட்டா அவா என்ன சொல்லுவாளோ?"

"அதைப்பத்திக் கவலையேவேண்டாம். தையிலே கல்யாணத்தைப் பண்ணிப்பிட்டா நான் வந்து போய்க்கொண்டிருக்கிறேன். பரிக்ஷை முடிந்தபின்பு கூட்டிக் கொண்டுபோறேன்னு அவரே சொல்லிப்பிட்டார்."

"அப்ப சரி. எல்லாத்துக்கும் அவளை ஒரு வார்த்தை கேட்டுவிட்டுத் தகவல் சொல்லறாம்" என்றாள் காமு. ஆனால் அன்று பிரபாகரன் சொன்ன வாக்யம் அவள் காதில் ஒலித்துக்கொண்டே இருந்தது.

"அப்படின்னா சரி. இதுதான் நடக்கும். நல்ல சகுனமெல்லாம் ஆச்சு. ஆளை நேர்லே பார்த்துட்டாள்னா, நிச்சயம் சம்மதிச்சுவிடுவா. எல்லாத்துக்கும் நாளை மத்யான்னம் நான் வரேன். அவசியமானால் அவரை வரவழைக்கலாம். நீங்கு நேர்லே பார்க்கலாம்."

"பார்ப்போம் அவசியமின்னா. அந்தப் பொண் பிடிவாதம் பிடிச்சா வரச்சொல்லலாம். நீங்க சொன்னா போராதா?"

"சரி. வரட்டுமா?"

"சித்த இருங்கோ. காமு காப்பி போட்டு கொடு. இரண்டு ஸொயனும், வடையும் கொண்டுவந்து வை" என்றாள் யஜமானி.

டிபன் காப்பி சாப்பிட்டு விட்டு வாத்தியார் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் சித்ரா அவ்விடம் வந்தாள்.

ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த யஜமானியம்மாள் "சித்ரா! வாம்மா இப்படி உட்கார்" என்று சொல்லிக் கையைப் பிடித்துத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டாள்.

இச் செய்கை சித்ராவிற்கு மிகவும் ஆச்சர்யத்தைக் கொடுத்தது. "இது நன்மைக்கா? தீமைக்கா?" என்ற சிறு பிரச்னையும் எழும்பலாயிற்று.

'காமு! சித்ராவுக்குக் காப்பி கொண்டு வா?" என்றாள்.

கையில் காப்பியுடன் வந்த தாயாரைப் பார்க்கும் பொழுது அவளின் வெளிறிய முகம் சித்ராவைத் திடுக்கிடச்செய்தது.

"சித்ரா! உனக்கு ஒரு நல்லசேதி சொல்லப்போகிறேன்" என்றாள் யஜமானி.

"கேட்கச் சித்தமாக இருக்கிறேன்" என்றாள் சித்ரா.

மாப்பிள்ளையின் விமர்சனங்களை வாத்தியாரைவிடப் பதின்மடங்கு அதிகமாக விஸ்தரித்துவிட்டு, "உனக்கு அவரை நேரில் பார்க்கவேண்டுமானால் சொல்லு, வரவழைக்கிறேன்" என்றாள்.

"மாமி! தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும். எனக்கு மேல் வயதானவர்களெல்லாம் இல்லையா? எனக்கு இப்பொழு

தைக்குக் கல்யாணமே வேண்டாம். படிப்பு முடிந்தபின் பார்த்துக் கொள்ளலாம்''

"உன் படிப்பிற்குத் தடையேயில்லை. கல்யாணம்மட்டும் இப்பொ நடக்கும். பரீக்ஷைக்குப் பிறகு தான் கூட்டிப்போவாராம். உன் அதிருஷ்டம் தான் இந்த இடம் வந்திருக்கு."

"என் அதிருஷ்டம் தான் தெரிந்திருக்கிறதே. என்னை விட மூன்று மடங்கு பெரியவர். அவரை நான் எப்படிக் கல்யாணம் செய்து கொள்ள முடியும். இந்தக் கிழங்களுக்கெல்லாம் கல்யாணம் என்ன? என்னை மன்னித்து விடுங்கள். எனக்குக் கல்யாணமேவேண்டாம்''

"இதைப்பார் சித்ரா! கல்யாணம் வேண்டாம்னா நடக்கிற காரியமா? சின்னஞ் சிறுசா படிச்சவனா பாத்தா, கட்டிக் கொடுக்க உன் அம்மா எங்கே போவாள்? மேலும் அந்தஸ்தும் பணமும் உள்ளவர்கள் சமையல்காரியின் சம்பந்தத்தை நாடுவார்களா? இப்படி இளையாக்காரன் தான் பண்ணிப்பான். பெரியவர்கள் நல்லதையே செய்வார்கள் என்று நினைத்து ஒப்புக் கொள்ளு''

"மாமி! மன்னியுங்கள். நான் இரண்டாந் தாரமாக வாழ்க்கைப்பட மாட்டேன்."

"சித்ரா! மாமி சொல்வதைக்கேள். எல்லோருக்கும் நன்மை" என்றாள் தாய்.

"அம்மா நீயுமா சொல்லுகிறாய். உனக்குமேல் பெரியவரை உன் மாப்பிள்ளை என்று சொல்லிக்கொள்ள வெட்கமாக இல்லையா?"

"வெட்கம்—மானம்—நம்மைப் போன்ற ஏழைகளுக்கு அவையெல்லாம் வைத்துக் கொள்ள முடியுமா?"

"சித்ரா! வீண் தர்க்கம் எதற்கு? இந்தக்கல்யாணம் நடந்தேயாகவேண்டும்" என்றாள் சற்றுக்கடுமையான குரலில்.

சட்டென ஊஞ்சலை விட்டு இறங்கி நின்றுகொண்டு, "நடக்காது இவரை நான் கல்யாணம் செய்து கொள்ளமாட்டேன். என் சம்மதமின்றி என் கல்யாணம் எப்படி நடக்கும்?"

"ஓஹோ! அவ்வளவு தூரத்திற்கு வந்து விட்டாயா? இதைப்பார். பிரபாகரனைக் கல்யாணம் செய்து கொள்ளலாமென்று மனப்பால் குடிக்கிறாய். அவனிஷ்டப்படி நடப்பது என் ஜீவனுள்ளமட்டும் முடியாத விஷயம். அவன் பிரசங்கமெல்லாம் மேடையுடன் தான் நிற்கும். என்னிடம் நடக்காது. ஒரு சமையல்காரி எனக்குச் சம்பந்தியாக வரமுடியாது. ஜாக்ரதை."

"ஐயோ? இதென்ன கொடுமை? முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவானா? மான் சிம்மத்தை அண்டமுடியுமா? எட்டாப்பழத்திற்குக் கொட்டாவி விடுபவள் நானல்ல. சௌதாவும், அவரும் ஏதோ சொன்னார்களே தவிர, நான், அப்படிநினைத்ததில்லை. அதற்காக நான் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேனென்று சொல்லவில்லை. ஏழையான என்னைப் பணமுள்ள வாலிபர்கள் வேண்டுமானால் மணக்கமுடியாது. என்போன்ற ஏழை மாணவன் மறுக்கமாட்டானல்லவா? இருந்தாலும் நான் படித்து உத்யோகம் செய்தபிறகு, என்னை ஏற்கும் சுதந்தர வாலிபன் தோன்றினால் கல்யாணம். இல்லையேல் கன்னியாகவே காலங்கழிப்பேன். தயவுசெய்து என்மீது இரக்கங்காட்டி இக்கல்யாண ஏற்பாட்டை நிறுத்திவிடுங்கள்" என்று அவள் காலில் விழுந்து நமஸ்கரித்தாள்.

"மஹாராஜியாக ஆயிரங்காலம் நன்னா இரு. உன்னை மேலே மேலே படிக்க வைத்ததின் பலனா இது? நன்றாக எதிர் வாதம் பேசுகிறாய். கல்யாணம்னு பெரியவர்கள் செய்வதை ஏற்றுக்கொள்ளுவதே நல்ல பெண்களுக்கு அழகு. தறிதலைகள் தான் இப்படி எல்லாம் பேசும்."

"புதுப்புடவை உடுத்திக்கொள்ளலாம். மாலை போட்டுக்கொள்ளலாம். நிறைய நகை போட்டுக்கொள்ளலாம். ஐந்தாறு நாட்கள் தமாஷாகக் கழியும் என்ற மனப்பான்மையுள்ள, எட்டு, பத்து வயது பெண்களுக்குக் கல்யாணம் செய்வதாக இருந்தால் உங்கள் நியாயம் சரி. பகுத்தறிவு ஏற்பட்டு, கல்யாணம் என்றால் அது தனது வாழ்க்கை முழுவதற்கும் பொறுப்பான விஷயம் என்பதைச் சிந்திக்கும் மனப்பான்மையுடைய வயதில் இஷ்ட விரோதமாக நடக்கமுடியுமா? கல்வியறிவற்ற காலம் நடுவில் வந்ததே. பழமையின் பழக்கத்தையே நான் சொல்லுகிறேன். நமது புராண இதிகாசங்களில் வதூவே வரனைத் தேர்ந்தெடுத்தாள் என்று எழுதியிருக்கவில்லையா? தறிதலையாக நான் பேசவில்லை. நான் வேண்டிக்கொள்வது, இந்தக்கல்யாணம் வேண்டாமென்பதே. என்னைப் பலவந்தம் செய்யவேண்டாம்"

"சரி. நீ இவ்வளவு பேசியபின் நான் மாத்திரம் பயந்து பேசுவானேன்? பிரபாகரன் வருவதற்குமுன் உன் கல்யாணம் முடிந்துவிடவேண்டும். அவன் வந்தால் வீண்கலவரம் செய்வான். என் குடும்ப கௌரவத்தைக் காப்பது எனது கடமை. உன்னைக் கெடுக்கவேண்டுமென்பது என் எண்ணமல்ல. கூடியமட்டும் இந்த வரன் சிலாக்கியம் என்றே பலவந்தம் செய்கிறேன். நீ வளர்ந்தது, என் பொருளினால். நீ உடுத்தியிருக்கும் சித்தாடையும் என் பணமே என்பது ஞாபகமிருக்கும்" என்றாள் கடுமையாக.

"உண்மை. எல்லாம் உங்கள் தயவினால் தான் நடக்கிறது. உங்கள் ஆதரவில்லாவிட்டால் நாங்கள் நாயினும் கேடாய் அலையவேண்டியதே. இந்த நன்றியை ஒருநாளும் மறக்கமாட்டேன். என் கல்யாணம் என்ற பேச்சைத்தவிர மற்ற விஷயங்களில் உங்கள் காலுக்குச் செருப்பாக நடந்துகொள்ளுகிறேன். இந்த விஷயத்திலும் உங்கள் மேன்மையான குணத்தினால், என் வாழ்க்கைப் பாதையை நானே வகுக்க அனுமதியுங்கள்" என்றாள்.

"போருண்டி உன் பிரசங்கம். தெரியாமலா அந்தக்காலத்தில் அறியாத வயதில் கல்யாணம் செய்யவேண்டுமென்றார்கள். ஒரு நிபந்தனையின்பேரில் உன்னிஷ்டப்படி விடுகிறேன்."

"அப்படியே செய்யுங்கள்"

"பிரபாகரன் வந்து எவ்வளவு முயற்சி பண்ணினாலும் நீ, கல்யாணத்திற்குச் சம்மதிக்கக்கூடாது. சொப்பனத்தில்கூட அவனை ஸ்மரிக்கக்கூடாது என்ன?" என்றாள்.

"நான் எள்ளறைக்குமே அந்தமாதிரி நினைக்கவில்லை. இனிமேலும் நினைக்கமாட்டேன். அவர் வந்துகேட்டால் உங்கள் மீது எனக்குக் காதலில்லை என்று கண்டிப்பாகச் சொல்லிவிடுகிறேன். பரந்த நோக்கமுள்ள அவர் மனம் தூய்மையான அன்பையே விரும்பமுடியும். உங்கள் குடும்ப கௌரவத்தில் நான் குறுக்கிடமாட்டேன். கிழங்களின் மிருக இச்சையைத் தணிக்கும் பொருட்டாகவா, வறுமையின் மடியில் வளரும் பெண்மை வஞ்சிக்கப்படுகிறது.


பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு,

மாமி, உங்கள் பிள்ளையை நான் ஸ்மரிக்கவில்லையென்று எங்குச் சென்று சொல்லச் சொன்னாலும் சொல்லுகிறேன்" என்றாள் கண்ணீர் வழிய.

நயம் பயம் ஒன்றும் பிரயோஜனப்படாது என்று தோன்றவே, "சரி, நீ போகலாம். உன் கல்யாண விஷயத்திற்கே இனிமேல் நான் தலையிடப் போவதில்லை. ஆனால் பிரபாகரன் விஷயம் நான் சொன்னது நினைவிருக்கட்டும்" என்றாள்.

"அவை மறக்கமுடியுமா" என்று சொல்லிவிட்டு விர்ரெனச் சென்றுவிட்டாள் சித்ரா.

சற்று நேரம் ஊஞ்சலில் படுத்தவண்ணம் சிந்தனையிலாழ்ந்தாள் யஜமானியம்மாள். பெண்மையின் சக்தி அதிதீவிரமான ஆராய்ச்சியிலிறங்கிற்று. அரை மணிநேர ஆராய்ச்சியில் அபூர்வயோசனை உதயமாயிற்று. அபாரமாக வேலைசெய்யும் மூளையானது நல்ல வழியிலும் விசித்ரமான வேலைசெய்யும், கெட்டவழிகளிலும் நூதனமாக விஷயங்களைக் கண்டுபிடிக்கும். இது விதியின் அமைப்போ? இயற்கையின் அமைப்போ? அவர்கள் லக்ஷ்யம் எளிதில் நிறைவேறி வருகிறது, வஞ்சகமான வழியில். இதை உத்தேசித்தே, கல்வியறிவு விருத்தி யடைந்தால் பகுத்தறிவும் சக்தியும் விரிவடையும், நன்மையான விஷயங்கள் நடைபெற முடியும். அதனால் பெண்களுக்குக் கல்வியறிவு அவசியமென்று, அறிஞர்கள் சொல்லுகின்றார்கள் போலும்.

சட்டென எழுந்து உட்கார்ந்துகொண்டு, "காமூ, காமு! இங்கே வா?" என்றாள்.

"ஏனம்மா, இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லியவாறு அவ்விடம் வந்தாள் காமு.

"சித்ராவிற்கு இந்த வரனை முடித்துவிடுவது என்று தீர்மானம் செய்துவிட்டேன்"

"அவள் தான் இப்பொழுது கல்யாணம் வேண்டாமென்றாளே. அவள் சம்மதமின்றி நாம் எப்படி முடிப்பது?"

"சம்மதமென்ன, தன்னைப்போல் இரண்டு பேர்களைப் பார்த்தால் புத்தி வராமலா போகும்?"

"அது சரி. இருந்தாலும் இஷ்டமில்லாமல் அவளைக்கஷ்டப் படுத்துவானேன்? எனக்கும் அவள் ஒருத்திதானே பிரபஞ்சம். அவள் சொல்லுகிறபடி படித்து உத்யோகம் பார்க்கட்டும். அந்தக் காலத்தில் அவள் மனம்போல் கல்யாணம் செய்துகொள்ளட்டுமே."

"காமூ! கொள்ளிக் கட்டையை எடுத்துத் தலையைச் சொறிந்துகொண்டால் என்னவாகுமோ, அதுபோலாயிற்று, உன்னையும் உன் பெண்ணையும் இவ்வளவு தூரம் முன்னேறும்படி செய்தது. இதில் எனது குடும்ப கௌரவம் பாதிக்காமலிருக்குமானால், உங்கள் வழிக்கே வரமாட்டேன். கல்யாணமானாலும் சரி, கல்லெடுப்பானாலும் சரி என்று விட்டு விடுவேன். உன் பெண் என் அடிமடியிலேயே கையை வைத்துவிட்டாள். இதில் முன் எச்சரிக்கையுடன் இருக்காவிட்டால் விஷயம் மோசத்தில் வந்து முடியும்"

"அப்படியென்ன மோசம் வந்து விடும்? நம்மையறியாமல் என்ன நடந்துவிடும்? பிரபாகரனைக் கலியாணம் செய்துகொள்ள அவள் நினைக்கமாட்டாள். அவன் வந்ததும் நீங்கள் அவனிடம் விஷயத்தைச் சொல்லித் தடுத்தால் கேட்காமல் என்ன செய்வான்" என்று வாயினால் பதில் சொன்னாளே தவிர, அன்று பிரபாகரன் சித்ராவின் கையைப் பிடித்துக்கொண்டு சொன்ன வாக்யமும், தோற்றமும் மனதை மிகவும் வாதனை செய்தன.

"அப்படிப்பட்ட பிள்ளையை, இந்த வயிறு சுமக்கவில்லையே" என்று வயிற்றில் ஓங்கி ஓர் அடி போட்டுக்கொண்டு, "அடுத்த தடவை அவன் வந்தால், நிச்சயம், உன் பெண்ணை எங்காவது அழைத்துச் சென்று ரிஜிஸ்டர் கல்யாணம் செய்துகொண்டு விடுவான். வீட்டில், சண்டையும், மனஸ்தாபமும் தான் மிஞ்சும். என் மானம் அடியுடன் தொலைந்து விடும். அவன் உறுதி குரங்குப்பிடி. மிஞ்சிப்போனால் அவன் அப்பாவும் சம்மதித்து விடுவார். அப்படி நடக்குமானால் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு என் பிராணனை விடுவேனே தவிர, உன் பெண்ணை மஞ்சள்நீர் சுற்றி அழைக்கமாட்டேன். உனக்குச் செய்த உபகாரத்திற்கு என் பெண் பழியை ஏற்றுக்கொள்ளு. உன் புருஷன் இறந்தபொழுது நீ இருந்த நிலைமையையும் நான் செய்த உதவியையும் நினைத்துப் பார்த்தாயானால் நான் கேட்கும் இச்சிறு உதவியைச் செய்ய நீ கடமைப்பட்டவள் என்பது நிதர்சனமாகும். அப்படி உன் பெண்ணைப் பாழுங்கிணற்றில் தள்ளவில்லை. முன்னே ஒருதடவை அவனை நான் பார்த்

திருக்கிறேன். ராஜாப்போலிருப்பான். சுக ஜீவியாக வாழலாம். நீ சிறுபிள்ளைக்கு வாழ்க்கைப்பட்டு என்ன சுகத்தைக் கண்டாய். ஆயுசும் மாங்கல்ய பாவமுமே நன்ருக இருக்கவேண்டும். உன்னைக் கெஞ்சி மன்ருடுகிறேன். எனக்குக் கௌரவ பிச்சையளி. என் மானத்தைக் காப்பாற்று" என்ருள்.

காமுவின் மனம் சொல்லிற்கு அடங்கா வேதனைப்பட்டது. தனது கஷ்ட சமயத்தை அவள் எடுத்துச் சொல்லவே, பழைய சம்பவம் அவள் மனக்கண்ணில் காட்சியளித்தது. சித்ராவின் தந்தை இவர்கள் வீட்டில் நிலங்களை மேற்பார்த்து மற்றக் குடும்ப விஷயங்களையும் கவனிக்கும் காரியஸ்தராக வேலை பார்த்து வந்தவர். வருஷத்திற்குச் சாப்பாட்டிற்கு வேண்டிய நெல்லையும் கொடுத்து, 35 ரூ. சம்பளமும் கொடுத்து வந்தார்கள். அது அவர்களுக்குக் கஷ்டமில்லாமல் சாப்பிடவும் துணிமணி வாங்கிக் கொள்ளவும் போதுமானதாக இருந்ததே தவிர, ஆபத்திற்குதவ, நகைகளாகவோ பணமாகவோ சேர்த்துவைத்துக்கொள்ளச் சாத்தியமில்லாமல் போயிற்று. இந்த நிலைமையில் சித்ரா ஏழுவயதுக் குழந்தையாக இருக்கும்பொழுது, திடீரென்று பாரிசவாயுவினுல் பீடிக்கப்பட்டு, மூன்று மாதம் படுக்கையிலிருந்து, காலனின் வீட்டையடைந்தார் சித்ராவின் தந்தை. அவரது ஈமக்கடனைச் செய்யக்கூட அவள் கையில் பணமில்லை. அந்தச்சமயம் ஸீதாலக்ஷ்மி பெருந்தன்மையாக, அவருக்கு யாதொரு குறைவும் இல்லாமல் உத்தரகிரியைகளைச் செய்வித்து, காமுவைத் தன் வீட்டோடு இருக்கும்படி ஏற்பாடு செய்தாள். அந்தச் செய்கைக்காக, அவள் அவ்வூர் முழுவதாலும் போற்றப்பட்டாள். காமு குடியிருந்த வீட்டுக்காரப் பாட்டியம்மாள், வாடகை இல்லாமலே தன் வீட்டில் ஓர் அறையைக் காமுவிற்குக் கொடுத்து, சித்ராவை வளர்க்கும் பணியையும் ஏற்றுக்கொண்டாள்.

காண்போர் மனதையும், கண்களையும் ஒருங்கே கவரப்பெற்ற சித்ராவைத் தன் வீட்டில் வளர்த்தால், தன் குழந்தைகளுடன் சமமாகப் பழகிவிடும், பார்ப்பவர்கள் யாவரும் சித்ராவைத் தங்கள் பெண் என்றே நினைத்துப் பேசுவார்கள், பின் சமையல்காரி பெண் என்ருல் தனதுகௌரவத்திற்குப் பங்கம் வருமென்று, அவளே பாட்டியினிடம் இவ்வித ஏற்பாடு செய்தாள். மற்றப்படி, கணக்காகக் காமுவின் சம்பளத்தில் சித்ராவிற்குச் சில நகைகளும் செய்து போட்டாள். இன்றும் கல்யாணத்திற்கென்று பணத்தை ஒதுக்கி வட்டிக்குக் கொடுத்து வாங்குவாள்.

பிரேதத்தின் பக்கத்திலமர்ந்து, கையில் பொருளில்லாமல், செய்யும் வகையறியாது தவிக்கும் பொழுது, "காமூ! கவலைப் படாதே. நானிருக்கும்பொழுது விசாரமேன்?" என்று அமிர்தமொழி சொன்ன, அந்த ஒரு வாக்கியத்திற்கே தான் எத்தனை கடமைப் பட்டவள். தனது தேகத்தைச் செருப்பாகத்தைத்து அவள் காலில் போட்டால் கூடத் தனது கடமைதீராது. ஆனல் அவளாகப் பார்த்து, சித்ராவின் இஷ்டப்படி செய்தால் அது விஷயம் தனது வாழ்நாளில் எத்தகைய ஆனந்த ஜோதியைக் காண்பிக்கும். ஆனுல் மனிதனின் மனதிற்கு நமக்கு இவ்வளவு தான் உண்டு என்ற திருப்தியேற்படுவது என்பது அருமையிலும் அருமை. சித்ராவின் உள்ளமும் பிரபாகரனின் அன்பும் எந்த விதியினுல் ஏற்பட்டதோ அதுவே அதன் முடிவைக் காண்பிக்கட்டும். இவள் சொல்லுகிறபடி இந்தவரன் அப்படி மோசமானது என்று சொல்லுவதற்கில்லை. சிறுபிள்ளைக்கு வாழ்க்கைப்பட்டு நாம் அடைந்த கதிதான் என்ன? என்ற முடிவிற்கு வரும் தருணம், அன்று சித்ராவும் பிரபாகரனும் நின்ற தோற்றமும், அவன், "மாமி நான் சித்ராவையே மணப்பேன்" என்று சொன்ன காட்சியும் தோன்றவே இக்கல்யாணத்தினுல் தனது ஒரேசெல்வம், எங்காவது தற்கொலை செய்துகொண்டு விட்டால் தனது வாழ்க்கை வனத்தில் இருளைத்தவிர என்ன காணமுடியும்? என்று நினைக்க அவளால் ஒன்றுமே சொல்ல முடியவில்லை. "ஈசா! ஏழையை இவ்விதமாகவா சோதனை செய்யவேண்டும்? என் வாழ்க்கையில் எவ்வளவோ கஷ்டங்களிலும் இப்பெண்ணிற்காகத் தானே இந்த உயிரைச் சுமந்தேன். கடைசியில் அது கண்ணும் கண்ணீருமாக நிற்கும் நிலைமையையா நான் காணவேண்டும். நான் எவ்வளவோ முன் ஜாக்கிரதையுடன் இப்பாவிப்பெண்ணை எச்சரித்தும் இப்படி வந்து முடிந்ததே. பணம், அந்தஸ்து, கௌரவம், இவை, அழகையும் புத்தி விசாலத்தையும் மிஞ்சுவதே உலகநடை போலும்" என்றெல்லாம் தோன்றினதே தவிர, முடிவாகப் பதில் சொல்லச் சக்தியற்று நின்ருள்.

இவளின் மௌனத்தைக் கண்ட யஜமானியம்மாளின் நிலைமை சங்கடமாகி விட்டது.

"என்னடீ காமு! வாய் அடைத்துப் போய் விட்டதா?" என்று அதட்டினதும் திடுக்கிட்டவளாக,

"இல்லையம்மா, நீங்கள் பழைய சம்பவத்தைச் சொன்னதும், அந்த ஞாபகம் என்னையே மறக்கச்செய்து விட்டது. உங்களுக்கு என் தேகத்தைச் செருப்பாகத் தெச்சுபோடக் கடமைப்பட்டவள். ஏதோ, அப்பெண்ணின் மேலுள்ள பாசம் அதன் மனம் நோக எப்படிநடப்பது என்று சற்றுத்தள்ளாடியது. உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள்; நீங்கள் எப்படிச்சொன்னாலும் அப்படியே நடக்கிறேன்."

"அப்படியானால் நான் சொன்னபடி செய்வாயா?"

"என் குலதெய்வத்தின்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்."

"இக்கல்யாண ஏற்பாட்டைப்பற்றி முன்னதாக உன் பெண்ணிடம் ஒன்றுமே சொல்லக்கூடாது. வாத்தியாரிடம் சொல்லி அவரிடம் தகவலை ஒரு தினுசாகத் தெரிவிக்கச்சொல்லி, திருச்செந்தூரில் வைத்துக் கல்யாணத்தை நடத்திவிடலாம். நானே கன்னிகாதானம் செய்துகொடுக்கிறேன். அவ்விடம் சுவாமி தெரிசனத்திற்குப் போவதாகச் சித்ராவிடம் சொல்லி அழைத்துப் போகவேண்டும். அவ்விடம் சென்றபின்பு சம்மதிக்காமல் எங்கே கூடி, துள்ளப்போகிறாள். தாலி கழுத்திலேறிவிட்டால் தானே அவன் சரிப்படுத்திக்கொள்வான். நகை நட்டு என்று ஆசைகாட்டுவது சித்ராவிடம் முடியாது. அதனால் என மானம் கௌரவம் இதைக் காப்பாற்ற நீ இந்த உதவி செய்யவேண்டும்" என்றாள்.

"அப்படியே செய்கிறேன்" என்று சொல்லும்பொழுதே துக்கம் நெஞ்சையடைத்தது. வெளிக்காட்டிக்கொள்ளாமல், சட்டென உள்ளே சென்றுவிட்டாள். குடத்தை எடுத்துக்கொண்டு தாம்பிரபர்ணிக்குச் சென்றாள். தனது துக்கத்தை ஆற்றிக் கொள்ள அவளைத்தவிர வேறு யார் என்று வாய்விட்டுக் கதறினாள். "தாயே! சித்ராவின் அப்பா இருந்தால் இக்கதி நேருமா? வாழ்க்கையில் முக்யமான விஷயத்தைக் கூடப் பிறருடைய சுகத்திற்காக நிர்ப்பந்தத்திலா நடத்திக்கொள்ளவேண்டும். என்னிடம் பணம் மட்டும் இருந்தால், ஒருகாலத்தில் சமையல்காரியாக இருந்திருந்தால் கூடத் தற்சமயம் பங்களாவும் காருமாக இருந்தேனானால், ஸீதாலக்ஷ்மியம்மாள் என்னைச் சம்பந்தியாக வரவேற்கப் பின் வாங்குவாளா? என் குழந்தையின் படிப்பும், புத்திசாலித்தனமும், அளப்பரிய அழகும் விழலுக்கிறைத்த நீர்போலாகி விடுவதா விதி. என் கண்ணு இம் மர்மமான கல்யாணத்தை எப்படி ஏற்பாள்? இப்படியா அவள் வாழ்வு முடியவேண்டும். ஒருசமயம் கட்டாயக் கல்யாணம் செய்வித்தோமென்று, வாக்காகச் சமுத்திரம் பக்கத்திலிருப்பதினால் விழுந்துவிட்டால்? ஐயோ பிறகு உலகத்தில் எனக்கென்ன வேலை. நானும் அந்தச் சமுத்திரத்தில் விழுந்துவிட வேண்டியதைத்தவிர வேறு வழி? தாயே! ஏழைகளின் கதி இதுதானா? பணக்காரச் சமூகம் எங்களை ஒதுக்கிவிட்டால்கூட நிம்மதியாக இருக்கலாம் என்று தோன்றுகிறதே. அதற்கும் வழியில்லாமல் வில்லங்கத்தில் மாட்டிக்கொண்டு விட்டேனே. ஈசுவரீ! என் குழந்தையின் மனம் இக்கல்யாணத்தை ஏற்று, சுகமாக வாழும் படி செய்வாய் தேவி! துக்கம் என்னால் தாங்கமுடியவில்லையே," என்று கல்லும் உருகக் கதறினாள், எல்லாம் விதி! விதி! என்று பதில் சொல்லுவதுபோல் மரங்களெல்லாம் ஹோவென்ற சப்தத்துடன் சுழன்று ஆடின.

"கடமை. கடமை; தியாகத்திலும் கடமை! அதே நோக்கத்துடன்தான் நானும் செல்லுகிறேன்" என்று சொல்லுவதுபோலிருந்தது அவள் மனதிற்குப் பூர்ண பிரவாகத்துடன் அலைமோதிச்செல்லும் தாம்பிரபர்ணியின் இரைச்சல். எவ்வளவு நேரம் கதறினாலும் எந்தத் செய்வம் நேராகவந்து அவள் குறையை நிவர்த்திசெய்யும். கொஞ்ச நாழிகைக்குப்பின் உள்ளே சென்றாள். யந்திரப் பாவையைப்போல் வேலையை முடித்தாள்.

(தொடரும்)

19607X



ராஷ்டிரபதி நேரு லாகூரிலுள்ள விமான நிலயத்தில் வந்திறங்கியவுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. மிலிட்டரி உடையில் காணப்படுவது இ. தே. ரா. ஜனரல் ஷா நவாஸ்,



ஸோஷலிஸ்ட் தலைவர் ஜயப்பிரகாஷ் நாராயணருக்கு லாகூரில் அளிக்கப்பட்ட மஹத்தான வரவேற்பு. கதர் குல்லாயுடன் மாலை அணிந்து மத்தியில் காணப்படுபவர்தான் ஜயப்பிரகாஷ்.

# ரெக்ஸோனா

## சரும அழகை உண்டாக்குகிறது

### ...சரும சுகத்தை பாதுகாப்பதன் மூலம்






ஆம், ஏனென்றால் ரெக்ஸோனா சுறுசுறுப்பாய் உற்சாகமூட்டிச் சரும சுகத்தைப் பாதுகாக்கிறது — சரும சுகத்திற்குச் சரும சௌந்தரியமே உண்மையான அடிப்படை — சரும அழகைக் கொடுக்கும் பாத்தியதை தனக்கேயுண்டென்று ரெக்ஸோனா உண்மையாகச் சொல்லக்கூடும்.

இதை எப்படி ரெக்ஸோனா செய்கிறது? சரும வியாதியைப் போக்கும் கிருமி நாசினியாகிய *கேடில் என்னும் மருந்து அதிற் சேர்ந்திருப்பதால் அது அவ்வாறு செய்கிறது. சரும உபத்திரவங்களும், சரும மாசுமறுக்களும் அடிக்கடி அதிகமாய் உண்டாகும் இடங்களுக்கும் — சருமத்தின் ஒவ்வொரு அடிப்பாகத்திற்கும் — சுகமளித்துச் சுத்தம்செய்கிற கேடில் என்னும் மருந்தை ரெக்ஸோனாவின் விரைவில் உண்டாகும் நுரை கொண்டுபோய்ச் சேர்க்கும் சக்திவாய்ந்தது.

**ரெக்ஸோனா, குடும்ப சோப்**

அழகான, பசுமைவாய்ந்த, விரைவில் நுரையைத் தரும் இந்த சிறந்த ஒப்பற்ற சோப்பின் குணங்களைக் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் புகழ்ந்து கூறுவார்கள். . . சரும அழகைத்தர அது அதிக சிறந்த சக்திவாய்ந்திருப்பதால் ஸ்திரீகள். . . ஆரோக்யமான சருமத்தின் அவசியத்தை எல்லா ஜனங்களும் அறிந்திருப்பதால் மனிதர்கள் . . . குழந்தைகளுக்கு இதைக் காட்டிலும் சிறந்த பாதுகாப்புடைய சோப் வேறு இல்லை மருந்திடப்பட்ட ரெக்ஸோனாவின் நுரை உடலெரிச்சலைச் சாந்தப்படுத்துகிறது. ரணங்களை ஆற்றிக் காப்பாற்றுகிறது — குழந்தையின் சருமத்தைக் குளிர்ச்சியாகவும், சுகமுடையதாகவும் செய்கிறது சரும சுகம் நிச்சயமாக ஏற்படக் குடும்பம் முழுவதும் ரெக்ஸோனாவை ஒழுங்காய் உபயோகிக்க வேண்டும்.



★ரெக்ஸோனாவிலுள்ள கேடில் கிருமி நாசினியாகிய ஒரு ஒப்பற்ற கலப்பு மருந்து. சரும சுகத்திற்கு அதிக சக்திவாய்ந்தது; குணமளித்துப் போஷிக்கும் தைலம் சேர்ந்தது. சுகத்தையளித்துக் காப்பாற்றும் தன்மையுள்ள கேடில் யாவராலும் மதிக்கப்பட்டு, விஞ்ஞானிகளால் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள். வெட்டுக் காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான் ரணங்கள், முகப்பருக்கள், அரிப்புகள், சணைப்புகள், கடிகள், மச்ச மறுக்கள் முதலிய எல்லா சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்.




RP. 29-23-40 TM

REXONA PROPRIETARY LIMITED

# வீரச் சிதம்பரம் பிள்ளை

**யோகி சுத்தானந்த பாரதியார்**

இந்தமாதம் நாடெங்கும் பாரதித் திருநாள் நடக்கும். இன்று பாரதியாருக்கு ஏராளமான புகழ்மாலைகள் குவியும். ஆனால் இன்று பாரதியை ஆவேசப்படுத்திய வீரச்சிதம்பரம் பிள்ளையையும் நாம் நினைக்கவேண்டும். பாரதி பாட்டும், பிள்ளையின் பேச்சுமே தமிழகத்துத் தேசியக்கனலைத் தூண்டியவை. சிதம்பரம் பிள்ளையின் நினைவுக்காக இக்கட்டுரையைத் தமிழுலகத்து நிவேதிக்கிறேன்.

திலகர், லாலாஜி, அரவிந்தர், பாரதி, சிதம்பரம்பிள்ளை, இந்த ஐவரும் பாரத மாதாவின் பஞ்சப் பியாராக்கள் ஆவர். நமதுநாட்டில் இன்றுஒரு புதிய விழிப்பு ஏற்பட்டிருக்கிற தென்றால், முப்பத்தைந்து கோடி பாரதமக்களும் இன்று தேச சபையின் பெருமையை உணர்ந்து சுதந்தர நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்றால், 1885 ஆம் ஆண்டு பம்பாயில் ஓர் ஆரியக்கல்லூரியில் கூடிய காங்கிரஸ், இன்று பத்து மாகாணங்களை ஆளுகிறது, உலகிற்கே இந்தியாவின் பிரதிநிதியாக விளங்குகிறது என்றால் அந்தப் பெருமைக்கு உரியவர் யார்? திலகர், மகாத்மா, சிதம்பரம்பிள்ளை போன்ற தேசியச்சுடர்களுக்கே முதலில் அப்பெருமை உரியது.

சிதம்பரம் பிள்ளையை நான் நான்கு முறை பார்த்துப் பேசியிருக்கிறேன். அப்போது அவர் வாயினின்று அடிக்கடி 'திருக்குறள்' மூச்சைப்போல எளிதாக வரும். அச்சமயம் தமிழ்நாட்டில் சாதிக் காமாலை கொதிகொண்டிருந்தது. எங்குப் பார்த்தாலும் தலைவருக்குத் தலைவர் தடியெடுத்துக்கொண்டு தமது புகழையே டமாரமடித்துக்கொண்டு, நமது மானத்தைக் கட்சிக் கந்தல்களாகக் கிழித்துக் கொண்டிருந்தனர். இதைச் சொல்லி அவரிடம் வருந்தினேன். "அதற்கொரு குறள் சொல்லுகிறேன். கேளுங்கள்" என்றார். "ஆஹா, தங்கள் வாயினால் தேவர் வாக்கைப் பருகுவது தாயமுது போன்று இனிக்கிறது" என்றேன்.

> செருக்கும், சினமும், சிறுமையு மில்லார்
> பெருக்கம் பெருமித நீர்த்து.
> நுனிக்கொம்ப ரேறினார் அஃதிறந் தூக்கின்,
> உயிர்க்கிறுதி யாகி விடும்.

என்ற இரண்டு குறள்களையும் சொல்லி, அவற்றைக் காலநிலைக்கு ஏற்றபடி பொருத்திக் காண்பித்தார்: "நாட்டுழியர், நாட்டிற்கே ஊழியராவர். தமது சுய நலப் பெருமைக்கும், கட்சிக்கும் அவர் ஊழியரல்லர். தலைவர் என்னும் செருக்கும், பிறர், நியாயத்தைச் சொன்னாலும் கேளாச் சினமும், அற்பக்குற்றங்களைப் பெரிது பண்ணி வாய்ச்சண்டையும் பேனாச்சண்டையும், போடும் சிறுமையுமே நமது தோல்விக்கும் உட்பகைச்சலுக்கும் காரணமாம். இக்குற்றங்கள் இல்லாமல் பெருந்தன்மையும், அன்பும், வீரத்துணிவும், அறமும்பற்றி நடந்தால் நமது நாடு பெருமைபெறும். சிலர் தலைவர் என்ற புதவி கிடைத்ததும் சுயநலவெறி கொண்டு நாட்டிற்கே தீமையான காரியங்களைச் செய்கிறார்கள். அவர்கள் நுனிக்கொம்பை மீறிச்சென்று, பற்றுக்கோடிழந்து, கீழேமண்ணில் வீழ்வர்" என்றார். சிதம்பரம்பிள்ளை குறள் சொல்லும்போது முத்துக்களை எண்ணுவது போல ஒவ்வொரு சொல்லையும் தனித்தனியே பிரித்து, அழுத்தந் திருத்தமாகச் சொல்லுவார்.

அவர் பேச்சில் திடீரென்று ஓர் ஆவேசம் கிளம்பும். அப்போதும் ஒரு திருக்குறள் வரும். தமிழ்நாட்டில் சிலர் காங்கிரஸ் செய்வதையெல்லாம் மஞ்சட்கண்ணால் கண்டு பழிக்கின்றனர். அவரைப் பற்றிப் பேச்செடுத்தேன். "சாதிமத வேறுபாடுகள் இன்றி, நாம் ஒன்றுபட்டு வாழவேண்டியதே யாகும். அந்த ஒற்றுமையை உண்டாக்க வல்லது காங்கிரஸ் ஒன்றேதான். இடையிற் புகுத்த ஆட்

கள் ஏதோ தனி மனத்தாங்கல்களை வைத்துக்கொண்டு கலகம் விளைவிக்கின்றனரே, இதுவும் நமது காலக்கோளல்லவா" என்று வருந்தினேன்.

"பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்குந் தத்தம்
கருமமே கட்டளைக் கல்."

என்று கம்பீரமாகப் பாடிச் சிம்மம் போலத் தலைநிமிர்ந்தார் சிதம்பரம் பிள்ளை. "காங்கிரஸைச் சிதைக்கவா? தேசாபிமான வெள்ளத்தைத் தடுக்கவா? முடியுமா? நான் ஒருவன் கிளம்பினுல் என் எதிரே இவர்கள் நிற்க முடியுமா?" என்று கர்ச்சித்தார், கர்ச்சித்தார்.

சிதம்பரம் பிள்ளையின் கண்கள், நாவீச்சு, மீசைத்துடிப்பு, கை யோங்கல், நடை, தலைநிமிர்வு எல்லாம் 'வீரம்,வீரம்' என்றே பேசிநிற்கும். அவர் ஒருஆவேசமான தேசபக்தர். சிறந்த தமிழ்ப் புலவர். தொல்காப்பியத்திற்கும், குறளுக்கும் அவர் அரிய ஆராய்ச்சிகளைச் சொல்வார். ஆங்கிலத்தில் கார்லைல், எமர்சன், பைரன், ஆலன்—இந்நால்வரிடமும் அவருக்குப் பெருமதிப்பு உண்டு. சித்தாந்த சாஸ்திரங்களில் அவருக்கு நல்ல ஆராய்ச்சி யுண்டு. ஆங்கிலத்தில் வெகு தடபுடலாகப் பேசுவார். அவரிடம் உள்ளொன்று புறமொன்று கிடையாது. மனத்தில் உள்ளதைத் தைரியமாக எடுத்து வீசுவார். திலகரை, 'எனது குருநாதன்' என்பார். திலகரின் அஞ்சா நெஞ்சுரமும், ஒப்பற்ற கலையறிவும், மாசற்ற தேசாபிமானமும் போர் வீரமும் அவருக்கு மெத்தவும் பிடித்தமானவை. "எனது குருநாதன் காலத்தில் இந்து முஸ்லீம் போராட்டமே கிடையாது; நாங்கள் சூரத் காங்கிரஸிற்குப் போன போது எல்லாரும் ஒன்ருயமர்ந்தே சாப்பிட்டோம். எங்களுள் சாதி வேறுபாடு கிடையாது. வேறு பாடுகளெல்லாம் இன்று முளைத்தனவே" என்பார். சாதி வேற்றுமைகளையும் மூடக்கொள்கைகளையும் அவர்பலமாகக் கண்டிப்பார்.

மகாத்மாவிடம் அவருக்குத்தக்க மதிப்பு உண்டு. ஆனுல் கதர் அணிவது பற்றி வேறுபாடு உண்டு. தூத்துக்குடி மகாநாட்டில் அவர் கதரணியாமல் அன்னிய நாட்டாடை அணிந்திருப்பதாக ஒரு தொண்டர் நீளப்பேசினுர். எழுந்தார் சிதம்பரம் பிள்ளை. "நான் அன்றும் இல்லை; அயலாடை இன்றும் இல்லை. இதோ நான் அணிந்திருப்பது என் ஊரில் நெய்த கைத்தறி ஆடை. எனது தமிழர் வேலை செய்து அதன் பயனுக வந்த ஆடையே நான் அணிவது. கைத்தறியாடையை நான் போற்றுகிறேன்" என்று தமது ஆடையைக் காட்டினுர். அவரைக் கண்டித்தவர் மீது சபைமுழுதும் சீறி விழுந்தது. "கால முன்னேற்றத்திற்கு ஏற்றபடி, நமது நாட்டிலும் யந்திரங்கள் உண்டாக வேண்டும். பழமையிலேயே அழுத்தம் செய்யக்கூடாது. நாமும் ஏன் வெள்ளையர் போல நூற்கவும் நெய்யவும் பொறிகளைக் கண்டுபிடிக்கக் கூடாது?" என்பார். இதைத்தவிர மற்றவற்றிலெல்லாம் அவர் காலத்துடன் ஒத்திருந்தார். பாரதி பாடல்கள் முழுதும் திலகர் சிதம்பரம் பிள்ளையின் சொல்லோவியங்களேயாம்.

சிதம்பரம் பிள்ளை யிடம் ஒரு பெருந்தன்மை நன்றி மறவாமையாம். அவர் குடும்பத்தைப் பற்றிச் சிறிது பேசிக்கொண்டிருந்தேன். 1905 ஆம் ஆண்டு முதல் தமது குடும்ப வரலாற்றையெல்லாம் உருக்கமாகச் சொன்னுர். கப்பல் நடத்தத் தாம் பட்ட பாடெல்லாம் விரிவாகச் சொன்னுர். அந்தக்காலம் கடுஞ் சிறையில் தாம் பட்ட இம்ஸைகளைக் கண்ணீர் ததும்பப் பேசினுர்? "சிறையை விட்டு வெளிவந்தேனு! என்னை யாரும் வரவேற்கவில்லை! மாலையில்லை! ஜே கோஷமில்லை, நான் தனியாகவே ஊர்வந்து சேர்ந்தேன். பலர் என்னை அஞ்சி ஒதுங்கினர். நான் வியாபாரம் செய்தும் பிழைக்கநேர்ந்தது" என்ருர். முடிவில் தமது பிள்ளைகளின் பெயரைச் சொல்லும் போது, ஒருவன் பெயர் "வாலேசன்" என்ருர். "இதென்ன புதுப்பெயர்?" என்றேன். "அதற்கும் ஒரு குறள் சொல்லுகிறேன்" என்று விளக்கினுர்.

"கொன்றன்ன இன்னு, செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்"

நான் சிறையிலிருந்து வெளிவந்து சில நாட்களுக்குப் பிறகு, குடும்பத்தைப்

பற்றிச் சிந்தித்தேன். நாட்டைப்போல நான் வீட்டையும் கவனிக்க வேண்டுமல்லவா? அப்போது என் சன்னதை மீட்டு, வக்கீல் தொழில் நடத்தத் துணை செய்தவர் வாலஸ் என்பவர். அவர் ஆங்கிலேயர் தாம். என்னைச் சிறையிலிட்ட கூட்டத்தார் தாம். எனினும் அவர்செய்த ஒரு நன்றி என்மனத்தை மாற்றியது. அந் நன்றியைக் காட்டவே என் மகனுக்கு 'வாலேசன்' என்ற பெயரிட்டேன் என்றார்.

"தினைத்துணை நன்றி செயினும், பனைத் துணையாக்—கோள்வர் பயன்றெரி வார்"

என்றகுறளுக்குத் தாங்களே எடுத்துக் காட்டாவீர்" என்று மகிழ்ந்தேன்.

குருகுலப் போரைப்பற்றி ஒருமுறை அவரிடம் பேசியுள்ளேன். ஐயரிடம் அவருக்குப் பரமவிசுவாசம். "பாரதி, ஐயர் இருவரும் மாசற்ற தேசாபிமானிகள்" என்பார். குருகுலச்சண்டையை தாமே தீர்ப்பதாகச் சொன்னார். "அது எளிதுதான்" என்றார். ஆனால் காரியத்தில் இறங்கவில்லை. அவர் முனைந்திருந்தால் தக்க சமாதானம் செய்திருப்பார். பிள்ளையின் மற்றொரு குணம் ஏதும் இல்லை யென்னாமையாம். துணை கேட்போருக்கு 'இதோ வருகிறேன்' என்று தைரியமாகச் சொல்லுவார். கோயிற்பட்டிக்கு வரும் தேசாபிமானிகளுக்கெல்லாம் அவர் வீடு சத்திரம் போலும்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம், விருந் தோம்பி—வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்ற குறளைச் சொல்லிக்கெண்டே அவர் விருந்தை முகமலர்ந்து ஏற்று உபசரிப்பார். இரண்டாவது நூற்றாண்டில், கடைச்சங்க காலத்தில் நமது தமிழர் அடைந்திருந்த நாகரிகத்தின் படிவமாகவே சிதம்பரம் பிள்ளை விளங்கினார். அவ்வளவு வீரம், அவ்வளவு பேச்சுரம், நெஞ்சுரம், கலையுரம், செயலுரங்கொண்ட தலைவரைத் தமிழர் உள்ளக்கோயிலில் வைத்துப் போற்றத்தகும். பாரதி நாள் கொண்டாட்டம் போலவே சிதம்பரம் நாளையும் தமிழர் மட்டும் மல்ல, பாரத நாடு முழுதுமே கொண்டாடத்தகும். அவர் வரலாற்றைத் தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மும்மொழியிலும் எழுதி வெளியிடவேண்டும்.

இறுதிக்காலத்தில் அவர் அடிக்கடி நாட்டுப்பணி செய்யக் குமுறி எழுந்தார்; 1906-ஆம் ஆண்டு அவருள் மூண்ட கனல் நித்திய வேள்வித் தீப் போல அணையாதிருந்தது. "என் குடும்பத்திற்குப் போது மான தொகை கொடுத்தால் இன்றே வெளியே வந்து பணிசெய்வேன். சாதிப் பூசல்களை இருந்தவிடம் தெரியாது மறையச் செய்வேன்" என்பார். இறுதிக்காலத்தில் அவர் வறுமையால் வாடினார். தள்ளாத வயதில் தொண்டை நீரை வற்றடிக்கும் சுவையற்ற வக்கீல் தொழிலை மனமின்றிப் புரிந்தார். ஆனால் தமிழர் அவரை மறக்கவில்லை. சிறுசிறு உதவிகள் செய்தனர். எனினும் அவரை உற்சாகப்படுத்திப் பொதுத்தொண்டிற்கு இழுக்க ஆளில்லாமல் போயிற்று. நாட்டிற்குரிய சிங்கம் வீட்டில் இறந்தது; ஆனால் அது கூட்டை என்றும் வெறுத்துச் சுதந்தரமாகவே உலவியது. "நாடு விடுதலை பெற்றதும் நான் கணக்காசிரியர் ஆவேன்" என்றார் திலகர். அதேமாதிரி விடுதலை இந்தியாவில் வீரச் சிதம்பரம் பிள்ளை தமிழாசிரியராயிருந்து தமிழ் வளர்ப்பார். அவரது தமிழன்பும் அறிவும் அத்தகையவை. அந்நாள் நமக்கெய்தாதது வருந்தத் தக்கதேயாம். சிதம்பரம் பிள்ளைக்கு இன்று நிதி வளர்கிறது; நினைவு மாளிகை எழுப்புகின்றனர்; சிலை நாட்டுகின்றனர்.

1928ஆம் ஆண்டு தூத்துக்குடி வட்டக் கிணற்று மைதானத்தில் சிதம்பரம்பிள்ளை ஆவேசமாக "நான் ஒருவன் கிளம்பினால் போதுமே" என்று பேசினார்—பழைய வீரராகப் பேசினார். அப்போது அவர் சட்டைப்பையில் நான் ஒரு புகழ்மாலை எழுதிப்போட்டேன். மறுநாள் அவர் என்னை அழைத்து அதைப் பாடச்செய்து மெச்சினார், "பாட்டில் என் உள்ளம் பேசுகிறது" என்றார். அந்தப் பாட்டையும் தமிழருக்கு இத்துடன் அளிக்கிறேன்.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

# வீரச் சிதம்பரம் பிள்ளை

*யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் பாடியது.*

வீர சிதம்பரம் பிள்ளை—தமிழ்
வித்தகன் முத்தமிழ் நாட்டில்
பாரத பக்திக் கனலைத்—தூண்டிப்
பாய்ந்து பணிசெய்ய வந்தான்!
தீரன் இவனைப்போ லுண்டோ?—தமிழ்ச்
சிங்கம் திலகர் வலக்கை
சோர்வின்றி நாட்டுக் கொடியைப்—பல
தொல்லையைத் தாங்கிப் பிடித்தான். (வீர)

பேச்செல்லாம் வீர முழக்கம்—அவன்
பேருரு வீரப் பிழம்பாம்!
மூச்செல்லாம் வீரக் கனலாம்—அவன்
முன்னின்ற காரியம் வெல்லும்;
ஓய்ச்சலில் லாமல் உழைத்தான்—தேசம்
ஓங்கிடக் கப்பல் விடுத்தான்—மயிர்க்
கூச்ச லெடுக்கக் கொடிய— சிறைக்
கோட்டத்திற் செக்கும் இழுத்தான்! (வீர)

ஆண்மைச் சிதம்பரம் என்னில்—நெஞ்சில்
அச்சம் ஒழிந்தனல் ஏறும்;
வீண்மயக் கங்களைப் போக்கி—முழு
விடுதலைத் தாகத்தை யூக்கி,
மாண்பாஞ் சுதேச விரதம்—கொள்ள
மக்கள் உணர்வை யெழுப்பி—வயிரத்
தூண்போற் சுதந்தரந் தாங்கி—எற்றுந்
துன்பப் புயலெதிர் நின்றான்! (வீர)

எங்கள் சிதம்பரம் என்னில்—வீரம்
ஏறுது நெஞ்சினிற் சோருது துன்பம்.
பொங்குதோர் ஆவேச வெள்ளம்—தளை
பொட்டென் றறுந்து விடுதலை சேர,
வங்கம் அழைக்குது நம்மை—அதில்
வாழி சிதம்பரம் என்றிசைத் தாடும்
தங்கக் கொடிதோன்று தையே—தமிழ்த்
தந்த சிதம்பரம் சந்ததம் வாழ்க! (வீர)

விடுதலை பெற்றெங்கள் அன்னை—ஜய
வீரத் திருமுடி சூடி,
நடுநிலை நாட்டுமந் நாளில்—வெற்றி
நல்கிய தீரர் பெயரை
இடிமுர சார்த்திடு நாளில்—"வாழி
எங்கள் சிதம்பரம்" என்போம்!—நாட்டுக்
கொடியைவிண் ணேட்டப் பிடிப்போம்—அவன்
கொற்ற மலர்கள் சொரிவான்! (வீர)

# அயோடிசால் IODISAL

(ரத்த சுத்தி மருந்து)

இது தேகத்தில் உஷ்ணம் அதிகமாகி அதனால் ஏற்படக்கூடிய வெட்டை, கிரந்தி, மொழி, முடக்கு, கண்டசூலைகள், வாதம், வாய்வு, மேக ரோகங்களையும், தோலைப்பற்றிய துர்நீர் சம்பந்தமான படை, சொறி, சிரங்கு, தேக அரிப்பு முதலியவைகளையும் குணப்படுத்தி, தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் கொடுக்கும். ரத்தத்தைச் சுத்திசெய்து மலப்பிரவர்த்தியை ஒழுங்காக்கி இரத்த விருத்தியை உண்டாக்கும்

**எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.**

* * * *

# சைபால்

## - CIBOL -

முகப் பரு, சேத்துப் புண், சொறி சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்டபுண், முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து.

# பேபி-கிரைப்

## BABY - GRIPE

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல். வயிற்றுவலி, அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப்போக்கு முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தைத் தரும் சிறந்த திராவகம்.

தயாரிப்பவர்கள்

**தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை**

மதராஸ் சிடி, நெல்லூர், சிடட் & விசாகபட்டினம் ஜில்லாக்களுக்கு ஏஜண்டுகள்:

**ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ், பி. டி. மதராஸ்.**

குண்டூர், கிருஷ்ணா, கோதாவரி ஜில்லா & நைஸாம் சமஸ்தான ஏஜண்டுகள்:

**சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா.**

மைசூர் சமஸ்தான ஏஜண்டுகள்:

**சேஷமஹால் பார்மஸி, பெங்களூர் சிடி.**




# தற்கால கட்டிட நிர்மாணம்

## குடியிருப்பு வசதி

உணவுக்கும் உடைக்கும் அடுத்த படியாக மனிதனுக்கு அவசியமானது குடியிருப்பு வசதி. தற்சமயம் விடுகளுக்கு மிகுந்த அவசியம் ஏற்பட்டிருப்பது யாவருக்கும் தெரியும். இந் நெருக்கடியை சீக்கிரத்தில் ஓரளவுக்காவது தீர்த்து வைக்க வேண்டியது அவசியம்.

கான்கிரீட்—நாள்பட உழைக்கும் தன்மை, சிக்கனம், சுத்தம், தீ விபத்துக்குள்ளாகாமை முதலிய குணங்க ளுடையதால்—பணக்காரர்களுக்கு மட்டு மல்லாமல் எல்லோருக்கும் ஏற்ற கட்டிட சாதனமாகிறது.

கான்கிரீட்டை நன்கு பயன் படுத்திக் கொள்ள கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியாவின் (199, மவுன்ட் ரோடு, மதருஸ்) உதவி எப்பொழுதும் கிடைக்கும்.

உங்கள் விடு கம்பீர மான மாளிகை போல் இருக்க வேண்டு மானுலும் சரி, அல்லது சதாரண சிறிய விடாக இருக்கவேண்டுமாஞலும் சரி, சுலபமாகவும். அதி கப்பணச் செலவில்லாமலும் கான்கிரீட்டினுல் கட்டலாம்.

**தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.**

CM. 102 B—Tamil

# காவியமும் கற்பனையும்

ரா. வீழிநாதன்

வடமொழிப் புலவர்களுள் மிகப்பிரசித்தி பெற்ற சாகா வரம்பெற்ற கவியாகக் கருதப்படுபவர்களில் ஸ்ரீ ஹர்ஷ சக்ரவர்த்தியும் ஒருவர். சந்திர சூரியர்கள் உள்ளவரையில் இப்புண்ய பாரதபூமியில் அவருடைய பெயரும் நிலைத்திருக்கும். அவருடைய கவிதைகளையும் கற்பனைப் போக்கையும் கண்டு மக்கள் மிகவும் வியப்பெய்துகின்றனர். காவிய சிருஷ்டிதான் அவருடைய பொழுது போக்கு. கவிதைபுனைவதில் ஈடுபட்டு விட்டாராளுல், உலகத்தையே தம் அரசையே மறந்து விடுவார்.

உண்மைதானே! ஒருவன் நினைத்தால் அரசை வேண்டுமாளுல் பிடுங்கிக்கொண்டு விடலாம், அடியோடு மாற்றிவிடலாம், அழிக்கவும் அழித்து விடலாம். ஆனுல் கவிதையென்னும் அரசாங்கத்தை எவனுலாவது பிடுங்கிக் கொள்ளத்தான் முடியுமா? அல்லது அழித்துவிடத்தான் முடியுமா? மரணதேவதையின் தளிர்க்கரங்களுக்குக்கூட, கவிதைக்குத்திங்கு இழைக்கும் ஆற்றல் கிடையாதே? வேறுயாரால்தான் முடியும்! கவிதை அமரத்துவம் வாய்ந்ததல்லவா!

சக்ரவர்த்தி தம் அரசை மறந்து சூரியன்—சந்திரன், வாழ்வு—ஒளி, அன்பு யௌவனம் என்ற அழியாத இணையற்ற கனவுகளில் மூழ்கித் தம்மையே மறந்துவிடுவது உண்டு.

* * *

அன்றொரு நாள் மாலை. அரண்மனைப் பூங்காவில் அமர்ந்து சக்ரவர்த்தி தனிமை இன்பத்தை அனுபவித்துக்கொண்டிருந்தார். மாலைக் கதிரவனின் அழகிய மஞ்சள்நிறக்கிரணங்கள், தன் தோழிகளான ரோஜாமலர்களினிடம் விடைபெற்றுக் கொண்டிருந்தன. தோழியின் பிரிவை ரோஜா இதழ்களினுலும் சகிக்கமுடியவில்லை. மாலைக் கதிரவனின் கிரணங்களும் பிரிவாற்ருமையைச் சகியாமல் வரவர மங்கிக் கொண்டிருந்தன. தனது இளங்குழந்தைகள் பிரிவினுல் இப்படி வருந்துவதைக் கண்ட வனதேவதைக்கும் துயரம் தாங்கவில்லை. அதனுல் அவளது அழகிய முகத்தில் துயரத்தின் கருங் கோடுகள் வரவர அதிகரித்துக் கொண்டே இருந்தன. சக்ரவர்த்தி இந்தப் பாவம் ததும்பும் இயற்கைக் காட்சியைக் கண்ணுற்றதும், தமது சிந்தனைப் போக்கில் லயித்துக் காவியம் இயற்ற ஆரம்பித்தார்.

இப்படி அவர் லயித்திருக்கும் சமயத்தில், அவரது பெண் உஷா, களைசொட்டும் முகத்துடன் அவர் முன்னிலையில் வந்து நின்ருள். இந்த அந்தி மயக்கத்தில், அவள் அங்கு வந்து நின்றது, காலை இளஞ்சூரியன் உதித்தது போன்றிருந்தது.

தம்மை மறந்து, வேறு உலகில் இப்படி ஈடுபட்டிருக்கும்பொழுது, அவரை யாருமே அண்டக் கூடாது. 'அவரது அந்த ஆனந்தப் பூங்காவில் எவனும் காலடி எடுத்து வைக்கக் கூடாது' என்பது அவரது அரச ஆக்ஞை.

ஆனுல் அன்பு புகமுடியாத இடம் உலகில் ஏது? அது எவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியும்! அது தான் நினைத்த இடங்களுக்கெல்லாம் போகக்கூடிய சக்தி வாய்ந்ததாயிற்றே! அரசர், தம் ஆனந்தத்திற்குப் பங்கம் விளைவதைக் கண்டு கோபத்துடன் தலை நிமிர்ந்தார். தம் முன்னிலையில் அரசிளங் குமாரி நிற்பதைக் கண்டதும் அவரது கோபம் எல்லாம் பறந்து விட்டது. அது புன்முறுவலாகப் பரிணமித்து விட்டது.

உஷா கவியுள்ளம் படைத்த—கவிச் சக்ரவர்த்தியான தன் தந்தையைக் குழந்தையின் மாசு மறுவற்ற அன்பு ததும்பும் பார்வையுடன் பார்த்தாள். பிறகு மிகவும் பரிசுத்தமான எளிமை தாண்டவமாடும் இனிய புன்முறுவலுடன் "அப்பா! கடைசியில் மெதுவாக உங்களைக் கண்டேபிடித்து விட்டேன். மூலை முடுக்கு எல்லாம் தேடினேன். நான் தேடாத இடமில்லை. சங்கீத மண்டபத்திற்குப் போனேன், சித்திர மண்டபத்திற்குப் போனேன். ஆனுல் நீங்களோ இங்கே........." என்று கூறியவள் தந்தையின் கையில் ஓலையையும் எழுத்தாணியையும் கண்டதும் வெட்கித் தலை குனிந்தாள். நாம் "பெரிய தப்பிதம் அல்லவா செய்து விட்டோம்!" என்ற எண்ணம் உதித்தது அவளுக்கு. உடனே

மெதுவாகப் பயந்தவாறு, "அப்பா, எனக்கு நீங்கள்........" என்று ஆரம்பித்தாள். அரசருடைய செவிகளில் இவ்வார்த்தைகள், ஒலித்தனவோ, என்னவோ! ஆனால் அவர் அவளை மேலே பேச விடவில்லை. அவளருகில் எழுந்துசென்று அவளுடைய தலையை, தந்தையின் வாத்ஸல்யம் வாய்ந்த நடுங்கும் கைகளுடன் வருடியவாறே, "அம்மா! குழந்தாய் உஷா! அதோ சூரியனைப் பார்த்தாயா? தனது கிரணங்களைச் சுருட்டிக்கொண்டு மேகத் திரையில் தன் முகத்தை மறைத்துக் கொள்கிறான்! நான் உன் தலையை வருடுவதுபோல, அவனும் தன்னுடைய கிரணங்கள் என்னும் கைகளால், புஷ்பத்தை வருடிக்கொண்டே இருக்கிறான் பார்! என்ன வாஞ்சை! என்ன அன்பு! உலகமே அன்பு மயம்தானே!" என்றார்.

பிறகு தனது கவிதைகளை அரசிளங் குமாரிக்கும் பாடிக்காட்டினார். அவளுடைய கண்களில் வீசிய ஒளியும் உதடுகளில் தவழ்ந்த புன்னகையும். பெண் தந்தையின் கவிதையில் உள்ள கருத்துக்களை நன்கு உணர்கிறாள் என்பதைச் சுட்டிக் காட்டின.

"நீ என் பெண் அல்லவா! நீ என் மனதை நன்கு அறிவாய். தர்பாரிலுள்ள பெரிய பெரிய கவிகளால் கூட என் கவிதைகளை அனுபவிக்க முடியாது. உன்னால் முடியும் என்று நான் நம்புகிறேன்... ......வா. நேரமாய் விட்டது போவோம்" என்றுகூறி, அம்மாலையிருட்டில் தம் பெண்ணுடன் அரண்மனைக்குப் புறப்பட்டார். குழந்தை உஷா ஓட்டமும் நடையுமாய்த் தந்தையைப் பின்பற்றிக்கொண்டு, எளிமை தாண்டவமாட, "அப்பா. எனக்கும் கவிதை கற்றுக்கொள்ள வேண்டும் போல ஆசையாயிருக்கிறது, எனக்குச் சொல்லித் தருகிறாயா, அப்பா?" என்று கேட்டாள்.

சக்ரவர்த்தி இதுவரை தம் பெண்ணிடம் எதற்கும் மறுதலித்ததில்லை. "இவளுக்கு யார் கவிதை கற்பிப்பது? இவளோ வயது வந்த யுவதி; கன்னி; அழகி. கவிகள்—பெரியகவிகள்கூட, கவிதையில் அடக்கத்தையும் பரிசுத்தத்தையும் வெகு அழகாக அமைக்கும் கவிகளின் மனம் கூடச் சில சமயம், சிற்றின்பத்தில் உள்ள பற்றின் காரணமாகப் பேதலித்து விடுவதில்லையா? அப்படி இருக்கும் பொழுது இவளுக்கு யாரைக் கொண்டு கவிதை கற்பிப்பது? அது ரொம்பவும் சிரமமான காரியமாயிற்றே!" என்று சிந்தித்தார். அதனால் அச்சமயம் அவளுடைய கேள்விக்கு அவர் ஒன்றும் பதில் அளிக்கவில்லை

— 2 —

மழைக்காலம், துயரம் தோய்ந்த உள்ளத்தில் நம்பிக்கை சூழ்ந்திருப்பதைப்போல ஆகாயத்தில் மேகங்கள் சூழ்ந்திருந்தன. மேகங்கள் சிலசமயம் மழை பொழிகின்றன. சில சமயம், காற்று வாக்கில் கலைந்து விடுகின்றனவல்லவா? அதே போல அரசருடைய உள்ளத்தில் நம்பிக்கை என்னும் மேகம் ஒரு ஐகப்புரட்டைச் செய்துகொண்டிருந்தது.

இப்படியிருக்கையில் ஒருநாள், ஹர்ஷ சக்ரவர்த்தியின் அரண்மனைக்கு ஒரு 'தண்டி' ஸந்யாஸி வந்தார். அவர், "மகாராஜா! நான் ஒரு ஸந்யாஸி. மூன்று நாட்களுக்குமேல் அதிகமாக எங்குமே தங்குவதில்லை. ஆனால் மழைக்காலம் ஆரம்பித்துவிட்டதால், இனி பிரயாணம் செய்வது உசிதமில்லை; ஆகையால் இந்த நான்கு மாதகாலமும் ஓரிடத்தில் தங்க விரும்புகிறேன். உங்களால் வஸதிசெய்து தர முடியுமா?" என்று கேட்டார்.

சக்ரவர்த்தி, யுவாவான அந்த ஸந்யாஸியின் சரணங்களைத் தொட்டு நமஸ்கரித்துவிட்டு, "எனது ராஜ்யமே தங்களுக்கு ஸேவை செய்யக் காத்திருக்கிறது. மான ஸரோவரத்தில் வஸிக்கும், சுதந்திரர்களான ராஜஹம்ஸங்களைக் கூட்டில் அடைத்து வைப்பது என்பது எளிதான காரியம் அல்ல. இருந்தாலும் என்னுடையவும் அரசாங்கத்தினுடையவும் சக்தி முழுவதையும் கொண்டு, தங்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படாமல் கவனித்துக் கொள்ள முயற்சிக்கிறேன்" என்று பதில் அளித்தார்.

ஸந்யாஸி கைதூக்கிச் சக்ரவர்த்தியை ஆசீர்வதித்தார். ஸந்யாஸிக்கு அரண்மனையிலேயே தங்க இடவஸதி செய்து கொடுக்கப்பட்டது.

சக்ரவர்த்தி தினமும் ஸந்யாஸியிடம் வந்து வார்த்தையாடிப் போவது உண்டு. அடிக்கடி பழகியதும் ஸந்யாஸியின் உயர் குணங்கள் அனைத்தையும் சக்ரவர்த்தி கண்டுகொண்டார். "அவர் ஸந்யாஸிமட்டு மல்ல; பெரிய சைத்ரீகர்; கவியும் கூட, அது மட்டும் அல்ல. ஒவ்வொரு கலையையும் நுணுக்கமாகப் பயின்றவர்; எவ்விஷயத்தையும் மிகத்தெளிவாக விளங்கும்படி வாதித்து, புரியவைக்கக் கூடியவர்" என்பதெல்லாம் பழகப்பழக, சக்ரவர்த்திக்குத்

தெரிந்தது. ஸன்யாஸியின் மலர்ந்தமுகம், அகன்று நீண்ட சாந்தமான கண்கள், தேஜஸ்நிரம்பிய சரீரம் எல்லாவற்றையும் சக்ரவர்த்தி நன்கு கவனித்தார். ஸன்யாஸி யிடம் இருந்த இந்த மோகனசக்தி இரு வருக்கும் நெருங்கிய பரிச்சயத்தை உண் டாக்கியது. பரிச்சயம் அதிகரிக்க அதிக ரிக்க, அவர்பால் மரியாதையும் அதிகரித் தது. அந்த யுவஸன்யாஸியை நன்குபரீ க்ஷித்துப் பார்த்துவிட்டார் சக்ரவர்த்தி. எல்லாப்பரீக்ஷைகளிலும் யுவ ஸன்யாஸி வெற்றியே அடைந்தார். மனிதர்களிடத் தில் எத்தனையோ குற்றங்குறைகளைக் காணலாம். ஆனால் ஸன்யாஸியிடத்தில் ஒரு குற்றமும் காணப்படவில்லை. கடைசி யில் ஒருநாள் சக்ரவர்த்தி ஸன்யாஸியைப் பார்த்து, "ஸ்வாமி, ராஜகுமாரி உஷா கவிதை கற்க விரும்புகிறாள். நம்பிக்கைக் குப் பாத்திரமான ஒரு பண்டிதர்கூட இன்றுவரை எனக்குக் கிடைக்கவில்லை..." என்றார்.

ஸன்யாஸி சக்ரவர்த்தியின் அபிப்பிராயத் தைப் புரிந்து கொண்டு "நான் இங்கே இருக்கும் வரையில் நானே வேண்டுமானால் சொல்லிக்கொடுக்கிறேன்!" என்றார்.

சக்ரவர்த்தியின் ஆசை பூர்த்தியுற்றது. அரசிளங் குமாரி, கவிதை கற்க ஆரம்பித் தாள்.

— 3 —

நான்கு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் சக்ரவர்த்தி ஸந்நியாஸியிடம் "ராஜகுமாரி உஷா ஏவாவது கற்றுக் கொண்டிருக் கிறாளா?" என்று கேட்டார்.

உள்ளங்கவர் கண்களையுடைய யுவ ஸன்யாஸி, சக்ரவர்த்தியைப் பாத்துப் புன் முறுவலுடன், "கவிச்சக்ரவத்தியின் பெண் அல்லவா! கேட்பானேன்! இவ்வளவு குறு கிய காலத்தில் வேறெவனும் அவளைப் போலக் கற்றுக்கொண்டிருக்க முடியவே முடியாது. அவளுடைய கவித் திறனைப் பார்க்கும்பொழுது எனக்கே ஆச்சரியமா யிருக்கிறது" என்றார்.

சக்ரவர்த்திக்கு வியப்புத் தாங்கவில்லை. "அப்படியா? நாலு மாதத்தில் அவ்வளவு கெட்டிக்காரி யாகிவிட்டாளா?" என்று கேட்டார்.

"மகாராஜா. 'கவிதை கற்றுக்கொடுப்ப தனால் வந்துவிடாது' என்பது உங்களுக்குத் தெரியாததல்ல. சாம்பலில் மூடப்பட்டிருக் கும் நெருப்புப் பொறிகளைப் போலக் கவிதையும், பிறந்தது முதலே உள்ளத்தில் அடங்கிக் கிடக்கிறது. சாம்பலை அகற்றித் தீப்பொறியை ஜ்வலிக்கச் செய்கிறோமே! அதே போல, கவிதைக் கனலை எழுப்பி விடுவதுதான் குருவின் வேலை. பிறகுதானே கொழுந்துவிட்டு எரிய ஆரம்பிக்கும். அதற்கு முயற்சியே தேவையில்லை. காற் றடித்தால் தீ தானே ஜ்வலிக்கத் தொடங்கு கிறதல்லவா! அதேபோல அரசகுமாரியின் உள்ளக்கிடக்கையில் அழுந்திக்கிடந்த கவிதைகளை நாம் எழுப்பிவிட்டோம். இனி அவள் அழகிய சொற்களையும் பாவத்தையும் கொண்டு திறனுடன் கவிதைகள் புனை வாள். அவளுடைய கவிதை மிகவும் வளம்பெற்றது" என்றார் ஸன்யாஸி.

ஸன்யாஸியின் வார்த்தைகளைக் கேட்ட சக்ரவர்த்தி கர்வத்துடனும், ஆவலுடனும் தம்புத்திரியை நோக்கினார். அவள் தலை குனிந்து தரையைப் பார்த்தவண்ணம் இருந்தாள்.

"உஷா!"

உஷா தலைநிமிர்த்து தந்தையை நோக் கினாள். பிறகு நாணத்தினால் தலையைக் கவிழ்ந்து கொண்டாள்.

"ஒரு கவிதை சொல்லேன் பார்ப் போம்"

உஷா, தலைகுனிந்தவாறே "ஊஹூம்" என்று தலையை அசைத்தாள்.

"சொல்லம்மா, பார்ப்போம், உன் கவிதை எப்படி இருக்கிறது என்று!"

உஷா புடவைத் தலைப்பை இழுத்துக் கொண்டு "உங்களுக்கு என் கவிதை பிடிக்காது" என்றாள்.

ஸன்யாசியால் பேசாமல் இருக்கமுடிய வில்லை. "உஷா தேவி, இது நம்மிருவரை யும் பொறுத்த பரீக்ஷை! குருவுக்கு மரியாதை வைத்து ஒரு கவிதை சொல். சங்கோசப் படாதே!" என்றார்.

உஷா தன் புஸ்தகத்தைப் புரட்டினாள். எந்தக் கவிதையைச் சொல்வது என்ற அவளால் நிர்ணயிக்க முடியவில்லை. "எதைச்சொல்ல?" என்று கேட்டாள்.

"ஏதாவது ஒன்று சொல்லு. கற்கண்டு என்றாலே இனிப்புத்தானே!"

ராஜகுமாரி, துணிவை வரவழைத்துக் கொண்டு, "கவிதையைப்பற்றி ஒரு வசனக் கவிதை எழுதியிருக்கிறேனே அதையே சொல்லுகிறேனே!" என்றாள்.

"சொல்லேன், அதையேதான்"

ராஜகுமாரிக்கு நாணத்தினால் நா எழவில்லை. இதைக் கண்ட சக்ரவர்த்தி, ஸந்யாஸியிடம், தாங்களேதான் வாங்கிப்படியுங்களேன்!" என்றார்.

ஸந்யாஸி, புத்தகத்தை வாங்கிப் படிக்கலானார்:—

"கவிக்கும் கவிதைக்கும் உள்ள தொடர்பு புதிதாக மணமான தம்பதிகளின் தொடர்பைப்போன்றது. கணவன் தன் புது மனைவியைத் தொடவோ, பிடிக்கவோ, ஆலிங்கனம் செய்து கொள்ளவோ விரும்புகிறான். ஆனால் புதுப்பெண் நாணமுறுகிறாள்; தன்னைக் காத்துக்கொள்ள எண்ணிக் கோணிக் கொள்கிறாள்; ஒரு புறம் ஓடி ஒளிகிறாள். கவிதையின் நிலைமையும் இதுவே. சில சமயம் கவிதை, கீழ்ப்படிதலுள்ள வேலைக்காரனுக்கு ஒப்பாக, தலைவணங்கிக் கவியின் முன்பு நிற்கும். சிலசமயம் அவனைப் பார்த்து மிக மரியாதையுடன், கபடு—சூது அறியாத குழந்தையைப்போலச் சிரிக்கும். சிலசமயம் வெட்கத்தினால் முகத்தை மறைத்துக் கொள்ளும். கவி, இதையெல்லாம் கண்டு எட்டிப்பிடிக்க முயலும்பொழுது சஞ்சலம் வாய்ந்த மான்போன்று துள்ளிக்குதித்து ஓடிவிடும். சிலசமயம் சின்னஞ்சிறு விஷயங்களுக்கும் தலை குனிந்துகொண்டு கிட்ட வந்துநிற்கும். சிலசமயம் தன் இருகைகளாலும் கவியை இறுகக்கட்டி வெட்கத்தை விட்டு, ஆலிங்கனம் செய்துகொள்ளும். இதுதான், கவிக்கும் கவிதைக்கும் உள்ள தொடர்பு"

ராஜகுமாரியின் கவிதை மிகவும் மனோகரமாகவும், பாவம் ததும்பியதாகவும் தெளிவாகவும் இருந்தது. அதில் எவ்விதச் சிக்கலோ கரடு முரடோ, மண்டையை உடைத்துப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியமோ இல்லை. கற்பனை புதிது: உயர்ந்தது; ஆனால் இயற்கைக்கு மாறானதாக இல்லை. இதே கவிதையை வேறு

அநேகவிதமான
ஜரிகை பட்டு & நூல் ஆடைகளுக்கு
கைராசியும் கீர்த்தியும் வாய்ந்துள்ளது
★
T.N. நாகேந்திரம் சன்ஸ்
பட்டு ஜவுளி வியாபாரம்
உள்மண்டபம் — மலைவாசல்
தெப்பக்குளம் P.O. - திருச்சினாப்பள்ளி

யாராவது எழுதியிருந்தால், சக்ரவர்த்தி அவனுக்குக் கனகாபிஷேகமே செய்து வைத்திருப்பார். ஆனல் தன் பெண் எழுதிய—அன்பு—யௌவனம் இவ்விரண்டின் இந்த அழியாக் கதையைக் கேட்டு அவரது கண்கள் ரத்தமாய்ச் சிவந்தன. "இவளோ கன்னிப்பெண்; இவளுக்கு ஸ்திரீ புருஷர்களின் காதலைப் பற்றி எப்படித் தெரிந்தது? அவள் வர்ணித்திருக்கும் இக்காட்சிகளை எங்கே கண்டிருப்பாள், எப்பொழுது எப்படிக் கண்டிருப்பாள்." என்ற யோசனை அவரது மூளையைக் குழப்பிற்று. அவரது உள்ளத்தில் சந்தேகம் உதித்தது. யுவ ஸங்யாஸியை ஊன்றிக் கவனித்தார். அவரை அறிய முயற்சித்தார். சுத்தத் தங்கமும் நெருப்பில் விழுந்தால் வீணுகி விடுமோ? ஸங்யாஸியின் சிரித்த முகத்தில் 'தேஜஸ்' ஜ்வலித்துக் கொண்டிருந்தது. அவருடைய உள்ளத்தில் பயமோ கண்களில் நாணமோ தென்படவில்லை. சக்ரவர்த்தி யோசனையில் மறுபடியும் ஆழ்ந்தார். "இந்த முகத்தில் பாபத்தின் அறுகுறியைக் காணுமே! நம் கோணல் பார்வைக்கு முன்பு, பாபம் செய்திருந்தால் சிரிக்கத் தோன்ருது—ஆனல் உஷா காதல் கவிதை எப்படி எழுதினள். பெரிய புதிராக அல்லவா இருக்கிறது?" இவ்வாறு யோசித்துக் கொண்டே சக்ரவர்த்தி அங்கிருந்து எழுந்து போய்விட்டார். ஸங்யாஸியின் கண்களும், சக்ரவர்த்தியின் உள்ளத்தைப் படித்து விட்டன.

— 4 —

மறுநாள் சக்ரவர்த்தி, விடை பெற்றுக் கொண்டு புறப்படப்போகும் ஸங்யாஸியைக் கௌரவிக்கும்பொருட்டு, தர்பாருக்கு அழைத்தார். ஸங்யாஸியின் முன்பு பொன் நிரம்பிய தட்டு ஒன்றை வைத்து "இது எங்களாலான குரு தக்ஷிணை" என்ருர்.

ஸங்யாஸி அத்தட்டை அலட்சியமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, "மகாராஜா, தாங்களோ, கவிச்சக்ரவர்த்தி. இந்தத் தக்ஷிணை கொடுப்பது உங்களுக்கு உகந்தது ஆகாது. நான் இதை ஏற்றுக்கொள்ள மாட்டேன்" என்ருர்.

சக்ரவர்த்தி ஸங்யாஸியை ஆச்சரியத்துடன் பார்த்தார். ஸங்யாஸி, உள்ளூரச் சிரித்தவாறு எனக்கு இஷ்டமான தக்ஷிணை தருவீர்களா?" என்று கேட்டார்.

"உத்தரவிடுங்கள். முடிந்தால் செய்கிறேன்" என்ருர் சக்ரவர்த்தி.

'ஸங்யாஸி என்ன கேட்கிருர்' என்பதை அறியாமல் தர்பாரே பரபரப்புற்றிருந்தது.

"மகாராஜா, தாங்கள் எழுதியுள்ள கவிதைகளில் ஒன்றைச் சொல்லுங்கள். அதுதான் எனக்குத் தக்ஷிணை" என்ருர் யுவ ஸங்யாஸி.

தர்பாரில் உள்ளவர்கள் யாவரும் விழித்த கண் விழித்தபடியே உட்கார்ந்திருந்தனர். 'இவ்வளவு பொன்னையும் ஸங்யாஸி மூளை கெட்டுப்போய் இழக்கிருரே!' என்ற எண்ணம் போலும்.

சக்ரவர்த்தி ஓர் ஓலையை எடுத்துக் கொண்டு கவிதைபுனைய உட்கார்ந்தார். அரைமணி நேரத்திற்கெல்லாம் கவிதையை எழுதி முடித்துவிட்டு, "படிக்கட்டுமா?" என்று ஸங்யாஸியிடம் கேட்டார்.

"படியுங்கள்"

சக்ரவர்த்தி கவிதையைப் படித்தார்.

"மழைக்காலம். ஆகாயத்தில் கருமேகங்கள் குழுமியிருக்கின்றன.

"ஆனல் இதைக்காட்டிலும் இன்னும் இருண்ட மேகங்கள் அந்த ஏழைக்கிழவியின் உள்ளமாகிற வானத்தில் குழுமியிருக்கின்றன.

"வானத்தில் உள்ள மேகங்களில் இடையே இடையே கண்ணைப் பறிக்கும் மின்னலாவது மின்னுகிறது. ஆனல் அக்கிழவியின் உள்ளத்தில் ஒரே கும்மிருட்டுத் தான்.

"கூரை ஒழுகுகிறது. கூரையிலிருந்து மழைத் தண்ணீர் 'டப் டப்' என்று சொட்டுகிறது, தரை மண்தரையானதால், தண்ணீர் சொட்டும் இடங்களிலெல்லாம் குழி விழுந்திருக்கிறது. அக்குழிகளில் விழும் தண்ணீர் ததும்பித் தரை முழுவதையுமே நனைத்து விடுகிறது. தரை முழுவதுமே உட்காரப் படுக்க இடமின்றி ஈரமாகக் கிடக்கிறது. ஆனல் இதைக் காட்டிலும் ஆழமான குழிகள் கிழவியின் உள்ளத்தில் விழுந்திருக்கின்றன.

"இரவில், ஜனங்கள் தங்கள் தங்கள் வீட்டில் விளக்கு ஏற்றுகின்றனர், ஆனல் கிழவியின் வீட்டு விளக்கில் வெகு நாட்களுக்கு முன்பே எண்ணெய் தீர்ந்து விட்டது. திரி அவளது வரண்ட தலைமயிரைப்போன்று உலர்ந்திருக்கிறது.

"அவளது வீட்டில் அடுப்புப் பற்றவைத்து எத்தனையோநாட்கள் ஆகிவிட்டன. அங்கே சிலந்திப் பூச்சிகள் வலை கட்டிக் குடித்தனம் செய்கின்றன. அவளது வீட்டிலிருந்து எலிகள் கூட அவள் வீட்டில் உணவுப் பஞ்சத்தைக்கண்டு குடித்தனம் மாற்றி விட்டன. வௌவால்கள் இங்குமங்கும் பறந்து கொண்டிருக்கின்றன.

கிழவியின் முகத்தில் விழுந்துள்ள சுருக்கங்கள், காலதேவனின் சுவட்டுக்கு அடையாளமாக விளங்குகின்றன."

ஆஹா! எவ்வளவு அழகான கவிதை! துர்ப்பாக்கியவதியின் குடும்பசித்திரம் அல்லவா இது! என்ன பாவம்! கவிதையில் தான் என்னஉயிர்! உள்ளத்தை அப்படியே கவருகிறதே!

தர்பாரில் "சபாஷ்! சபாஷ்!" என்ற சப்தம் எங்கும் எதிரொலித்தது. கவிதையைக்கேட்ட யுவ ஸந்யாஸிமட்டும் பேசாமல் இருந்தார். சக்ரவர்த்தி ஒருதடவை ஸந்யாஸியைப் பார்த்தார்.

"மகாராஜா, உங்களுடைய கவிதை மிகவும் நன்ருயிருக்கிறது; பாவம் ததும்பியிருக்கிறது. ஆனல்......'(என்று ஆரம்பித்தார் ஸந்யாஸி.

தர்பாரில் இருந்த மந்திரி—பிரதானிகள் எல்லாருடைய கண்களும் ஸந்யாஸியின் பக்கம் திரும்பின.

"ஆனல் நீங்கள் ஒரு சக்ரவர்த்தியின் புதல்வராக இருக்க முடியாது. காசில்லாத கபோதியான ஓர் ஏழையின் பிள்ளையாகத் தான் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது" என்று முடித்தார் ஸந்யாஸி.

இதைக்கேட்ட தர்பாரில் உள்ளவர்கள் அனைவரும் பிரமித்துப்போய்விட்டனர். சக்ரவர்த்தியின் கண்கள் நெருப்புப் பொறியைக் கக்கின. அவர் கையைக் கத்தியின் உறையில் வைத்த வண்ணம், "டேய்" மூட ஸந்யாஸி! நீ என்னை அவமானப்படுத்துவதா? நீ என்னை நிந்திப்பதா?" என்று கடுமையாகக் கேட்டார்.

"ஆனல்—நீங்கள் அரசரின் பிள்ளையாயிருந்திர்களானல், இந்தக் கவிதையை எழுதியிருக்கமுடியாதே! எப்படிஎழுதினீர்கள்? சக்ரவர்த்திக்கு ஏழையின் நிலைமை எப்படித் தெரிந்திருக்க முடியும்?" என்று சிறிதும் பயமின்றித் தய்ங்காமல் கேட்டார் யுவ ஸந்யாஸி.

சக்ரவர்த்தி அதே கடுமையான குரலில், "காவிய—கற்பனை மூலம் கவி, மற்றவர்கள் பிரத்யக்ஷமாகக் — கண்கூடாகக் காண முடியாத விஷயங்களைக்கூட காணச்சக்தியுள்ளவன் என்று உனக்குத் தெரியாதா?" என்ருர்.

ஸந்யாஸி புன்முறுவலுடன், "கவியரசே! நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மையே! நீங்கள் சக்ரவர்த்தியின் புதல்வனக இருந்து கொண்டு காவியக்கற்பனையின் மூலம் ஏழைகளின் குடிசையிலிருக்கும் உண்மை நிலையைப் பார்க்க முடிகிறதல்லவா, அதே போல உங்களுடைய கன்னிப்பெண், ஆண் பெண்களின் காதற் கேளிக்கைகளை மட்டும் ஏன் காணமுடியாது என்று நினைக்கிறீர்கள்? நேற்று நீங்கள் என்னை அதற்குத் தானே சந்தேகத்துடன் பார்த்தீர்கள்? உங்கள் கண்கள் அதற்காகத்தானே சிவந்துவிட்டன? ஸந்யாஸியின் இந்திரியங்கள் அவனுடைய வசத்தில் இல்லை என்றுகூட எண்ணினீர்களே! இப்பொழுதும் தைரியமாக நான் சொல்லுகிறேன். நான் முன் போலவே அதே ஸந்யாஸிதான். எனக்கு உலகத்தில் உள்ள பெண்கள் அனைவரும் என் பெண்களுக்குச் சமமே. என் கண்கள் எந்தப்பெண்ணையும் கெட்டநோக்கத்துடன் பார்க்காது" என்று கூறிவிட்டு, தர்பாரிலிருந்து வெகு வேகமாக வெளியே சென்று விட்டார்.

ஹர்ஷ சக்ரவர்த்தியின் கண்கள், போகும் ஸந்யாஸியையே உற்று நோக்கிக்கொண்டிருந்தன.

(ஸ்ரீ ஸுதர்சன் எழுதிய ஹிந்திக்கதையைத்தழுவியது.)

198074

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.



ஒரு புராதன வைத்யம்

இவ்விதமாகவே நல்ல செய்தி
கள் பரவுகின்றன. உட்வர்ட்ஸ்
கிரைப் வாட்டர் குழந்தைகளை
- நன்கு பாதுகாக்கிறது. -




# WOODWARD'S
## GRIPE WATER

*keeps baby well*

J-WW111-111 W. WOODWARD LTD. LONDON. ENGLAND

Agent:— **T. T. KRISHNAMACHARI & CO.**
12A Linga Chetty Street :: G. T. MADRAS

Regd. No. M. 4405 Cauveri




— டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை —

தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல் அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு
— அகமகிழ்கிறாள் —

இம் மகிழ்ச்சியை நீங்களும்
- எளிதில் அடையலாம் -

டி. எஸ். ஆர்.

**கோகுல் கூந்தல் தைலம்**

**சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம்**

இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை!

மதராஸ் ஸிடி ஏஜண்டு **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

**T. S. R. & CO.** PERFUMERS KUMBAKONAM


Cauveri Colour Press, Kumbakonam.